CONNEMARA PUBLIC LIBRARY
4 - NOV 1961
MADRAS

திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

மாலை 4] பிலவ - ஐப்பசி [மணி 2
நவம்பர் 1961

ரதி

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு

பொருளடக்கம்

1. தேவூர்
2. சிறுபுலியூர்
3. நன்னிலத்துப் பெருங்கோயில்
4. திருத்திலைதைட்பதி
5. கந்தர் சஷ்டி
6. திருநாவுக்கரசு நாயனர்
7. திருப்புறம்பயம் கல்வெட்டு வரலாறு
8. திருச்சிக்கல்
9. மலைநாட்டுத் திருப்பதி அநுபவம்
10. திருக்குறுங்குடி
11. சிவஞான போதம்
12. அண்ணமலையார் தீபம்
13. மதுரை நிகழ்ச்சிகள்
14. நால்வர் நான்மணி மாலை

திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,

நுங்கம்பாக்கம் ஹைரோடு,

சென்னை-34.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 4] பிலவ ஐப்பசி - நவம்பர் 1961 [மணி 2

தேவூர்

பண்ணி லாவிய மொழியுமை
பங்கனெம் பெருமான்
விண்ணில் வானவர் கோன்விம
லன்விடை யூர்தி
தெண்ணி லாமதி தவழ்தரு
மாளிகைத் தேவூ
ரண்ணல் சேவடி யடைந்தன
மல்லலொன் றிலமே

—திருஞானசம்பந்தர்

"வானிடத்தவரும் மண்ணில் வந்து அரன்தனை யருச்சிப்பர்" என்ற திருவாக்கிற்கிணங்க தேவர்கள் பூவுலகில் உள்ள பல தலங்களுக்கு வந்து இறைவனை வணங்கியதாகப் புராணங்கள் கூறும். அத்தகைய பதிகளுள் ஒன்று தேவூர். இது தேவாரப் பாடல்பெற்ற சிவத்தலம். தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினம் பகுதியிலிருக்கிறது. திருவாரூர் - நாகூர் இருப்புப்பாதையில் கீழ்வேளூர் என்ற நிலையத்துக்குத் தெற்கே இரண்டுகல் தொலைவில் தேவூர் இருக்கிறது. கீழ்வேளூரிலிருந்து மன்னார்குடி, பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி முதலிய ஊர்களுக்கு இவ்வூர் வழியாகப் பஸ்கள் செல்கின்றன. இத்தலத்தைக் கதலிவனம், விராடபுரம், அரசங்காடு என்ற பெயர்களாலும் அழைப்பதுண்டு. திருப்புகழில் தேவனூர் என்று கூறப்பட்டிருக்கிறது. கடுகையாற்றின் தென்கரையிலுள்ளது.

தேவூர் அழகிய சிற்றூர். ஊருக்கு நடுவில் திருக்கோயில் அமைந்திருக்கிறது. கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக் கோயில்களில் இது ஒன்று என்று கூறப்படும். கிழக்குத் திருவாயிலில் கோபுரம் உண்டு. இரண்டு பிரகாரங்கள்—ஒன்று நிலப்பரப்பிலும், மற்றொன்று கட்டுமலைக் கோயில் மேலுமாக இருக்கின்றன. கோயிலுக்கு வெளியே கோபுரவாயிலுக்கு வடபுறம் வசந்தமண்டபம் இருக்கிறது. கட்டுமலையேறும்படிகளின் இருமருங்கும் விநாயகரும் முருகனும் எழுந்தருளி யுள்ளனர். அதற்கு வடக்கே இந்திரன் வழிபட்ட இந்திர லிங்கம் உள்ளது. இதை இந்திரேச்சுவரம் என்பர். கட்டுமலையின்மேலே ஏறியதும் நேரே சோமாஸ்கந்தமூர்த்தி காட்சியளிக்கிறார். அதற்கு வடக்கே மூலஸ்தானத்தில் தேனுபுரீசர் எழுந்தருளியிருக்கிறார். இம்மூர்த்திக்கு, தேவபுரீசர், தேவகுருநாதர், கதலிவனேசுவரர் என்ற திருப்பெயர்களும் உண்டு.

இத்தலவிருட்சமான வாழை கட்டுமலைமேல் இருக்கிறது. இது இம்மலையில் சிறு இடத்தில் அழியாது விளைந்துகொண்டு இருப்பது மிக ஆச்சரியமானது. இந்த வாழையை எடுத்து வேறு இடத்தில் வைத்தால் பயிராகிறதில்லையென்று சொல்லப்படுகிறது. வாழைமரத்தைத் தலவிருட்சமாகவுடைய மற்ற தலங்கள் திருமருகல், திருப்பைஞ்ஞீலி ஆகியவை.

கோயிலின் தென்பிரகாரத்தில் அறுபத்துமூவர் சந்நிதியும், தென்மேற்கு மூலையில் வலம்புரிவிநாயகர் திருக்கோயிலும் உள்ளன. கட்டுமலைக்கு வடமேற்குப் பாகத்தில் முருகப்பெருமான், இலட்சுமி சந்நிதிகளும் இருக்கின்றன. அதற்கு அருகே அகலிகை வழிபட்ட இலிங்கம் இருக்கிறது. எதிரே மேற்கு நோக்கிய சந்நிதியுடன் செய்குன்றின் மேல் கௌதமலிங்கம் உள்ளது. இவற்றிற்கெல்லாம் வடபுறத்தேதான் அம்பிகையின் திருக்கோயிலிருக்கிறது. தேவியின் திருநாமங்கள் தேன்மொழியம்பிகை, மதுரபாஷிணியம்மை என்பன. வடக்குப் பிரகாரத்தில் நடராஜர் சந்நிதியும், நவக்கிரகங்களும் இருக்கின்றன.

தலபுராணத்தில் இப்பதிக்கு ஒன்பது தீர்த்தங்கள் உள்ளனவாகக் கூறப்படுகிறது. தேவதீர்த்தம் கோயிலுக்குத் தென்கிழக்கு மூலையிலுள்ளது. வருணதீர்த்தம், உத்தர தீர்த்தம், பிரகஸ்பதி தீர்த்தம், கௌதம புஷ்கரணி, மிருதசஞ்சீவினி முதலியவை மற்ற தீர்த்தங்கள். வைகாசி மாதத்தில் பெருவிழா நடைபெறுகின்றது.

ஏழாம் நூற்றாண்டில் விளங்கிய திருஞானசம்பந்தர் இப்பதிக்கெழுந்தருளி இறைவன்மேல் இரண்டு பதிகங்கள் பாடியருளினார். "தென் தமிழ்க்கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர்" என்றும், "சங்கமலி செந்தமிழ்கள் பத்து" என்றும் கூறுவதால் தமிழறிஞர் பலர் இவ்வூரிலிருந்திருக்கலாம் என்று தெரிகிறது. அப்பரும் சில பாடல்களில் திருத்தேவூரினைக் குறிப்பிடுகின்றார். அருணகிரிநாதர் இத்தலத்து முருகப்பெருமானை மூன்று திருப்புகழ்ப் பாடல்களால் போற்றியிருக்கின்றார். மற்றொரு பாடலிலும் இப்பதியைக் குறிக்கிறார். தேவனூர் என்று தலத்தின் பெயரைக் கூறுகிறார். "தேவர் யாவரும் திரண்டு பாரின்மீது வந்திறைஞ்சு தேவனூர் விளங்கவந்த பெருமாளே", "சேரொணவகை வெளியே திரியு மெய்ஞ் ஞானயோகிகளுளமே யுறைதரு தேவனூர் வருகுமார வமரர்கள் தம்பிரானே" என்பவை அவருடைய திருவாக்குகள். மாணிக்கவாசகர்,

தேவூர்த் தென்பாற் றிகழ்தருதீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்,

என்று கீர்த்தித் திருவகவலில் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார். வடலூர் - இராமலிங்க அடிகள்;

....................நீருவகைப்
பாவூ ரிசையிற் பயன்சுவையிற் பாங்குடைய
தேவூர் வளர்தேவ தேவனே

என்று கூறியிருக்கிறார்.

தேவபுரிமான்மியம் என்ற நூல் வடமொழியில் தமிழ் மொழி பெயர்ப்புடன் ஏட்டுச்சுவடியாக இருக்கிறது; அச்சாகவில்லை. இது, பிரம்மகைவர்த்த புராணம், மேல்பாகம், க்ஷேத்திரகாண்டம், தேவபுரி மான்மியத்தில் ஐந்தெழுத்துப் புகழ்ச்சியென்னும் எண்பத்தேழாவது அத்தியாயத்தில் உள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. தமிழில் உரை நடையாகவும் தலபுராணம் இருக்கிறது; அதுவும் அச்சேறவில்லை. தேவர்கள் இங்கு சிவபெருமானை வழிபட்டது, இந்திரன் விருத்தனைக் கொன்ற பாவம் கழிய இறைவனைப்பூசித்தது, குபேரன் இராவணன் கவர்ந்த சங்கநிதியை மீண்டும் பெறத் தவம்கிடந்தது, விராடன் உத்திரன் இவர்கள் வணங்கியது, கௌதமர் இலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து இறைவனை வழிபட்டுப் பஞ்சம் போக்கியது, பசுவொன்றின் கன்று இறந்துபோக பெருமான் தாய்ப்பசு உருக்கொண்டு பாலூட்டி வளர்த்தது முதலியவற்றைப்பற்றி அத்தல புராணம் விரிவாகக் கூறுகிறது.

இக்கோயில் கட்டுமலையின் தென்புறம் வடபுறச் சுவர்களில் இரண்டு தமிழ்க் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. ஒன்று, ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தர பாண்டியன் III (கி. பி. 1276-90) காலத்தது. கோயிலுக்கு நிலதானம் செய்ததை அறிவிக்கிறது. அருள்மொழித்தேவ வளநாட்டுத் தேவூர் நாட்டுத் தேவூரிலிருக்கும் ஆதித்தேசுவரமுடையார் கோயில் என்று குறிக்கிறது. மற்றொரு கல்வெட்டு, விஜய நகர மன்னரான இரண்டாம் தேவராய மகாராயர் காலத்தில் கி. பி. 1425-ல் பொறிக்கப்பெற்றது.

இவ்வூரில், உத்தரேச முடையார் கோயில், பசுபதீசுவரர் கோயில், தேவநாராயணப் பெருமாள் கோயில், வெண்மணி ஐயனார் கோயில், மாரியம்மன் கோயில் முதலியனவும் இருக்கின்றன.

சிறுபுலியூர்

கருமா முகிலுருவா கனலுருவா புனலுருவா
பெருமால் வரையுருவா பிறவுருவா நினதுருவா
திருமா மகள்மருவும் சிறுபுலியூர்ச் சலசயனத்து
அருமா கடலமுதே உனதடியே சரணமே

—திருமங்கையாழ்வார்

புலியூர் என்று முடியும் சில சிவவிஷ்ணுத் தலங்கள் இருக்கின்றன. பெரும்பற்றப்புலியூர், பெரும்புலியூர், திருப்பாதிரிப் புலியூர், எருக்கத்தம்புலியூர், ஓமாம்புலியூர், திருப்புலியூர் முதலியவை அத்தகையன. புலிக்கால் முனிவர் (வியாக்கிரபாதர்) வழிபட்டதால் இத்தலங்களுக்கு அப்பெயர் ஏற்பட்டது. சிறுபுலியூர் என்ற வைணவப்பதி தஞ்சைமாவட்டத்தில் நன்னிலம் பகுதியில் இருக்கிறது. மாயூரம்-திருவாரூர் இருப்புப் பாதையில் கொலுமாங்குடி நிலையத்திலிருந்து கிழக்கே ஒரு கல் தொலைவிலிருக்கிறது. மாயூரம்-திருவாரூர் நெடுஞ்சாலையிலிருந்து அரைகல் தூரமிருக்கும். கும்பகோணமிருந்து காரைக்கால் செல்லும் பஸ்கள் இவ்வூருக்குத் தெற்கே சற்று தூரத்தில் போகின்றன. பால வியாக்கிரபுரம் என்ற பெயரும் இப்பதிக்கு உண்டு.

"அறையும் புனல் ஒருபால், வயல் ஒருபால், பொழில் ஒருபால்" என்று ஆழ்வார் அருளியிருக்கிறதற்கிணங்க வாவி, வயல், சோலை சூழ்ந்துள்ளது இவ்வூர். அதற்கு நடுநாயகமாய்த் திகழ்வது கோயில். அது தெற்கு நோக்கியிருக்கிறது. இரண்டு பிரகாரங்கள் உள்ளன. முதல் வாயிலில் எழுநிலை மாடக்கோபுரம் ஒன்று எழில்படநின்று காட்சியளிக்கிறது. முதல் வாயிலைக்கடந்து சென்றதும் தெற்கே கிழக்கு நோக்கிய ஆண்டாள் சந்நிதியும், வடக்கே நாலுகால் மண்டபமும் காணப்படுகின்றன. உட்பிரகாரம் செல்வதற்கு இரண்டாவது வாயிலைக் கடக்க வேண்டும். அவ்வாயிலையும் மூன்று மாடங்களுடைய சிறு கோபுரம் அணி செய்கிறது. மேற்கு உட்பிரகாரத்தில் பள்ளியறையும், இராஜகோபாலர் சந்நிதியும், கிழக்கு உட்பிரகாரத்தின் தென் கோடியில் சொர்க்கவாசலும் இருக்கின்றன. மூலஸ்தானத்தில் எம்பெருமான் தெற்கே திருமுக மண்டலத்துடன் சயனத்திருக்கோலத்தில் பக்தகோடிகளுக்குச் சேவை சாதிக்கிறார். பள்ளிகொண்டிருப்பதைப் பாலசயனம், புஜங்கசயனம் என்பர். பெருமாளின் விமானம் நந்தவர்த்தன விமானம் எனப்படும். மூலவருக்கு அருமாகடலமுதன் என்ற பெயரும், உற்சவருக்கு கிருபா சமுத்திரப் பெருமாள், சரணாகதரட்சகர் என்ற பெயர்களும் வழங்குகின்றன. வடக்கு வெளிப் பிரகாரத்தில் தாயார் சந்நிதி கிழக்கு நோக்கியிருக்கிறது. மூலவர் தேவியாருக்கு திருமாமகள் நாச்சியார் என்றும், உற்சவருக்கு தயாநாயகி என்றும் திருநாமங்கள். கிழக்கு வெளிப்பிரகாரத்தில் ஆழ்வார்கள் சந்நிதி இருக்கிறது. கோயிலின் கோஷ்டத்தில் கணபதியும், துர்க்கையும் எழுந்தருளியிருக்கின்றனர்.

கோயிலுக்கு வெளியே கோபுரவாயிலுக்குக் கீழ்ப்பக்கம் மணவாள மாமுனிகளின் தனிக் கோயில் இருக்கிறது. இப்பதியைச் சார்ந்தவை இரண்டு தீர்த்தங்கள். அனந்த சரசு என்ற குளம் மேல வீதிக்கு மேற்புறம் இருக்கிறது. அதன் கரையில் திருஅனந்தாழ்வான் கோயில் இருக்கிறது. ஐந்து தலை நாகங்களுடைய மூர்த்தி எழுந்தருளியிருக்கிறார். மற்றொரு தீர்த்தமாகிய மானசபுஷ்கரிணி கோயிலுக்குக் கிழக்கேயிருக்கிறது. தலவிருட்சம் வில்வமரம். ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் பெருந் திருவிழா நடைபெறுகிறது. மாசி மாதம் வளர்பிறை ஏகாதசியில் அனந்தாழ்வானுக்குப் பெருமாள் சேவை சாதித்தருளும் திருவிழாவும் முக்கியமானது.

4 - NOV 1961

நன்னிலத்துப் பெருங்கோயில்

வலங்கிளர் மாதவஞ்செய்
மலைமங்கையோர் பங்கினனுய்ச்
சலங்கிளர் கங்கைதங்கச்
சடையொன்றிடை யேதரித்தான்
பலங்கிளர் பைம்பொழில்தண்
பனிவெண்மதி யைத்தடவ
நலங்கிளர் நன்னிலத்துப்
பெருங்கோயில் நயந்தவனே.

—சுந்தரர்.

தஞ்சைமா வட்டத்திலே நன்னிலத்துப் பகுதிக்குத் தலைமையிடம் நன்னிலம் என்ற ஊர். தேவாரப் பாடல்பெற்ற சிவப்பதிகளில் ஒன்று. மாயூரம்-அறந்தாங்கி இருப்புப்பாதையில் நன்னிலம் என்று ஒரு நிலையமுண்டு. அதிலிருந்து மேற்கே மூன்று கல் தொலைவில் ஊரும் திருக்கோயிலும் இருக்கின்றன. திருவாரூர், மாயூரம், கும்பகோணம், நாகை, திருத்துறைப்பூண்டி முதலியவற்றிற்கு இவ்வூர் வழியாகப் பஸ்கள் போகின்றன. இத்தலத்திற்கு நன்னிலத்துப் பெருங்கோயில், மதுவனம், பிருகத்புரம், சுந்தராவனி, தேவாரண்யம் என்ற பெயர்கள் உண்டு.

கோச்செங்கட்சோழன் எழுப்பிய மாடக்கோயில்களில் இதுவும் ஒன்றுகக்கூறப்படுகிறது. கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. வாயிலின்மேல் பஞ்சமூர்த்திகள், சுந்தரர் முதலிய சுதைச்சிற்பங்கள் அற்புதக் காட்சியளிக்கின்றன. கோயிலில் கீழே ஒரு பிரகாரமும், கட்டுமலைக் கோயில் மேல் ஒரு பிரகாரமும் இருக்கின்றன. மேற்குக் கீழ்ப் பிரகாரத்தில் விநாயகர், முருகன், கஜலட்சுமி சந்நிதிகள் இருக்கின்றன. கட்டுமலைமேல் ஏறியவுடன் நேரே வாதாபி கணபதி சந்நிதியிருக்கிறது. மூலஸ்தானத்தில் சுயம்புமூர்த்தியான மதுவனேசுவரர் எழுந்தருளியிருக்கிருர். பிரகேசுவரர் என்ற பெயரும் அவருக்கு உண்டு. மூலஸ்தானத்தின் தென்புறம் சோமாஸ்கந்தமூர்த்தி எழுந்தருளியிருக்கிருர். கட்டுமலையின் முன்புறம் கீழே கிழக்கு நோக்கி அகஸ்தியலிங்கம், பிரமலிங்கம் சந்நிதிகள் உள்ளன. வடகிழக்குப் பிரகாரத்தில் அம்பிகையின் திருக்கோயில் காணப்படும். தேவியின் திருப்பெயர்கள் மதுவனநாயகி. பிரகேசுவரி என்பன.

கோயிலுக்கு வெளியிலுள்ள திருக்குளத்துக்கு மதுதீர்த்தம், தேவதீர்த்தம், தலசயனம், வடசயனம், சலசயனம் என்ற மூன்று முக்கிய தலங்களுள், சிறுபுலியூராகிய இத்தலம் சலசயனப் பதியாகும். கிருஷ்ணுரண்ய க்ஷேத்திரங்களுள் ஒன்றென்பர். கண்ணுவ முனிவருக்கும், புலிக்கால் முனிவருக்கும் பாலசயனமாய் எம்பெருமான் காட்சியளித்தார். பாலசயன மூர்த்தியின் திருவடிகளில் இரண்டு முனிவர்களும் வீற்றிருக்கின்றனர். சூரியன், அனந்தன், துர்வாசர், மணவாளமாமுனிகள் முதலியோர் இத்தலத்து இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றனர்.

இத்தலத்து எம்பெருமான்மீது திருமங்கையாழ்வார் பத்துப் பாசுரங்களைப் பணித்தருளியிருக்கின்ருர். சிறுபுலியூர்ச் சலசயனம் என்று பதியின் பெயரை எல்லா பாடல்களிலும் குறிக்கிருர். ஒரு பாடலில் "திருமாமகள் மருவும் சிறுபுலியூர்ச் சலசயனத்து அருமா கடலமுதே" என்று இறைவன் இறைவி இருவர் திருநாமங்களை ஒருங்கே கூறியருளுகிருர்.

ஆமருவி மேய்த்த அரங்கரெதிர் ஆர்நிற்பார்
தாமருவி வாணனைத்தோள் சாய்த்தநாள்—சேமம்
உறுபுலியூர் வன்ரேல் உடையான் உடைந்தான்
சிறுபுலியூர் எந்தைமேற் சென்று

—பிள்ளைப்பெருமாளையங்கார்

சூலதீர்த்தம் என்ற பெயர்கள் சொல்லப்படுகின்றன. கிழக்கில் சற்று தூரத்திலுள்ள சக்கரதீர்த்தத்தைச் சக்கரகுளம் என்று கூறுகின்றனர். கோங்கு, வேங்கை, மாதவி, செண்பகம், நொச்சி இவைகளைத் தலவிருட்சங்களெனக் கூறுகின்றனர். வைகாசியில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. கோயிலில் நாள்தோறும் நாலுகால பூசை. ஞாயிற்றுக் கிழமைதோறும் வார வழிபாடு நிகழ்கிறது.

சுந்தரமூர்த்திசுவாமிகள் இத்தலத்து இறைவன் புகழை ஒரு பதிகத்தில் ஓதியருளியிருக்கின்றார். ஒரு பாடலில், "கோடுயர் வெங்களிற்றுத்திகழ் கோச்செங்கணான் செய்கோயில் நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில்" என்று கோச்செங்கட்சோழன் நன்னிலத்து மாடக்கோயிலைக் கட்டியதைக் குறிப்பிடுகின்றார். **திருநாவுக்கரசர்**, க்ஷேத்திரக் கோவையில் "நெடுங்களம் **நன்னிலம்** நெல்லிக் காவும்' என்று கூறியிருக்கின்றார். **மதுவன மகாத்மியம்** என்ற ஆறு அத்தியாயங்களுடைய உரைநடை நூல் ஒன்றும் இத்தலத்தின் பெருமையைக் கூறுகிறது. தேவர்கள் தேனீக்கள் உருவம் எடுத்து இறைவனை இத்தலத்தில் வழிபட்டதாகச் சொல்லப்படுகிறது. இதற்கு ஆதாரமாக இப்போது முருகப்பெருமான் சந்நிதியிலிருக்கும் தேன் கூட்டைக் காட்டுகின்றனர். இதற்கு முன்னால் தேனடை நடராஜர் சந்நிதியிலிருந்ததாகக் கூறுகின்றனர்.

கைவல்லிய நவநீதம் என்ற அரிய நூலை இயற்றிய **தாண்டவராயசுவாமிகள்** நன்னிலத்தில்தான் தோன்றியவர். சான்றோர் கடமை உலகத்திற்கு உதவுதலே யென்பதை அவர், "நல்லவனே கேள் உலகுபகாரஞ் செய்வதே ஞானிகள் விவகாரம்" என்று கூறுகின்றார். அவருடைய நூலின் முதல் வாழ்த்துப்பாடல் கீழ் வருவது :—

பொன்னில மாதராசை பொருந்தினர்
　　பொருந்தார் உள்ளம்
தன்னிலந் தரத்திற்சீவ சாட்சிமாத்
　　திரமாய் நிற்கும்
என்னிலங் களினுமிக்க எழுநிலம்
　　அவற்றின் மேலாம்
நன்னிலம் மருவும்ஏக நாயகன்
　　பதங்கள் போற்றி.

இந்தப் பழம்பெருமை வாய்ந்த கோயில் திருப்பணி செய்யப்பெற்று 14—9—1959-ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கொடுங்கோளூ ரஞ்சைக் களஞ்செங் குன்றூர்
　　கொங்கணங் குன்றியூர் குரக்குக் காவும்
நெடுங்களம் நன்னிலம் நெல்லிக் காவும்
　　நின்றியூர் நீடூர் நியம நல்லூர்
இடும்பா வனமெழுமூர் ஏமூர் தோமூர்
　　எறும்பியூர் ஏராரு மேம கூடங்
கடம்பை யிளங்கோயில் தன்னி லுள்ளுங்
　　கயிலாய நாதனையே காணலாமே

—திருநாவுக்கரசர்.



திருவண்ணாமலைக் கோயில் தோற்றம்

திருத்திலதைப்பதி

பொடிகள்பூசிப் பலதொண்டர்
கூடிப் புலர்காலையே
அடிகளாரத் தொழுதேத்த
நின்றவ் அழகன்னிடம்
கொடிகளோங்கிக் குலவும்
விழவார் திலதைப்பதி
வடிகொள்சோலைம் மலர்
மணங்கமழும் மதிமுத்தமே.

—திருஞானசம்பந்தர்.

திருத்திலதைப்பதி தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலம். இது மாயூரம்—அறந்தாங்கி இருப்புப்பாதையில் பூந்தோட்டம் என்ற நிலையத்திலிருந்து மேற்கே ஒன்றரைக் கல் தொலைவிலிருக்கிறது. வண்டிகளில் சென்றே இதை யடையமுடியும். முக்கால் கல் தூரத்தில் சிதலைப்பதி என்ற ஊர் இருக்கிறது. கோயில் தனியே அரிசிலாற்றின் தென்கரையில் இருக்கிறது. திலதர்ப்பணபுரி, மதிமுத்தம், மந்தாரவனம், பிரமநாயகம், ஹரிக்ஷேத்திரம் என்ற பெயர்களும் இப்பதிக்கு உண்டு.

திருக்கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. கிழக்கில் ஒரு திருவாயில்தான். கோபுரமில்லை. ஒரே பிரகாரமுடைய சிறு கோயில். மூலஸ்தானத்தில் முத்தீசுவரர் கிழக்குநோக்கி யெழுந்தருளியுள்ளார். மதிமுத்தநாதேசுவரர் என்ற பெயரும் உண்டு. மேற்குப் பிரகாரத்தில் மூலவிநாயகர், நான்கு பிதுர் இலிங்கங்கள், முருகப்பெருமான், விசுவநாதர், இலட்சுமி முதலியோர் சந்நிதிகள் உள்ளன. பிதுர்இலிங்கங்களுக்கு முன்புறம் இராமலட்சுமணர்களின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. தசரதச் சக்கரவர்த்திக்கும், ஜடாயுவுக்கும் இவ்விடத்தில் இராமலட்சுமணர்கள் பிதுர்க்கடன் செய்தார்களென்றும் அதனுல் திலதர்ப்பணபுரி என்ற பெயர் உண்டாயிற்றென்றும் கூறப்படுகிறது. இராமர் மீசையுடன் காணப்படுகிறுர். காசி சித்தோசிமன்னன் இங்கு தர்ப்பணம் செய்ததாகவும் கூறுகின்றனர். மீசையுடன் உள்ள உருவம் அவ்வரசனுடையதாக இருக்கலாமோ எனக்கொள்ள இடமிருக்கிறது.

வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுவரர், மந்தாரவனேசுவரர் சந்நிதிகளும் இருக்கின்றன. வடகிழக்கு மூலையில் நவக்கிரகம், நால்வர், பைரவர், சூரியன், சந்திரன், திருமால், சிதேவி, பூதேவி முதலியவர்கள் எழுந்தருளியுள்ளனர். அம்பிகையின் தனிச் சந்நிதி தெற்கு நோக்கியிருக்கிறது. தேவியின் திருப்பெயர்கள் சுவர்ணவல்லி, பொற்கொடியம்மை என்பன.

இத்தலவிருட்சம் மந்தாரம். இது வடக்குப் பிரகாரத்தில் இருக்கிறது. கோயிலுக்குத் தென்கிழக்கிலுள்ள திருக்குளம் சந்திர தீர்த்தம். வடக்கே ஓடும் அரிசிலாறும் ஒரு தீர்த்தம். ஆடி அமாவாசை, தை அமாவாசை இரண்டு நாட்களிலும் இறைவன் ஆற்றுக்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுப்பர். கோயிலில் நாள்தோறும் நாலுகால பூசை நடக்கிறது.

திருஞானசம்பந்தர் இத்தலத்துப் பெருமான்மீது ஒரு பதிகம் பாடியருளியிருக்கின்றனர். "திலதை மதிமுத்தமே" என்று ஒருபாடலில் கூறுகிறுர். "அரிசில் சூழ்ந்த திலதைப் பதி" என்று அரிசிலாற்றையும் குறிக்கிறுர். "மடங்கல் வந்து வழிபாடு செய்யும்", "மத்த யானை வழிபாடு செய்யும் மதிமுத்தமே" என்று கூறுவதால் யானை இங்குவந்து இறைவனை வழிபட்டதாகச் சொல்லலாம். "புரவியேழும் மணிபூண்டியங்குங் கொடித் தேரினுன் பரவி நின்று வழிபாடு செய்யும் பரமேட்டியூர்" என்று கூறியிருத்தலால் சூரியனும் வழிபாடு செய்தான் என்று கொள்ள இடமுண்டு.

வடமொழியில், சைவமகாபுராணத்தில் க்ஷேத்திர காண்டத்தில் ஏகாதசருத்திர சங்கிதையில் திலதருப்பணபுரி மான்மியம் சொல்லப்பட்டிருக்கிறது, யாழ்ப்பாணம் வதிரி—சி. நாகலிங்கம் பிள்ளை என்பவர் தமிழில் செய்யுள் வடிவிலும், உரை நடையிலும் தலபுராணங்கள் இயற்றியிருக்கிறார். அச்சிடப்பெற்றிருக்கிறன. அதில், அம்பிகைப்படலம், சதுர்முகன் பூசை செய்படலம், இலக்குமி பூசை செய்படலம், நற்சோதிகன் யாத்திரைப்படலம், நற்சோதிகன் தருப்பணஞ்செய் படலம், தீர்த்தப்படலம் முதலியவை உள்ளன.

கோயில் இருபது ஆண்டுகளுக்கு முன் திருப்பணி செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. கோயிலுக்கு வெளியே வடகிழக்கே சாஸ்தா, ஆதிவிநாயகர் கோயில்களும், தெற்கே அழகநாதர் (இலிங்கமூர்த்தி) கோயிலும் இருக்கின்றன. இங்கிருந்து முக்கால் கல் கிழக்கிலுள்ள சிதலைப்பதி என்ற ஊரில் சிவன், திருமால் கோயில்கள் உள்ளன.

முத்தீசர்

மலரயன் முகுந்தன் பூமின் மாதுமை
வணங்கி யேத்தத்
திலதருப் பணப் பேர்கொண்ட திருத்தல
மதனின் மன்னி
இலகுமுத் ்நிராக்கமேனி யீசனை
யெம்மான் றன்னைக்
குலவுமுத் தீசனென்னுங் குழகனை
யேத்தி வாழ்வாம்.

சுவணவல்லியம்மை

சுரும்பமர் குழல்கள் போற்றி
சுந்தரவதனம் போற்றி
அரும்புபுன் முறுவல் போற்றி
யாரணற்கருள் செயம்மை
கரும்புறு பழனவேலித் திலதைக்
காஞ்ச னமாவல்லி
சிரம்பெறு பதுமநேருஞ் சேவடி
போற்றி போற்றி.

—தலபுராணம்.



திருவண்ணாமலைக் கோயில் தோற்றம்

திருக்காட்டுப்பள்ளி :—அக்கினீசுவரசுவாமி கோயிலில் நவராத்திரி விழாவை முன்னிட்டு சௌந்தரநாயகி அம்பாளுக்கு 10—10—61 முதல்19—10—61 முடிய இலட்சார்ச்சனையும், விசயதசமி அன்று சுவாமிக்கு பஞ்சமுகார்ச்சனையும் நடைபெற்றன.

மன்னார்குடி :—இராஜகோபால்சுவாமி கோயிலில் மகா சம்புரோக்ஷண 2-ஆவது ஆண்டு நிறைவுவிழாவன்று "ஏகதின லட்சார்ச்சனை" 30—10—61ல் நடைபெற்றன.

கந்தர் சஷ்டி

நம்நாட்டில் மக்கள் பற்பல விரதங்களை மேற்கொள்ளுகின்றனர். அவைகளுள் சைவர்கள் முக்கியமாக அனுஷ்டிப்பவை விநாயக சதுர்த்தி, நவராத்திரி (சரஸ்வதி பூஜை), கந்த சஷ்டி, சிவராத்திரி என்பன. இவை முறையே கணபதி, அம்பிகை, முருகன், சிவபெருமான் குறித்து செய்யப்படுபவை. இந்த விரதங்களை முன்னிட்டு சிவாலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

முருகப்பெருமானுக்குரிய விரதங்களை மூன்று வகையாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அவை வார விரதம், நட்சத்திர விரதம், திதிவிரதம் என்பன.

ஒவ்வொரு வாரத்திலும் வரும் வெள்ளிக்கிழமையன்று முருகப்பெருமானை வழிபட்டு விரதமிருப்பது வாரவிரதம். ஒவ்வொரு மாதத்திலும் வருகிற கார்த்திகை நட்சத்திரத்தன்று அனுஷ்டிப்பது நட்சத்திர விரதம். திதி விரதமாவது ஐப்பசி மாதத்தில் வரும் வளர்பிறைச் சஷ்டியன்று மேற்கொள்வது. முருகப்பெருமான் சூரபன்பனை அழித்த நாள் இந்த நாள்தான்.

ஐப்பசி மாதம் வளர்பிறைச் சஷ்டியைக் கடைசி நாளாகக் கொண்டு திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இந்த நாளில்தான் விழாவை நடத்தவேண்டுமென்பதை ஸ்கந்த தோத்சவ விதிப் படலத்திலும், கௌசிகப் பிரச்ன குமார தந்திரத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

சைவர்கள் பொதுவாக ஒவ்வொரு மாதத்திலும் வருகிற வளர்பிறைச் சஷ்டியிலும், கார்த்திகை நட்சத்திரத்திலும் உபவாசமிருக்கின்றனர். சிறப்பாக ஐப்பசிமாதக் கந்த சஷ்டியில் ஆறு நாட்கள் உணவருந்தாதிருந்து விரதத்தை அனுஷ்டிக்கின்றனர். இந்த ஆறு நாட்களிலும் முருகன் புகழ்நூல்களான திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்த சஷ்டிக் கவசம் முதலிய நூல்களை ஆசாரத்துடன் ஓதிவரும் வழக்கமும் நம் நாட்டில் இருந்து வருகின்றது. இதுவன்றி கந்தபுராணம், கந்தபுராணச் சுருக்கம் இவைகளையும் பெரியோர்கள் படிக்கக் கேட்டும், தாமே படித்தும் விரத நாட்களைக் கழிப்பதும் உண்டு. மேற்சொன்ன எல்லாவகை விரதநாட்களிலும் மக்கள் காலையில் நீராடி நித்தியக்கடன்களை முடித்து, ஆலயம் சென்று முருகப்பெருமானை வழிபட்டால் இம்மையில் எல்லா நன்மைகளையும் பெற்று, மறுமையில் பேரானந்தப் பெருவாழ்வை அடைவார்கள் என்று கந்தபுராணம் கூறுகிறது. ஒருவர், புலவர் ஒருவரைப் பார்த்து குடம், சட்டி இவைகளை வைத்து ஒரு பாடல் பாடச் சொன்னார். முருக பக்தரான புலவர் "குக்குடத்தைப் பிடித்தவன் சட்டியை நோக்கக் குறையவில்லையே" என்றுமுடியும் செய்யுளைப் பாடினார். குக்குடம் கோழி. கோழிக் கொடியைப் பிடித்த முருகனின் சஷ்டியை அனுஷ்டித்தால் ஒருகுறையும் வராதென்பது அதன் பொருள்.

கந்தபுராணம் நம்முடைய சொந்தபுராணம். நம்மிடத்தேயுள்ள சூரபன்மாதியரான ஆணவ கன்ம மாயா மலங்களில் உழன்று அல்லற் படாமல் அவைகளினின்றும் விடுபட்டு வீடடைய வேண்டுமென்ற தத்துவத்தையே கந்தபுராணம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆகையால் நாம் எல்லோரும் கந்தசஷ்டி விரதத்தை முறைப்படி அனுஷ்டித்து 'பரங்கருணைத் தடங்கடலான ஆறுமுகச் செவ்வேளின் திருவருளுக்குப் பாத்திரமாவோமாக.

திருநாவுக்கரசு நாயனார்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்.]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

தீயவர் இழைத்த தீங்கினைக் கடத்தல்

நீற்றறை குளிர்ந்தமை

தங்களுடன் வர இசைந்த திருநாவுக்கரசரை, அமைச்சர்கள் அழைத்துச் சென்று, நகரத்தை அடைந்து, அவரைத் தாங்கள் கொணர்ந்தமையைப் பல்லவனுக்கு அறிவித்தார்கள். பல்லவன் முறையற்ற பற்றுக் காரணமாக சீற்றத்தால் அறிவிழந்து நிற்கின்றானாகலின், அவன், திருநாவுக்கரசரைத் தன்பால் வருவித்து அவரை, அவர்மேல் சார்த்தப்பட்டுள்ள குற்றம்பற்றி யாதொன்றும் வினவாமலே அவரை ஒறுக்க முடிவு செய்துவிட்டான். அதனால், அவன், சமண முனிவர்களை வருவித்து, 'அடிகண்மீர், தருமசேனன் கொணரப்பட்டுவிட்டான்; இனி, அவனை இன்னது செய்தல் வேண்டும் என்பதைச் சொல்லிவிடுங்கள்; யான் அதனை இப்பொழுதே நிறைவேற்றுகின்றேன்' என்று கூறினான். அதற்கு, அறநெறியை அறவே விடுத்து, உயிர்க்கு உறுதியை மறந்தவர்களாகிய சமணர்கள், 'நீற்றறையில் வைத்துச் சுடுவதே அக்கொடியோனுக்குரிய ஒறுப்பாகும்' என்று, சிறிதும் அஞ்சாமற் சொன்னார்கள்.

நீற்றறையாவது, சுண்ணாம்புக் கல்லைச் சுட்டு நீறாக்கும் களவாய். அதில் மக்களை வைத்துச் சுடுதல் என்பது, அக்காலத்தில், பிறரைப் பெருந்துன்பத்திற்குள்ளாக்கிய மிகக் கொடியவருக்கு ஆக்கும் ஒறுப்பாக இருந்ததென்பது செவிவழிச் செய்தியாக அறியப்படுவது. அந்தக் கொடிய தண்டனையைத் திருநாவுக்கரசருக்கு உரியதாகக் கூறினர், ஓர் உயிர்க்கும் ஒருசிறிது துன்பமும் தம்மால் உண்டாகாதவாறு நடத்தல் வேண்டும் என்னும் கொள்கையை வளர்ப்பதற்கே தங்கள் வாழ்நாளை ஒப்புவித்திருக்கும் சமண முனிவர்கள். எனவே, 'தன்னலம்' என்பது, மக்களிடையே எந்த அளவிற்குத் தலைவிரித்து ஆடுகின்றது என்பது இதனாற் புலனாகும்.

இவ்வளவு பெருங்கொடுந் தண்டனைக்கு உரியவராகுமாறு, திருநாவுக்கரசர் புரிந்த குற்றம் யாது? அவர், சமணசமயம் நல்லதென்று தமக்குத் தோன்றியபொழுது, அதிற் சேர்ந்திருந்தார்; அதில் பயனில்லை; சைவசமயமே நல்லதெனத் தோன்றிய பொழுது, அதனை விடுத்துச் சைவசமயத்தை அடைந்தார்; அதனால், அவர் பிறருக்குச் செய்த தீமை என்ன? பிறருக்கு யாதும் இடையூறின்றித் தமக்கு விருப்பமான ஒருசமயத்தில் ஒருவர் நிற்பதற்கு, ஓர் ஆட்சி இணங்கவில்லை என்றால், அது செங்கோல் ஆட்சியாகுமா? அவ்வாறு நிற்பவரைப் பெரியதொரு குற்றமுடையவராக்கி, யாதொரு கேள்வியும் முறையும் இன்றிப் பெருங்கொடுந் தண்டனையை அவ்வாட்சி விதிக்குமாயின், அதனைக் கொடுங்கோலாட்சி என்று சொல்லாமல், வேறு என்ன சொல்வது! அதனாற்றான், சேக்கிழார்,

> "அருகணைந்தார் தமைநோக்கி
> அவ்வண்ணம் செய்கஎனப்
> பெருகுசினக் கொடுங்கோலான்
> மொழிந்திடலும்"

எனக் கூறினார்.

சமண் சமயத்தில் தருமசேனராய் இருந்தவர் அதனை விடுத்துச் சைவசமயத்தை அடைந்தார் என்றால், அதனால் அவர் முன்பு இருந்த சமண சமயத்திற்கு வீழ்ச்சி உண்டாகலாம். ஆனால், அவ்வீழ்ச்சியைப் பிறசேனர்களும், அரசனும் கூடி முயன்று தடுத்து நிறுத்தல் வேண்டுமேயன்றி, விலகியவரைக் கொலைசெய்யத் துணிதல் எவ்வாறு முறையாகும்? வேண்டுமாயின், அவர், முன்பு சமணசமயத்தில் இருந்தபொழுது, அச்சமயத்தின் வளர்ச்சிக்கென அதன் ஆசிரியர் கட்கு அரசனால் அளிக்கப்பட்டிருந்த நலங்களைப் பெற்றிருந்ததன் பொருட்டுப் பொருள் கொடுக்குமாறு வற்புறுத்தலாம். அதனை ஓர் அளவு முறையுடையதென்று கூறலாம்.

அவ்வாறு வற்புறுத்தினால், வேண்டுமளவிற்கு மேலாகவே பெரும்பொருளைத் திருநாவுக்கரசர் பொருட்டு அரசனுக்குக் கொடுக்கச் சிவனடியார் பலர் முன்வந்திருப்பர். அவ்வாறெல்லாம் இல்லாமல், அவருக்குக் கொலையையே சூழ்ந்தது, அவர்களது முறையற்ற கொடுமையைத்தான் நன்கு விளக்குகின்றது.

சமண முனிவர்கள் கூறியவாறே அரசன் சிறிதும் முன்பின் பாராது, திருநாவுக்கரசரை நீற்றறையில் வைக்குமாறு ஏவலர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் அவ்வாறே அவரை அழைத்துச் சென்று, ஒரு நீற்றறையில் இருத்தி, பனங்கருக்கு முதலியவைகளால் மூடித் தீயை மூட்டிவிட்டார்கள். அந்தோ, கொடுமை! கொடுமை!! அக்கொடுமையை நாம் வாயாற் சொல்லுதலும் தீமையே. அதனால், அதனைச் சொல்லச் சேக்கிழாருக்கு நாவெழாமல், நீற்றறை குளிர்ச்சியுற்றதை மட்டுமே கூறிச் செல்கின்றார்.

நாயனார் நீற்றறையினுள் சென்றபொழுது, அம்பலத்துள் ஆடும் திருவடியைத் தலைமேற்கொண்டே சென்று, 'எல்லா உலகங்களையும் ஆட்சி செய்பவனாகிய சிவனடியார்கட்கு, அவனது திருவுள்ளத்திற்கு மாறாக, இவ்வுலகத்தில் எவ்விடத்திலேனும், யாராலேனும் தீங்கு வருதல் உண்டோ' என்று நினைத்து, அன்பு முதிர்ந்த மனத்தினால் அப்பெருமானையே யன்றொரு கவலையும் இன்றி நினைந்து வணங்கிக்கொண்டிருந்தார்.

இறைவன் திருவருளில் தெளிவுடையவராகிய நாயனாரை, நீற்றறை எவ்வாறு சுடவல்லதாகும்! அதனால், அந்நீற்றறை, அவருக்கு நீற்றறையாய் இல்லாமல், நீர் நிறைந்த பொய்கையாய்விட்டது. நம்மனோர்க்கு சுடும் இடம் நீற்றறையும், குளிர்ச்சியைத் தரும் இடம் பொய்கையும் ஆகும். ஆனால், திருநாவுக்கரசருக்கு சுடும் இடம் இறைவன் திருவடி நிழலுக்குப் புறம்பான இடமும், குளிர்ச்சியைத் தரும் இடம் அவன் திருவடி நிழலும் ஆகும். அதனால், அவர், தமக்கு நீற்றறை குளிர்ந்திருந்ததை அருளிச் செய்யுமிடத்து, நீற்றறை 'பொய்கையாய்விட்டது' என்னாது, 'ஈசன் எந்தை இணையடி நிழலாய் விட்டது' என்று அருளிச்செய்தார். ஆயினும், ஈசன் இணையடி நிழல் எவ்வாறிருக்கும் என நம்மனோர் வினவுதல் இயல்பாதலின் அதனை, 'பொய்கையே போன்றது' என விளக்கியருளினார். ஈசன் திருவடி நிழலாவது, அதனை உணர்ந்து வீட்டின்பம் உறும் இடமும், அந்நிழலுக்குப் புறம்பாவது, அதனை உணராது, வினைக்குழியில் வீழ்ந்து துன்புறும் இடமும் ஆம்.

நீற்றறை தமக்குக் குளிர்ந்திருந்தமையை நாயனார் பின்பு அருளிச்செய்த திருப்பாடல்,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்பது.

இதனை மேற்கொண்டே சேக்கிழார்,

"வெய்யநீற் றறையதுதான்
வீங்கிளவே னிற்பருவம்
தைவருதண் டென்றலணைத்
தண்கழுநீர்த் தடம்போன்று
மொய்யொளிவெண் ணிலவலர்ந்து
முரன்றயா ழொலியினதாய்
ஐயர்திரு வடிநீழ
லருளாகிக் குளிர்ந்ததே"

என்றருளிச் செய்தார்.

உலகத்துப் பொருள்கள் யாவும் குணவடிவினவாதலின், அவை, அவ்வப்பொழுது அமையும் சூழ்நிலைகட் கேற்பவே இன்பத் துன்ப மயக்க வடிவினவாமன்றி, யாண்டும் ஒருபெற்றியனவாதல் இல்லை; அவ்வாறே நீர்ப்பொய்கையும் வேனிற் காலத்து இன்பஞ் செய்தலன்றி, மாரிக்காலத்தும், பனிக்காலத்தும் இன்பஞ் செய்யாது; அதனால் இன்ப வடிவினதாகிய இறைவன் திருவடி நிழலுக்குப் பொய்கையை உவமையாக அருளிச் செய்யும் நாயனார், அதனைத் தனித்தெடுத்து அருளிச்செய்யாது, இளவேனிலைக் கூட்டி அருளிச் செய்தார்.

இன்னும் அவற்றோடு, செவிக்கின்பஞ் செய்வதாகிய குற்றம் அற்ற வீணையின் இசையும், கண்ணுக்கு இன்பஞ் செய்வதாகிய மாலைக்காலத்து நிலவொளியும், மெய்க்கின்பஞ் செய்வதாகிய மெல்லென வீசும் தென்றற் காற்றும் கூடின், மிகுந்த இன்பத்தைச் செய்தல் பற்றி, அவற்றையும் உடன் கூட்டி அருளிச்செய்தார். 'மூசுவண்டறை' என்றருளிய குறிப்பு, நாவிற்கும் மூக்கிற்கும்

இன்பந்தரும் தேனும், மணமும் பொருந்திய மலர்களைக் கூட்டியவாறும்.

இறைவன் திருவடி இன்பம் மிகப் பெருமையும், இத்தன்மைத்தெனக் கூற வாராமையும் உடைமைபற்றி, அதற்குப் பெரும்பாலும், ஓர் இன்பப் பொருளையே உவமை கூறாது, பல இன்பப்பொருள்களைக் கூட்டியே உவமை கூறி யுணர்த்துவர், அவ்வின்பத்தை நுகரும் பெரியோர். இதனை,

"கரும்பைத் தேனைப்பாலைக்
கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பன்"

என்னும் சிவஞான சித்திப் பகுதியாலும், அதன் உரையாலும் உணர்க. "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி—வாலெயி றூறிய நீர்" என்னும் திருக்குறளையும், அதன் உரையையும் நோக்குதலும் ஈண்டுப் பயன் தருவதாகும்.

நீற்றறை தமக்கு இறைவன் திருவடி நிழலாய் இருந்த அனுபவத்தை அருளிச் செய்த திருப்பாடலை முதலாக வைத்து, உலகிற்கு அரிய உறுதிப்பொருள்களை யமைத்து நாயனார் ஒரு திருப்பதிகம் அருளிச் செய்துள்ளார். அதனுள், தாம் நீற்றறையில் திருவைந்தெழுத்தை ஓதியே இறைவனைத் தொழுது கொண்டிருந்தாராதலின், அத்திருவைந்தெழுத்தின் பெருமையையே முதற்கண் அருளிச் செய்தார். அத்திருப்பாடல்,

"நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே"

என்பது. இது, திருவைந்தெழுத்தினை, எத்துணை உறுதிபெற, நம்மனோர்க்கு அநுபவமாக அறிவுறுத்துகின்றது!

மேலும், அவர், அத்திருப்பதிகத்தில் "சிவபெருமானுக்கு அடியவராய் இருப்பவர்கட்கு நீற்றறைதானும் துன்பம் செய்யாது, மாசில் வீணை மாலை மதியம் முதலியனபோல இன்பஞ் செய்த இந்நிகழ்ச்சியை யறிந்தேனும், மக்கள், உடம்பின் நிலையாமையை உணர்ந்து, ஆக்கைக்கே இரைதேடி அலமந்து, காக்கைக்கே இரையாகியும், மாய்ந்து மண்ணாகியும் கழியாது, சிவபெருமானுக்கு, தாமே ஆளாகியும், ஆளானவரை அடைந்தும், தன்னை வாழ்த்துதற்கு வாயும், நினைக்க நெஞ்சும், வணங்குதற்குத் தலையும் தந்த தலைவனாகிய அவனை, அவனுக்குரிய குறிகளையும், அடையாளங்களையும், கோயில்களையும், வழிபாட்டு நெறிகளையும், அவற்றில் அவன் நின்றருளுகின்ற நுட்பத்தினையும் அருண்மொழிகள் வாயிலாக உணர்ந்து, நெக்கு நெக்கு நினைந்து, பூவும் நீருங் கொண்டு வழிபட்டும் உய்வார்களாக; அப்பெருமான், விறகில் தீப் போலவும், பாலில் நெய் போலவும் மறைந்து நிற்பதும், அவனை அறியும் அறிவாகிய கோலை நாட்டி, அவனையே இனியனாக விரும்பும் அன்பாகிய கயிற்றைப் பூட்டி உறுதிபெற வாங்கிக் கடைந்தால், கடைந்த வழித் தோன்றும் தீயும் நெய்யும்போல அவன் வெளிப்பட்டருளுதல் திண்ணம்" என்று அருளிச் செய்தார். இவ்வாறு நம் மீது இரக்கங்கொண்டு, உறுதிப்பொருள்களை நமக்கு இடித்திடித்துச் சொல்லுவார், நம் அருள்ஞானத் தந்தையாராகிய அப்பரன்றி வேறுயாவர்! இன்னதோர் அரிய திருப்பதிகம் வெளிப்படுதற்கு இடனாகவே, இந்நீற்றறை நிகழ்ச்சி நிகழ்ந்தது என உணர்க.

இங்ஙனம் நீற்றறை சுடுதலைச் செய்யாது, சிவபிரானது திருவடி நிழலேயாய்க் குளிர்ந்தமையின், நாயனார், அப்பெருமானுடைய திருவடிகளையே வணங்கிக்கொண்டு யாதொரு துன்பமும் இன்றி, இன்பத்துடனே அதில் அமர்ந்திருந்தார். நீற்றறையின் துன்பமேயன்றி, பசி தாகம் முதலிய உடற்றுன்பங்கள் தாமும் அங்கு அவருக்கு இலவாயின.

அவரை நீற்றறையில் வைத்த பல்லவன், ஏழு நாட்கள் கழிந்த பின்பு, சமணர்களை அழைத்து, 'இனி, நீங்கள், நீற்றறையைத் திறந்து பாருங்கள்' என்றான். அவ்வாறே சமணர்கள் சென்று, நீற்றறையைத் திறந்தார்கள். நாயனார், இன்ப வெள்ளத்தில் மூழ்கியும், அம்பலத்தாடும் பெருமானது அடிநிழல் அமுதத்தினை உண்டும், மிக்க தெளிவுடன் இருந்தார். அதனைக்கண்டு, அவர்கள், 'ஈதென்ன அதிசயம்!' என்று சொல்லி மருட்சியடைந்தார்கள். ஆயினும், அவர்கள் பல்லவனிடம் சென்று, நாயனார் இனிதிருத்தலைத் தெரிவித்து, 'இதில் அதிசயம் ஒன்றும் இல்லை: முன்பு நமது சமயத்தில் கற்றுக் கொண்ட மந்திர வலியினாலே இவர் பிழைத்துக்கொண்டார்' என்று கூறினார்கள்.

நஞ்சு அமுதானமை

பின்பு சமணர்கள், 'இனி நாம் செய்யத் தக்கது, கொடிய நஞ்சினை உண்பிப்பதே யாகும்' என்று மொழிந்தார்கள். நடுவுநிலை யின்றி, அவர்கள் பக்கமே சார்ந்திருப்பவனு கிய பல்லவன், 'அவ்வாறே செய்யுங்கள்' என்று கட்டளை யிட்டான். கொடியோரை, அவர் அறிய நஞ்சு கலந்த உணவை வலிதில் உண்ணச் செய்தலும், அக்காலத்தில் கொலைத் தண்டனை முறைகளுள் ஒன்ருய் இருந்தது. அதனுல், அரசன் இட்ட கட்டளையின்படியே, அத்தண்டனையைச் சிறிதும் தியக்கம் இன்றி நிறைவேற்றுபவராகிய பணியாளர்கள், நாய ஞருக்கு, நஞ்சு கலந்த பாற்சோற்றையிட்டு உண்ணச் செய்தார்கள்.

'சிவபெருமானது பெருமையை உல கிற்கு விளக்க வந்தவராகிய நாயனுர் 'எங்கள் சிவபெருமான் அடியவர்கட்கு நஞ்சு அமுதமேயாகும்' என்று சொல்லி, அச் சோற்றை உண்டு, தீங்கின்றி யிருந்தார். 'சிவபெருமானுக்கு, முன்பு எல்லா உலகங் களையும் அழிக்கத் தக்கதாய் வந்த பெரிய ஆலகாலவிடம் அமுதமாய்விட்டது என்ருல், அவன் அடியார் ஒருவர்க்கு, இந்தச் சிறிய விடம் அமுதமாவது ஓர் அதிசயமோ!' என் கின்ருர் சேக்கிழார். இவ்வாறு சமணர்கள் இடுவித்த நஞ்சு அமுதமானதை,

"வஞ்சனைப் பாற்சோ றாக்கி
வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார்
நனிபள்ளி யடிக ளாரே"

என நாயனுர் பின்னர் அருளிச் செய்தமை காண்க.

வஞ்சனை - தீய எண்ணம். 'வஞ்சனை யால்' என்க. ஆக்குதல்-சமைத்தல். வழக்கு, நீதி என்பன ஒருபொருட் சொற்கள். தரு தலை அமணரே செய்வித்தமையின், 'அமணர் தந்த நஞ்சு' என்றருளினுர். சிவபெருமா னுக்கு நஞ்சு அமுதாயினமையையும், அவன் அடியார்கட்கும், வஞ்சனையாக யாரேனும் நஞ்சு ஊட்டுவார்களாயின், அஃது அவர்களை ஒன்றும் செய்யமாட்டாது; நஞ்சு ஊட்டின வர்கள்தாம் துன்பமடைய நேரிடும் என்பதை யும் உலகிற்கு எடுத்துக்காட்டவே, இந் நிகழ்ச்சி நிகழ்ந்தது எனக் கொள்க.

மதயானை வணங்கினமை

நாயனுருக்கு நஞ்சும் அமுதானமையைக் கண்டு, சமணர்கள் பெரிதும் அஞ்சினர் இனித் தங்களையே அவர் அழித்துவிடவும் கூடும் என்று நினைத்து, எவ்வாறேனும் அவ ரைத் தொலைத்துவிடவேண்டும் என்று முடிவு செய்துகொண்டார்கள். அதனுல், அவர்கள் அரசனிடம் சென்று, 'அருள்நெறியைக் காக்க விரும்பும் அரசரேறே, தருமசேன னுக்கு நஞ்சு ஊட்ட, அதனையும், அவன், நமது சமய மந்திரத்தால் தன்னைத் தாக்காத வாறு தடுத்துவிட்டான்; இனி, அவன், உனது தண்டனைக்கு உட்படாது உயிர் வாழ்ந்திருப்பானுயின், எங்கள் உயிரையும், உனது ஆட்சிமுறையையும் அழித்தொழித் தல் திண்ணம்' என்று கூறினுர்கள்.

அவர்கள் சொற்களைக் கேட்டு, அவை களையே உண்மையெனக் கொண்டு, அறிவு கெட்டிருந்த பல்லவன், 'இனி, எவ்வகை யான தண்டனையை அவனுக்குக் கொடுப் பது?' என்று கேட்டான். அதற்குச் சம ணர்கள், 'நாங்களே எங்கள் மந்திரத்தால் அவனை அழித்துவிடலாம்; ஆனுல், அஃது எங்கட்கும், உனக்கும் பழியாகும்; ஆகை யால், குற்றவாளிகளை மிதிப்பதற்கென, உன் னிடம் உள்ள மதயானையை அவன்மேற் செலுத்தி மிதிக்கச் செய்தலே தக்கது' என்ற னர்.

'கொல்லாமையே சிறந்த அறம்' எனக் கூறிக்கொண்டு கொலையையே சூழ்கின்ற கீழான குணம்படைத்த அச் சமணர்களது சொற்படியே செய்யுமாறு, ஏவலாளர்கட்குக் கட்டளையிட்டான், ஆட்சித் தொழிலை மேற் கொண்டு, அலைத்தற்ருெழிலைச் செய்பவனு கிய அப் பல்லவ மன்னன். யானைக் காலால் இடறுவித்தலும், அக்காலத்திருந்த கொலைத் தண்டனைகளுள் ஒன்று.

எனவே, ஏவலாட்கள் விரைந்து சென்று யானைப் பாகர்கட்கு அறிவிக்க, அவர்கள் சென்று கூடத்துள் இருந்த மதயானையைத் தூண்டிவிட்டார்கள். அது, கோபம் மிகுந்து, சங்கிலியை அறுத்துக்கொண்டு, கட்டுத் தறியை முரித்துவிட்டு கூடத்தைத் தந்தங் களால் குத்தி, மலை இயங்குவதுபோலப் புறப் பட்டு, வழியில் உள்ள மாளிகைகளை இடித் துத் தள்ளி, மண்டபங்களைப் பெயர்த்து வீசி,

குத்துக்கோற்காரர் தலைகளைக் காலால் இடறி விட்டு, தும்பிக்கையைச் சுழற்றிக்கொண்டு, இடிபோலப் பிளிறி, மதமழையைச் சொரிந்து கொண்டு, கூற்றுவனே யானையுருவங் கொண்டு வருவதுபோல வாயு வேகமாக வந்தது. அதனைக் கண்டு அனைவருக்கும் நடுக்கம் உண்டானபோதிலும், சமணர்கள் அதனை நாயனுர்மேல் ஏவத் தியங்கவில்லை.

ஆயினும், நாயனுரும், அந்த யானையின் வருகையைக் கண்டு அச்சங் கொள்ளவில்லை. 'சிவபிரானது திருவடியே எல்லாவற்றையும் செய்வது' எனவும், 'அதனால், அவன் அடியவர்க்குப் பிறரால் வருவதொரு தீங்கில்லை' எனவும் தெளிந்த தெளிவினால், மகிழ்ச்சியோடு, அப்பெருமான்மீது ஒரு தண்டமிழ்த் திருப்பதிகத்தை அருளிச்செய்து கொண்டிருந்தார். அத்திருப்பதிகத்தின் முதற் றிருப்பாடல் வருமாறு :

"சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை யுடையும்
வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறும்
அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை;
அஞ்ச வருவது மில்லை."

இவ்வாறு, "ஒருவர் தமர் நாம்; அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை" என்று பத்துத் திருப்பாடல்களைப் பாடிப் பதிகத்தை முடித்தருளினுர். அத் திருப்பதிகம், இவ்வுலகத்தில் உள்ளவர்கள், தமக்கு எவை காரணமாகவேனும் அச்சம் தோன்றிய விடத்துச் சிவபெருமானைத் துதித்து, அவ்வச்சத்தினின்றும் நீங்கி உய்தற்பொருட்டு வெளிப்பட்டது. அத்திருப்பதிகம் வெளியாதற்பொருட்டே, நாயனுர்மீது அரசன் யானையை ஏவிய நிகழ்ச்சி நிகழ்ந்த தென்க.

இங்ஙனம் நாயனுர் திருப்பதிகத்தை முடித்த அளவில், யாவருக்கும் அச்சத்தை உண்டாக்கிய அந்த மதயானைக்கு, அவரை அணுகிய உடனே அவர்பால் ஓர் அச்சம் தோன்றிற்று. அதனால், அது, நாயனுரை, வலமாகச் சுற்றிவந்து, கீழே வீழ்ந்து வணங்கி எழுந்து, தும்பிக்கையைத் தூக்கிக் கும்பிட்டு விட்டுத் திரும்பியது. அதனைக் கண்ட பாகர்களும், குத்துக்கோற்காரர்களும் அதனை அடித்து, அங்குசத்தால் குத்தி, நாயனுர்மேல் செல்லுமாறு தூண்டினர். ஆயினும், அது அவர்கள் குறிப்பின்படி செய்யாமல், அவர்களைத் தும்பிக்கையால் தூக்கி எறிந்து கொன்றுவிட்டு, இவை எல்லாவற்றிற்கும் காரணமாய் இருந்த சமணர்கள் கூட்டத்தின் மேல் ஓடி, அவர்களைக் காலால் மிதித்தும், தும்பிக்கையால் கிழித்தும் பலவாறு அழித்து, பாற்கடலைக் கலக்கிய மந்தர மலை போலச் சுழன்று திரிந்தது; அச்செயல் பல்லவ அரசனுக்கும் மனவேதனையைக் கொடுத்தது.

யானையினிடம் அகப்பட்டு அழிந்தவர்கள் போக, மற்றைய சமணர்கள் யாவரும், அரசனை அடைந்து, அவன் கால்களில் விழுந்து, தங்களுக்கு உண்டாகிய துன்பத்தினை ஒவ்வொருவரும் தனித்தனியே அவனிடம் சொல்லி மனம்நொந்து அழுதார்கள்.

(தொடரும்)

திருப்பூவணம்—புஷ்பவனேசுவரர் கோயிலில் மண்டலாபிஷேகம் 8-10-61-ல் நடைபெற்றது.

கௌரீமாயூரம்—மாயூரநாதசுவாமி கோயிலில் மண்டலாபிஷேகம் 6-10-61-ல் நடைபெற்றது

திருப்புறம்பயம் கல்வெட்டு வரலாறு

[வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார், அண்ணாமலைப்பல்கலைக் கழகம்]

திருப்புறம்பயம் என்பது சோழநாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களில் ஒன்றாகும். இது கும்பகோணத்திற்கு வடமேற்கே ஐந்து கல் தூரத்தில் மண்ணியாற்றின் வடகரையில் இருக்கிறது. இது சைவசமய குரவர்கள் நால்வராலும் பாடப்பெற்ற பழமையும் பெருமையும் வாய்ந்தது. இவ்வூர்ப் புராணத்தில் இவ்வாலயத்து எழுந்தருளியுள்ள சிவபெருமான் ஒரு வணிகப் பெண்ணின் திருமணங் குறித்துச் சான்று பகர்ந்தார் என ஒரு வரலாறு காணப்படுகின்றது. அதற்கேற்ப இங்கு இறைவன் திருப்பெயரும் சாட்சிவரதநாதர் என வழங்கி வருகின்றது. சிலப்பதிகாரத்து வஞ்சின மாலையுட் காணப்படும் "வன்னிமரமு மடைப்பளியுஞ் சான்றாக முன் னிறுத்துக் காட்டிய மொய்குழலாள்" என்ற தொடரும் மேற்கூறிய வரலாற்றையே குறிக்கின்றது. சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட இவ்வரலாறு அந்நூல் தோன்றிய காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னரே நிகழ்ந்து தமிழ்நாடெங்கும் பரவியதாகல் வேண்டும். ஆகவே இத்திருப்புறம்பயத்திலுள்ள ஆலயம் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்ததென்பது புலனாகும்.

இத்திருக்கோயிலில் முதற் பராந்தகன், முதல் இராசராசன், கங்கைகொண்ட சோழன், முதலாம் இராசாதிராசன், முதற் குலோத்துங்கன், விக்கிரமசோழன், இரண்டாங் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், மூன்றாங் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் முதலான சோழ மன்னர்களுடைய காலங்களில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இதில் விசயநகர வேந்தனது கல்வெட்டு ஒன்றும் உண்டு. இவைகளெல்லாம் அக்காலத் தமிழ் வேந்தர்களாகிய சோழர்களும் அவர்களது அமைச்சர்களும் படைத்தலைவர்களும், பிறரும் புறம்பயத்து எம்பெருமானுக்கு நாள் வழிபாட்டிற்கும், திருநந்தா விளக்குகளுக்கும் நிபந்தங்கள் விடுத்ததையும், பல அணிகலன்கள் கொடுத்ததையும் விளக்குகின்றன. இவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்க்கின் தமிழகத்தின் வரலாற்றை முறையாக ஆராய்ந்தறிய விரும்பும் வரலாற்று ஆராய்ச்சியாளருக்கு எத்துணையோ அரிய செய்திகள் எளிதில் கிடைக்குமென்பது திண்ணம். இத் தலத்தைப்பற்றிச் சில செப்பேடுகளும் உள்ளன. இச் செப்பேடுகளாலும் கல்வெட்டுக்களாலும் அறியக்கிடக்கும் சில உயரிய செய்திகளை அடியில் குறிப்போம்.

திருவாலங்காட்டுச் செப்பேட்டினாலும், உதயேந்திரச் செப்பேட்டினாலும் திருப்புறம்பயத்தில் ஒருபெரும் போர் நிகழ்ந்த செய்தி வெளியாகின்றது. சோழமன்னனாகிய முதலாம் ஆதித்தன், பாண்டியன் இரண்டாம் வரகுணன், சேரன் தாணுரவி ஆகிய மூவரும் பல்லவவேந்தனாகிய அபராசித விக்கிரம வர்மனையும், அவனுக்குத் துணையாகப் போந்த கங்க அரசனாகிய இரண்டாம் பிருதுவிபதியையும் திருப்புறம்பயப் போரில் வென்று புறங்காட்டி ஓடச்செய்தனர். இரண்டாம் பிருதுவிபதி இப்போரில் கொல்லப்பட்டான். இப்போரின் பயனாக, முதலாம் ஆதித்தசோழன் சோழமண்டலத்திற்கு அரசனானான். கி. பி. 880-க்கு அணித்ததாக இப்போர் நிகழ்ந்திருக்க வேண்டும். இந்து தேச சரித்திர நிகழ்ச்சியில் பிளாசி யுத்தம் எத்துணைச் சிறப்புடையதாகக் காணப்படுகின்றதோ அத்துணைச் சிறப்புடையது இப் புறம்பயப் போரென்பது நன்கு அறியத்தக்கதொன்றாம்.

இறைவரின் திருப்பெயர்

இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவர் திருப்புறம்பியமுடைய பட்டாலகர், திருப்புறம்பியமுடையார், திரும்புறம்பியமுடைய மகாதேவர் என்னும் திருப்பெயர்களால் அழைக்கப் பெறுகின்றனர்.

பட்டாலகர் என்பது பட்டாரகர் என்றும் வழங்கப்பெறும். பட்டாலகர் என்றால் கடவுள் என்று பொருள். இவைகளுள் திருப்புறம்பியமுடைய பட்டாலகர் என்னும் பெயர் முதற் பராந்தக சோழனது 14, 16, இராச்சிய ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்களில் காணப்பெறுகின்றது. இம் மன்னனுடைய 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஆதித்தகரமுடையார்க்கு அரை நுந்தாவிளக்குக்கு நிவந்தம் அளித்ததையும், 13-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஆதித்தேவஸ்வரம் உடையார்க்கு இன்னம்பர்நாட்டுப் பிரமதேயம் பெரியவானவன்மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தில் இரண்டுமாக்காணி நிலம் அளித்ததையும் குறிப்பிடுகின்றன. இங்ஙனம் ஆதித்தகரமுடையார், ஆதித்தேஸ்வரமுடையார் என்னும் பெயர் திருப்புறம்பயத்துக் கோயிலில் மேற்குத் திருச்சுற்று மாளிகையில் எழுந்தருளுவிக்கப் பெற்றிருக்கும் சிவலிங்கங்களில் ஒன்றின் பெயர் ஆதல்வேண்டும். ஏனெனில் ஒரே அரசனுடைய கல்வெட்டு ஒரு இறைவர்க்கு இரண்டு பெயர்களைக் குறிப்பிடும் வழக்கம் இல்லை.

எழுந்தருளுவிக்கப்பெற்ற திருமேனிகள்

முதலாம் இராசேந்திர சோழனின் 23-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, இத்திருக்கோயிலில் இலங்கேஸ்வரக் குலகாலத் தெரிஞ்ச திருமஞ்சனத்தார் வேளத்துப்பெண் தேவன் புறம்பியாள் ஆடல்விடங்க மாணிக்கம் என்னும் அம்மையார் பள்ளிக்கட்டிலில் எழுந்தருளியிருக்கும் உமாபரமேஸ்வரியாரையும்; அரசன் பெயர் சிதைந்த கல்வெட்டு, அத்தியண்ணன்மாதேவியார், சந்திரசேகரதேவரையும்; மூன்றாம் இராசராச சோழனின் இருபதாம் ஆண்டுக் கல்வெட்டு, திருப்புறம்பயத்துக்கு அருகில் உள்ள கண்ணங்குடியான மாளிகைக் கமுகண்ட நல்லூரில் இருந்த சமுதாயம் ஆழ்வானான வீதிவிடங்க விழுப்பரையனும் இவன் தம்பி பரிந்து காப்பானாகிய அகிலநாயக விழுப்பரையனும், முதற் பிராகாரத்தில் திருவலஞ்சுழி உடையார், புற்றிடங்கொண்டார் இவர்கள் திருமேனிகளையும்; மூன்றாம் பிராகாரத்துத் திருவாசலடியில் அறம் உரைத்த நாயனாரையும் எழுந்தருளிவிக்கப்பெற்ற செய்திகளை உணர்த்துகின்றன.

குறிப்பு:—திருவலஞ்சுழி உடையார், புற்றிடங்கொண்டார், அறம் உரைத்த நாயனார் இவர்களின் திருமேனிகளை இக்கோயிலில் எழுந்தருளுவிக்கப்பெற்ற காலம் மூன்றாங் குலோத்துங்க சோழனுடைய முப்பத்தேழாவது ஆண்டில் அதாவது 1178+37 =கி.பி. 1215இல் ஆகும். இச்செய்தி **"பெரிய தேவர்க்கு யாண்டு முப்பத்தேழாவது நாளில் எழுந்தருளுவித்த"** என்ற கல்வெட்டுப் பகுதியால் புலனாகின்றது. இது மூன்றாம் இராசராச சோழனுடைய 19-ஆம் ஆட்சியாண்டுவரை கல்லில் செதுக்கப்படாமல் இருந்து இந்த இராசராசனுடைய 20-ஆம் ஆட்சியாண்டில் கல்லில் பொறிக்கப்பெற்றது. **அறம் உரைத்த நாயனர்** என்பது தட்சிணாமூர்த்தியைக் குறிக்கும். **"நால்வர்க்கு அறம்பயம் உரைத்தனை புறம்பயம் அமர்ந்தோய்"** என்னும் இத் தலத்துத் தேவார அடியை உட்கொண்டு இப்பெயர் அமைந்திருக்கலாம்.

வேறு செய்திகள்

இவ்வாலயத்திலுள்ள பேரம்பலம் பொன்வேய்ந்த சோழனது ஏழாம் ஆண்டுக் கல்வெட்டு, பிள்ளையார் முத்துமுளைக் கன்று, அறம்பயந்தபிள்ளையார், ஆளுடையநாயனார், பள்ளியறை நாச்சியார், கூத்தாடும் தேவர் அவர்தம் பிராட்டியார், இவர்களைக் குறிப்பிடுகின்றன. [இவர்களுள் **பிள்ளையார் முத்துமுளைக் கன்று** என்பவர் பிரளயங்காத்த விநாயகராதல் வேண்டும். இவர் திருமேனி கடல்படு பொருளால் ஆக்கப்பெற்றது. இவர் திருமேனி, விநாயக சதுர்த்தி நாளில் சொரியப்பெறும் ஒரு ஆடம் தேன் முழுவதையும் உள்ளே இழுத்துக்கொள்ளும் சக்தி வாய்ந்தது. கூத்தாடும் தேவர் நடராசப்பெருமானவர்.] மூன்றாங் குலோத்துங்க சோழதேவரின் முப்பதாம் ஆண்டில் திருப்புறம்பியமுடையானான செம்பியன் பல்லவரையன் குடந்தைக் கீழ்க்கோட்டமுடையார் (கும்பகோணம் நாகேச்சுவரர்) கோயில் முதல் பிராகாரத்துக் கீழைத் திருமாளிகையில் திருப்புறம்பியமுடையார் படிமத்தை எழுந்தருளுவித்து பூசைக்கும் அமுதுபடிக்கும் நிவந்தங்கள் விட்டிருக்கின்றான்.

இத்திருக்கோயிலில் ஐப்பசி, பங்குனி மாதங்களில் விழாக்கள் நடைபெற்றுவந்தன. திருவேட்டை விழா ஒன்றும் குறிப்பிடப்

பெறுகின்றது. விழாமுடிவில் கொள்ளிடப் பேராற்றில் தீர்த்தம் பிரசாதிப்பது உண்டு. இவ்விழாக்கள் செம்மையாக நடைபெற, அரிவாட்டாயன், திருத்தொண்டன், வன்றொண்டன், சண்டேஸ்வரன், இயற்பகை, கோட்புலி, விறன்மிண்டன், அணுக்கநம்பி என்னும் இவர்கள் நிவந்தங்களை அளித்திருந்தனர். இவ்வூரில் ஆண்டார் கதையாபரணர் திருமடம் ஒன்றிருந்தது.

இக்கோயிலைச் சேவிக்க வந்த அடியார்களுக்கு சட்டிகளில் சோறு வழங்குவதற்கு, அரையன் திருப்புறம்பியமுடையானை முடிகொண்ட சோழப் பல்லவரையன் குசப்புறம் அளித்திருந்தான்.

சேக்கிழார்பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் குறித்துள்ள மூன்று திருவாசல்களில் **திருவணுக்கன் திருவாசல்** என்பது அர்த்தமண்டபத்தின் வாசல் என்பது இக்கோயில் கல்வெட்டால் உறுதி எய்துகின்றது.

'திருவணுக்க வாசலில் துவாரபாலர்கள் திருமுன்பு இரண்டு சந்திவிளக்கு எரிப்பதற்கு' என்பது முதலாம் இராசாதிராசனுடைய கல்வெட்டுப் பகுதி. இவ்வூரில் **விரையாக்கலி பெருந்தெரு** என்று ஒரு தெரு இருந்தது. அதில் சங்கரப்பாடி நகரத்தார் வசித்துவந்தனர். [சங்கரப்பாடி நகரம் என்பது சைவர்கள் வசிக்கும் இடமென்று தோன்றுகிறது.]

இவ்வூரைத் தன்னகத்துக்கொண்ட நாடு

இவ்வூரை வடகரை அண்டாட்டுக் கூற்றத்து நின்று நீங்கிய தேவதானம் என்று முதற் பராந்தகன் கல்வெட்டும், இராசேந்திர சிங்க வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்து நின்று நீங்கிய தேவதானம் என்று முதலாம் இராசராச சோழனுடைய 18-ஆம் ஆண்டுக் கல்வெட்டும், விக்கிரம சோழ வளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்துத் திருப்புறம்பியம் என்று விக்கிரம சோழனுடைய ஆறும் ஆண்டுக் கல்வெட்டும் குறிப்பிடுகின்றன. அண்டாடு என்பது இக்காலம் அண்டக்குடி என்று வழங்கப்பெறுகின்றது. இது கும்பகோணம் தாலூகாவில் சுவாமிமலைக்கு மேற்கே சுமார் இரண்டரை கல் தூரத்தில் இருக்கிறது.

செய்திகள்

கீழ்க்காணும் இடங்களில் நவராத்திரி விழா 10-10-61 முதல் 19-10-61 வரை நடைபெற்றது.

இளையாத்தகுடி	—	கைலாசநாதசுவாமி
காஞ்சிபுரம்	—	ஆதிபீடா பரமேஸ்வரி காளிகாம்பாள் கோயில்
மதுரை	—	கூடலழகர் கோயில்
சேகரம்	—	வீரராகவப்பெருமாள் கோயில்
திருமயிலை	—	கபாலீச்வரர் கோயில்
சென்னை	—	சென்னமல்லீசுவரர், சென்னகேசவப் பெருமாள்கோயில்
காஞ்சிபுரம்	—	ஏகாம்பரநாதர் கோயில்
சென்னை	—	அருணசலேசுவரர் கோயில்
அம்பாசமுத்திரம்	—	காசிபநாதசுவாமி கோயில்
கும்பகோணம்	—	ஆதிகும்பேசுவரர் கோயில்
சின்னமனூர்	—	பலாநந்தீசுவரர் கோயில்
திருவெண்காடு	—	சுவேதாரண்யேசுவரர் கோயில்
திண்டுக்கல்	—	சீனிவாசப்பெருமாள் கோயில்
சென்னை	—	ஏகாம்பரேசுவரர் கோயில்
மன்னார்குடி	—	ராசகோபாலசுவாமி கோயில்
ஓமாம்புலியூர்	—	பிரணவ வியாக்கிரபுரீசுவரர் கோயில்
இராஜபாளையம்	—	மாயூரநாதசுவாமி கோயில்
கரூர்	—	கல்யாணபசுபதீசுவரர் கோயில்

5 - NOV 1961



திருச்சிக்கல்

வானுலா வும்மதி வந்துலா வும்மதில் மாளிகை
தேனுலா வும்மலர்ச் சோலைமல் குந்திகழ் சிக்கலுள்
வேனல்வே ளைவிழித் திட்டவெண் ணெய்ப்பெரு
[மானடி
ஞானமா கநினை வார்வினை யாயின நையுமே.

—*திருஞானசம்பந்தர்.*

சிக்கல் என்ற உடனே எல்லோருக்கும் சிங்கார வடிவேலர் நினைவு உண்டாகிறது. முருகப்பெருமானின் புகழ்பெற்ற தலங்களுள் ஒன்றாக விளங்குவதுடன் சிக்கல், தேவாரப் பாடல்பெற்ற சிவப்பதியாகவும் திகழ்கிறது. இத்தலம் நாகப்பட்டினத்திற்கு மேற்கே மூன்று கல் தொலைவிலுள்ளது. திருவாரூர்—நாகூர் இருப்புப்பாதையில் சிக்கல் என்ற நிலையத்தின் அருகே இருக்கிறது. திருவாரூர்-நாகை மோட்டார் வண்டிகள் இவ்வூர் வழியே செல்கின்றன.

வசிட்ட முனிவர் வெண்ணெயினால் இலிங்கம் செய்து வழிபட்டு அதை எடுத்து வேறிடத்தில் அமைக்க முயன்றபோது முடியாமல் சிக்கிக்கொண்டதால் **சிக்கல்** என்ற பெயருண்டாயிற்று. வசிட்டாசிரமம், மல்லிகாரணியம், தேவசாநித்தியபுரம், கயாசரசு, என்ற பெயர்களும் புராணத்தில் கூறப்படுகின்றன.

கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. நான்கு புறங்களிலும் வாயில்கள் உள்ளன. கிழக்கே இரண்டு வாயில்கள் இருக்கின்றன. சிவன்கோயிலுக் கெதிரிலொன்றும், பெருமாள் சந்நிதிக்கெதிரிலொன்றும் உள்ளன. இந்த இரண்டு வாயில்களையும் ஏழு நிலை மாடக் கோபுரமும், மூன்று நிலைமாடக் கோபுரமும் அணி செய்கின்றன. கோயிலுக்குள் இரண்டு பிரகாரங்கள் இருக்கின்றன. வடக்கு வெளிப்பிரகாரத்தில் **கோலவாமனப் பெருமாள்** சந்நிதியிருக்கிறது. உட்பிரகாரத்திற்குப் போகும் வாயிலின் இருமருங்கும் விநாயகரும் தண்டபாணி சுவாமியும் எழுந்தருளியிருக்கின்றனர். மூலஸ்தானம் கட்டுமலைக் கோயில்மேல் இருக்கிறது. கோச்செங்கட் சோழன் "எண்டோள் ஈசற்கு எழுபது



மாடங்கள்” அமைத்தவற்றில் ஒன்றாகக் கூறப்படுகிறது. படிகள் வழியே மேலே சென்றதும் எதிரில் சோமாஸ்கந்தமூர்த்தி சந்நிதி உள்ளது. அதையொட்டி வடபுறம் மூலஸ்தானம் இருக்கிறது. இறைவனின் திருநாமம் **நவநீதேஸ்வரர்** என்று வழங்குகிறது. தேவாரத்தில், வெண்ணெய்ப் பெருமான், வெண்ணெய்ப்பிரான் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. இதற்கு வடபுறம் நடராஜர், சிங்காரவேலர் சந்நிதிகள் தெற்கு நோக்கியிருக்கின்றன. “அழகிய சிக்கல் சிங்காரவேலவன்” என்று அருணகிரியார் கூறியிருப்பதை அம்மூர்த்தியை நேரில் பார்ப்போருக்கே விளங்கும். வடக்கு உட்பிரகாரத்தில் அம்பாள் சந்நிதியிருக்கிறது. தேவியின் திருப்பெயர் **சத்தியாயதாட்சி** என்பது. **வேல்நெடுங்கண்ணி** என்றும் வழங்கப்பெறும்.

இத்தலத்தில் ஐந்து தீர்த்தங்கள் உள்ளன. **பாற்குளம்** கோயிலுக்கு வெளியில் மேல்புறமிருக்கும் திருக்குளம். இதற்கு அமிர்த தடாகம், க்ஷீரபுஷ்கரணி, சுதாநிதி என்ற பெயர்களைப் புராணங் கூறுகிறது. கோயிலுக்கு வடக்கே **அம்மாகுளம்** இருக்கிறது. கோயிலுக்குள் **இலக்குமி தீர்த்தம்**, **கயாதீர்த்தம்** இவைகளிருக்கின்றன. கோயிலுக்குத் தெற்கே **விருத்தகாவேரி** என்ற ஆறு ஓடுகிறது. இதை ஓடம்போக்கி என்று வழங்குவர்.

தெற்கு உள் பிரகாரத்திலிருக்கும் **மல்லிகையும்**, பாற்குளத்தின் கரையிலுள்ள **அரசமரத்தையும்** தல விருட்சங்கள் என்று தலபுராணம் கூறுகிறது. இத்தலத்து இறைவனை வசிட்டர், விசுவாமித்திரர், காமதேனு முசுகுந்தன் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்றனர்.

கோயிலில் நாள்தோறும் ஆறு கால பூசை நடைபெறுகிறது. ஆண்டு தோறும் சித்திரை மாதத்தில் நவநீதேசுவரருக்குப் பிரமோற்சவம் பத்து நாட்கள் நடைபெறுகின்றது. ஐப்பசி மாதத்தில் சிங்காரவேலருக்குப் பத்து நாட்கள் சிறந்த திருவிழா நடைபெறும். ஐந்தாம் நாள் தேர்த்திருவிழா முடிந்த பின், அம்பிகையிடமிருந்து வேலவர் வேல்பெற்று மலைக்குச் சென்றதும் அவர் திருமேனியில் வியர்வைத்துளிகள் காணப்படுவது ஒரு அற்புதக்காட்சி. “சிக்கலில் வேல் வாங்கிச் செந்தூரில் சம்மாரம்” என்ற பழமொழியுண்டு. இறைவியிடம் முருகன் வேல் வாங்கும் திருவிழா இத்தலம் ஒன்றிலேயே நடைபெறுவது தனிச்சிறப்புடையது. ஆறும் திருநாள், ஆட்டு வாகனத்தில் முருகப்பெருமான் எழுந்தருளிச் சூரனை சம்மாரம் செய்வார். இந்த ஆண்டு அந்த திருவிழா **13—11—61** ல் நடைபெறும்.

திருஞானசம்பந்தர் இத்தலத்தெம்பெருமான் மீது பதினொரு பாடல்களையுடைய ஒரு பதிகம் ஓதியருளியுள்ளார். “சிக்கலுள் வேலொண் கண்ணியினாளையோர் பாகன் வெண்ணெய்ப்பிரான் பாலவண்ணன் கழலேத்த நம் பாவம் பறையுமே” என்பதில் இறைவன், தேவி இருவரின் பெயர்களையும் ஒருங்கே கூறுகிறார். **சுந்தரர்**, திருஇடையாற்றுத் தொகையில் “கச்சையூர்” என்று தொடங்கும் பாடலில் **சிக்கலைக்** குறித்திருக்கிறார். **அருணகிரிநாதர்** இத்தலத்து முருகன்



பேரில் இரண்டு திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியிருப்பதுடன் வேறொரு பாடலிலும் குறிப்பிட்டிருக்கிறார். இரண்டு பாடல்களின் ஈற்றில் பகுதிகள் பின்வருவன:—

"அழகிய சிக்கற் சிங்கார வேலவ
சமரிடை மெத்தப் பொங்கார மாய்வரும்
அசுரரை வெட்டிச் சங்கார மாடிய பெருமாளே"

"செம்மனத்தர் மிகுத்த மாதவர்
நன்மைபெற்ற உளத்தி லேமலர்
செல்வசிக்கல் நகர்க்குள் மேவிய பெருமாளே."

"செல்வ சிக்கல்" என்று கூறியிருப்பது "நிறை செல்வத் திருவாரூர்" என்ற கூற்றை நினைவூட்டுகிறது. காஞ்சி சிதம்பர முனிவர், க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழில் "சிக்கலம் பதிமேவு சிங்காரவேலனும் தேவர் நாயகன் வருகவே, திகழும் வெண்ணெய்ப் பிரான் ஒருபாலுறைந்த மெய்ச்செல்வி பாலகன் வருகவே" என்று கூறியிருக்கின்றனர். இன்னும் க்ஷேத்திர மான்மியத்திலும் பல தனிப் பாடல்களிலும் இத்தலத்தின் பெருமை கூறப்பட்டிருக்கிறது.

நவநீதேசுவரர், கோலவாமனப் பெருமாள் இவர்களின் கர்ப்பக்கிரகச் சுவர்களில் எட்டு கிரந்த, தமிழ்க் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை, திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டியன், விஜயநகர மன்னர் அச்சுத தேவ மகாராயர், சதாசிவ மகாராயர் முதலியோர் காலத்தவை. அவற்றில் சோழமண்டலத்து கயமாணிக்க வளநாட்டு சிக்கல் நாட்டு வெண்ணெய் நல்லூர் என்று ஊரின் பெயரும், பால்வெண்ணெய் நாயனார், கோலவாமனப் பெருமாள், குமாரசுவாமி என்று மூர்த்திகளின் பெயர்களும் குறிக்கப்படுகின்றன. ஒரு கல்வெட்டில் கோலவாமனப் பெருமாள் கோயில் கருங்கல் கட்டிடம் மங்கலம் என்ற ஊரினரான ஆயப்பிள்ளையால் கட்டப்பெற்றதாகக் கூறப்படுகிறது. மற்றொரு கல்வெட்டு, சிக்கல், வடகுடி, ஓடச்சேரி முதலியவற்றிற்கு மேற்பார்வையாளராக திருவாரூர் ஞானப்பிரகாசப் பண்டாரம் என்பவரை நியமித்ததைக் குறிக்கிறது. கிரந்தத்திலும் தமிழிலும் உள்ள ஒரு கல்வெட்டில் க்ஷேத்திர மகாத்மியம் காணப்படுகிறது. முனிவர்கள், விருட்சங்கள், தீர்த்தங்கள் இவைகளைப்பற்றி ஸ்காந்த புராணம் காளிகாண்டம் தீர்த்த சங்கிதையில் கூறப்பெற்றிருப்பதை அது அறிவிக்கிறது.

○

மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்]

(முன் தொடர்ச்சி)

மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான திருக்கடித்தானத்தை யனுபவித்துக்கொண்டிருக்கிறோமிப்போது. அவதாரிகை மட்டுமே முன்னிதழில் வெளிவந்தது. மிக விரிவாக அமைந்த அவ்வவதாரிகையைச் சுருக்கிச் சொல்லுவோமிவண் முன்னம். திருவாய்மொழியில் எட்டாம்பத்தின் ஆறாம் பதிகமான எல்லியுங் காலையும் என்பதற்கு முந்தின பதிகத்தில் ஆழ்வார் வெளியிட்ட தம்முடைய அபரிமிதமான கிலேசத்தைத் தீர்க்கக் கருதிய எம்பெருமான் உடனே நேரில் பதறிவந்து முகங்காட்டுவது வெள்ளக்கேடாகுமென்று கருதி, சிறிது பொறுத்துக் கலக்கைக்காகத் திருக்கடித்தானமென்னுந் திருப்பதியிலே யெழுந்தருளி யிருந்தான்; இதனையறிந்த ஆழ்வார், எம்பெருமான் இப்படியாகத் தம் திறத்துச் செய்கிற மையலைச் சிந்தித்து உள்ளடங்காத இனிமையை யெய்தி அவ்வினிமை தன்னையே பாசுரமாகப் புறப்பட விடுகிறார். ஒவ்வொரு பாட்டையுமெடுத்துக்காட்டிச் சுவைமிக விளக்குவோம்.

1. **எல்லியுங் காலையுந் தன்னை நினைந்தெழ**
நல்லவருள்கள் நமக்கே தந்தருள் செய்வான்
அல்லியந் தண்ணந்துழாய் முடியப்பனூர்
செல்வர்கள் வாழுந் திருக்கடித்தானமே.

பேருதவிபுரியும் தன்னையே இரவும் பகலும் நினைந்து உய்யுமாறு நமக்கே அசாதாரணமாகப் பேரருள் புரியுமவனும், குளிர்ந்தழகிய திருத்துழாய் மாலையணிந்த திருமுடியையுடையனுமான எம்பெருமானது தலம் எதுவென்றால், அத்தாணிச் சேவகம் புரிவதையே செல்வமாகக் கொண்டவர்கள் அச்செல்வம் பொலிய நின்று வாழப்பெற்ற திருக்கடித்தானமாகும்.

பாசுரம் தொடங்கும்போதே எம்பெருமான் தம்திறத்துச் செய்தருளும் பேரருளின் கனத்தைக் கொண்டாடிப் பேசுகிறார். பகலென்றும் இரவென்றும் பாராமல் எக்காலத்திலும் தன்னையே நினைத்து உஜ்ஜீவிக்கும்படி செய்து போருமிவ்வருளை என் சொல்ல வல்லேனென்வாய் கொண்டே யென்று திணறுகிறார். என்னுடைய குற்றங்களைப் பார்த்தானாகில் அவன் அருளுகைக்கு அவகாசமுண்டோ? நான் அகிஞ்சநனென்று என்னுடைய வெறுமையையே பார்த்துத் தன் பேறாக அருளுமிவ்வருள் என்னே! யென்று வியக்கிறார். கீழே மாயக்கூத்தன் பதிகத்திலே தாம்பட்ட துயரத்திற்காக அருள்செய்கிறானென்று நினையாதே தன் பேறாக அருள் செய்வதாகவே நினைக்கிறார். உண்மையில் இப்படித்தானே நினைக்க ப்ராப்தம். அதுவுமன்றி, இப்படிப்பட்டவருள் வேறொருவர் திறத்திலன்றிக்கே தம் திறத்திலேயே செய்வதாகவும் கருதி "நமக்கே தந்தருள் செய்வா"னென்கிறார். தாம் பெற்றவருள் நித்யஸூரிகளும் பெற்றிலர் என்பதே ஆழ்வாருடைய திருவுள்ளம்.

"நல்லவருள் நமக்கே தருவான்" என்பது போதுமாயிருக்க 'நல்லவருள்கள்' என்று அருளின்மேல் பன்மை விகுதியிட்டுக் கூறினதும், மீண்டும் 'அருள் செய்வான்' என்றதும் உற்று நோக்கப்படுமிடத்து, தாம் பெற்றவருளின் கனம் மிகச் சீரியதென்று அறிவிக்கப்பட்டதாகும். அந்தச் சீர்மையை ஈண்டு விவரித்துக் காட்டுவோம்.

முதற் பிரபந்தமான திருவிருத்தத்தில் "பெருங்கேழலார் தம் பெருங்கண்மலர்ப் புண்டரீகம் நம்மேலொருங்கே பிறழவைத்தார் இவ்வகாலம், ஒருவர் நம்போல்வருங் கேழ்பவருளரே தொல்லைவாழியம் சூழ்பிறப்பு மருங்கே வரப்பெறுமே? சொல்லு வாழி மடநெஞ்சமே!" என்னப் பண்ணினவருள் முதன்மையான அருள். பிரளய வெள்ளத்தி லழுந்தினபூமியை யெடுப்பதற்கு மஹாவராஹரூபியான ஞானப்பிரான் தம்முடைய செந்தாமரைப் பூப்போன்ற திருக்கண்களால் நம்மைக் கடாக்ஷித்தருளினார்; அவரோடு பொருந்திய

ஸம்பந்தம் பெற்றவர் நாம் தவிர வேறு யாரேனுமுளரோ? எவருமிலர்; இவ்வுறவு நமக்கே அஸாதாரணம். நம்முடைய வாழ்வு ஒருநாள் வரையிலே தொலைந்து போம் வாழ்வல்லவே; இங்ஙனே வாழ்ச்சிபெற்ற நமக்கு ஸம்ஸாரத்துன்பம் அருகிலும் வரக்கூடுமோ? சொல்லாய் நெஞ்சமே! என்று களித்துப் பேசும்படி பண்ணின திருவருள் முதன்மையானது.

எம்பெருமான் இங்ஙனே எதற்காக வருள் செய்தானென்பதுபற்றி ஆசாரியர்கள் அருளிச்செய்திருப்பது மிக வற்புதமானது. ஆசார்ய ஹ்ருதயத்தில் இரண்டாம் பிரகரணத்தில் "அதுக்கு ஹேது ஊழிதோறும் சோம்பாது" என்றுள்ள சூர்ணையின் ஸாரமான கருத்தை இங்குக் கூறுவோம். உலகில் பயிர் செய்பவர்கள் தங்கள் முயற்சி பழுது பட்டாலுங் கூட சோம்பிக் கைவாங்காமல் பின்னையும் பயிர் செய்வதிலேயே முயல்வது போல, எம்பெருமான் கற்பந்தோறும் செய்துபோரும் ஸ்ருஷ்டி பயன்படாதிருக்கவும் அதில் கைவாங்காமல் என்றேனுமொரு நாள் பலிக்குமென்று உகந்து மேன்மேலும் ஜகத்ஸ்ருஷ்டியைப்பண்ணி ஸ்ருஷ்டித்த ஜகத்தில் உட்புகுந்து, அறியவேண்டுமர்த்தங்களையெல்லாம் அறிவிப்பனவான நூல்களையும் வெளியிட்டு, திருப்பாற்கடலிலே திருவனந்தாழ்வான் மீதேறிப் படுக்கை வாய்ப்பாலே கண்வளர்ந்தருளுகிற பாவனையாய் ஜகத்தைக் காக்கும் விரகு சிந்தித்து, சிந்தித்த உபாயத்திற்குத் தகுதியாக என்றேனும் கட்கண்ணால் காணக்கூடாத தான் மனிசர் பிறவியில் தோன்றிக் கண்காண வந்து 'எனக்கு அடிமையாவாருண்டோ?' என்று தேடியும் கிடைப்பாரில்லாமையாலே மிருகங்களைக்கொண்டே மிருகம் பிடிப்பது போலவும், பறவைகளைக்கொண்டே பறவை பிடிப்பதுபோலவும் ஸம்ஸாரிகளைக்கொண்டே ஸம்ஸாரிகளைப் பிடிக்கவேணுமத்தனையென்று கருதி 'அதுக்கு ஆவார் ஆர்?' என்று தேடி, பண்டொருநாள் உலகளந்த காலத்தில் தன்னுடைய திருவடித்தாமரை எவ்வளவு பரம்பியதோ அவ்வளவும் தன்னுடைய திருக்கண்களைப் பரப்பிப் பார்த்த விடத்திலும் ஓரிடத்திலும் அதுக்கு ஆவாரைக் காணமல், "மன்னுடைய விபீடணற்கா மதிளிலங்கைத் திசைநோக்கி மலர் கண்வைத்த" என்றும் "அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும்" என்றும் சொல்லுகிறபடியே தனக்குப் பள்ளமடையான தென்திசையிலே மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்துகொண்டிருந்த இவர் மேலே அத்திருக்கண்ணோக்கம் பட "எங்கும் பக்க நோக்கறியான் என் பைந்தாமரைக் கண்ணனே" (திருவாய்மொழி 2—6—2) என்று தாமே வியந்தே கூறும்படி பெரிய பிராட்டியார் முதலான நாய்ச்சிமார் திருமுலைத்தடத்தாலே நெருக்கியணைந்தாலும் அவர்களைப் புரிந்து பாராதே தம்மையே பார்த்துக் கொண்டிருக்கும் படியான விசேஷ கடாக்ஷம் செய்தது ஒப்பற்ற திருவருளாகும்.

இதற்குமேல் "**மயர்வற மதிநல மருளினன்**" என்னும்படி செய்தவருள் இதற்கும் மேற்பட்டதென்னலாம். மயர்வற மதிநல மருளுகையாவது என்னென்னில்; இருள் துயக்கு மயக்கு மறப்பு என்கிற நான்கு வகையான அஜ்ஞானங்கள் தீரும்படி செய்து நல்ல ஞானத்தையும் பக்தியையும் அருள் செய்கை. அஜ்ஞானத்தில் நான்கு வகைகளாவன-ஒருவன் ஒரு விஷயத்தை அடியோடு தெரிந்துகொள்ளாமலிருப்பதுண்டு; இதற்கு **இருள்** என்று பெயர். தெரிந்து கொள்வதை நிச்சயமாகத் தெரிந்து கொள்ளாமல் சந்தேகமாகத் தெரிந்துகொள்வதும் அஜ்ஞானமே. இதற்குத் **துயக்கு** என்று பெயர். சந்தேகமாக வல்லாமல் நிச்சயமாகத் தெரிந்துகொண்டும் உள்ளது உள்ளபடியன்றிக்கே மாறுபாடாகத் தெரிந்து கொள்வதும் அஜ்ஞானமே; இதற்கு **மயக்கு** என்று பெயர். சந்தேகமாகவும் மாறுபாடாகவுமல்லாமல் உள்ளபடி யுணர்ந்திருந்தும் அது மறக்கப்பட்டொழியுமேயானால் மறப்பாகிய அதுவும் அஜ்ஞானமே. ஆக இப்படிப்பட்ட அஜ்ஞானங்களை அகற்றி ஞான பக்திகளைத் தந்தருளினது மிக மேம்பட்ட வருளன்றோ. தந்தருளின அந்த ஞானபக்திகளை "காதல் கடல்புரைய விளைவித்த காரமர் மேனி" என்றும் "காதல் கடலில் மிகப் பெரிதால்" என்றும் "என் காதல் மண்திணி ஞாலமுமேழ்கடலும் நீள்விசும்பங் கழியப் பெரிதால்" என்றும் சொல்லும்படி மேன்மேலும் மிக மிக வளர்த்துக்கொண்டு போருவது ஒப்புயர்வற்ற திருவருளன்றோ? ஆக இவற்றையெல்லாங் கருதி "நல்லவருள்கள் நமக்கே தந்தருள் செய்வான்" என்றருளிச் செய்தபடி.

அல்லியந் தண்ணந்துழாய் முடியப்பன்-இப் பதிகத்தின் கீழ்ப்பதிகத்தில் (பா-3.) "முடி சேர் சென்னியம்மா! நின்மொய்பூந் தாமத் தண்டுழாய், கடிசேர்கண்ணிப் பெருமானே யென்றென்றேங்கி யழுதக்கால்" என்று, தோளிணை மேலும் நன்மார்பின் மேலும் சுடர்முடி மேலும் தாளிணை மேலும் புனைந்த தண்ணந் துழாயுடையம்மா னாகிய பரமன் திருமுடியிலே திருத்துழாய் மாலையை யணிந்துகொண்டு காட்சி தர வேணுமென்று விரும்பி, அங்ஙனம் காட்சி தாராமையினால் பொருமிப் பொருமி யழுத அழுகைதீர அல்லியந் தண்ணந்துழாய் முடியப்பனாகக் காட்சி தந்தருள, இதையும் ஒரு நல்லவருளாகக் கருதியருளிச் செய்கிறபடி. பெரும்பசியன் பெருஞ்சோற்றுத் திரளைக் கண்டு உகக்குமாபோலே ஆழ்வார் திருத் துழா யலங்கலணிந்த திருமாலைக் கண்ட வாறே உள்ளம் பூரிப்பரன்றே; இதனின்மேற் பட்ட அருள் இல்லையென்றும் கருதுவர். இப்படி அருளே வடிவெடுத்த பெருமான் வாழுமிடம் எதுவென்ன, **செல்வர்கள் வாழுந் திருக்கடித்தானம்** என்கிறார்.

செல்வர்கள் வாழுமென்றது தனிகர்கள் வாழுமிடம் என்றபடியன்று; "கொள் ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ் செல்வம் நெருப்பாக" என்று கீழே யருளிச்செய்த இவ்வாழ்வார் ஆபாஸமான செல்வத்தை ஒன் றாக மதிப்பவரல்லரே. கஜேந்திராழ்வானும் இளையபெருமாளும் விபீஷணாழ்வானும் கைங் கர்ய ருசியுடைமையே காரணமாக முனிவர் களால் செல்வர்களாக வழங்கப்பட்டுள்ளார் கள்; முதலையின்வாயிற் கோட்பட்டு உதிர மொழுக நின்ற கஜேந்திராழ்வான் "ஸ துநாக வர: ஸ்ரீமாந்" என்று செல்வனாகச் சொல்லப் பட்டான். அத்துன்ப நிலையிலும் கையிற் பறித்த தாமரைப்பூவைத் திருமால் திருவடி களிலே சமர்ப்பித்துக் களிக்கவேணுமென்று அவன் கொண்டிருந்த குதுகலமே இங்குச் செல்வமாகக் கருதப்பட்டது. இளையபெரு மாள் [இலக்குமணன்] மண்வெட்டியையும் புட்டுக்கூடையையும் கையிலே கொண்டு காட்டுக்குப் புறப்பட்ட தன்மைக்குச் சேர "லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:" என்னப்பட் டான்; ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்ய விரும்பியிருந்த மையே அவனுக்குச் செல்வமாகச் சொல்லப் பட்டது. விபீஷணாழ்வான் இராவணனாலும் தூரத்தித் தள்ளப்பட்டு வானரமுதலிகளா லும் தகர்க்கப்பட்டு ஆகாசத்திலே தத் தளித்து நிற்கும் நிலையிலே "அந்தரிக்ஷகத: ஸ்ரீமான்" என்று செல்வனாகச் சொல்லப்பட் டான்; இராமபிரான் திருவடிகளிலே அவன் கொண்டிருந்த திடமான பத்தியே இங்குச் செல்வமாகக் கருதப்பட்டது. இப்படிப்பட்ட வர்களே செல்வர்களாவர்; நிச்சலும் திரு மாலின் திருப்பணிகளிலே ஊன்றினவர்கள் வாழுமிடம் திருக்கடித்தானம் என்றதா யிற்று.

இவ்வாழ்வார் தாமே ஒரு பதிகத்திற் குப் பயனுரைக்குமிடத்து "உலகிலேந்து பெருஞ் செல்வத்தராய்த் திருமாலடியார் களைப் பூசிக்க நோற்றார்களே" என்றருளிச் செய்துள்ளார்; திருமாலையும் திருமாலடியார் களையும் பூசிக்க வாய்க்குமாகில் பெருஞ்செல் வம் திரட்டுவதும் பாங்கேயாகுமென்க. ஆகவே பகவத் பாகவத ஸமாராதனமே போதுபோக்கான தனிகர்கள் வாழுமிடம் என்றலும் பொருந்தும்.

(தொடரும்)

திருக்குற்றாலம் : *திருக்குற்றாலநாத சுவாமி கோயிலில் ஐப்பசி விசுத்திருவிழா* 8-10-61 *முதல்* 17-10-61 *வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசை யரங்கு களும் நடைபெற்றன.*

திருச்சி மலைக்கோட்டை : *தாயுமானவர் கோயிலில்* 8-10-61 *ல் திருமுறை அர்ச்சனைத் துவக்க விழாவை தமிழ்நாடு அறநிலையத்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார். பி. ஏ. பி. எல்., அவர்கள் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமை யில் ஆரம்பித்து வைத்தார்கள்.*

திருவெண்காடு : *சுவேதாரண்யேசுவரர் கோயிலில் இலட்சார்ச்சனை சண்டிஹோமம் பூர்த்தி விழா* 19-10-61 *ல் நடைபெற்றது.*

திருக்குறுங்குடி

ஏவினர் கலியார் நலிகவென் றென்மேல்
எங்ஙனே வாழுமாறு, ஐவர்
கோவினர் செய்யும் கொடுமையை மடித்தேன்
குறுங்குடி நெடுங்கடல் வண்ணா,
பாவினா ரின்சொல் பன்மலர் கொண்டுன்
பாதமே பரவி நான்பணிந்து, என்
நாவினால் வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய்.

—திருமங்கையாழ்வார்.

நம்பியைத்தென் குறுங்குடிநின்ற, அச்
செம்பொனேதிக ழும்திருமூர்த்தியை
உம்பர்வானவ ராதியஞ் சோதியை
எம்பிரானையென் சொல்லி மறப்பனோ

—நம்மாழ்வார்.

ஆழ்வார்களால் மங்கள சாசனம் செய்யப் பெற்ற திவ்விய தேசங்கள் நூற்றெட்டினுள் பாண்டி நாட்டில் இருப்பவை பதினெட்டு. அவற்றில் ஒன்று **திருக்குறுங்குடி** என்னும் திருப்பதி. இது திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குனேரிப் பகுதியிலிருக்கிறது. சேரமாதேவி இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 18 கல் தொலைவிலுள்ளது. பாபநாசத்திலிருந்து 34 கல், நாகர் கோயிலிலிருந்து 28 கல், திருநெல்வேலியிலிருந்து 30 கல் தூரத்திலுமிருக்கிறது. இவ்விடங்களிலிருந்து மோட்டார் பஸ்கள் திருக்குறுங்குடி வழியாகச் செல்கின்றன. தங்குவதற்கு, சத்திரம், பிரயாணிகள் விடுதி இவை இருக்கின்றன.

அழகிய சோலைகள் சூழ்ந்த, இயற்கை வளம் நிறைந்த ஊர் திருக்குறுங்குடி. குறுகியவன்குடி—குறுங்குடியெனக் குறுகினின்றது. குறுகியவன் என்பது திருமால் குள்ள வடிவமாக வாமனாவதாரம் எடுத்ததைக் குறிப்பது. யாசகம் கேட்கவந்த அவனுடைய உடம்பு குறுகியது இயல்புதானே. இப்பதிக்கு சித்தாஸ்ரம், வாமனாஸ்ரம், தட்சண பதரி, சௌகரக்ஷேத்ரம் என்ற பெயர்களும் உண்டு.

திருக்கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. வடக்கு, தெற்கு, கிழக்கு இந்தப் பக்கங்களில் போக வர வாசல்கள் உண்டு. மேற்கு வாசல் அடைத்திருக்கிறது. கோயிலில் மூன்று பிரகாரங்கள் இருக்கின்றன. கிழக்கு வெளிவாயிலில் மொட்டைக் கோபுரம்தான். இந்த வாயிலைத்தாண்டி உள்ளே நுழைந்ததும் யாளி மண்டபமும், இரதிமண்டபமும் இருக்கின்றன. அதற்கு வடக்கே ஜீயர் சுவாமிகள் மடமும், தெற்கே குத்துப் பிறை இசக்கியம்மன் கோயிலும் உள்ளன. இரண்டாவது வாயிலில் ஐந்து மாடங்களுடைய கோபுரம் இருக்கிறது. அதற்கு, சித்திர கோபுரம் என்று பெயர். பெயருக்கு ஏற்ப அதில் பல அற்புத சிற்பங்கள் நிறைந்துள்ளன. இரண்டாவது உள்தெற்குப் பிரகாரத்தில் இசக்கியம்மன் சந்நிதியும், கைசிகமண்டபமும் (பகல் பத்து உற்சவம் நடக்கும் இடம்) இருக்கின்றன. அதே மேற்குப்பிரகாரத்தில் காரண்ட புஷ்கரணி, கிருஷ்ணன் சந்நிதி, திருவாய்மொழி மண்டபம் (இராப் பத்து உற்சவம் நடக்கும் இடம்) இவைகள் உள்ளன. **காரண்டபுஷ்கரணி** இந்த தலதீர்த்தம். (காரண்டம்—காகம்). இதன் கரையில் தலவிருட்சமான **பனைமரம்** இருக்கிறது. வடகிழக்கு மூலையில் மணவாள மாமுனிகள் சந்நிதியைக் காணலாம்.

பின்னர் மூன்றாவது உட்பிரகாரத்தை அடைந்தால் தென்புறம் இலட்சுமிநரசிம்மர், ஞானப்பிரான் (வராகமூர்த்தி) சந்நிதிகள் உள்ளன. மேற்குப்பிரகாரத்தில் **குறுங்குடி வல்லித்தாயார்** (தெற்கு நாச்சியார்), தசாவதாரம், சீனிவாசன், வடக்கு நாச்சியார் சந்நிதிகள் இருக்கின்றன. வடக்கு நாச்சியார் சந்நிதியை ஆண்டாள் சந்நிதியாகவும் சொல்லப்படுகிறது. வடமேற்கு மூலையில் திருமங்கையாழ்வார் சந்நிதி இருக்கிறது. அதன் இருபுறமும் ஆஞ்சநேயர், கருடாழ்வார் எழுந்தருளியுள்ளனர்.

கர்ப்பக்கிரகத்தில் எம்பெருமான் நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுகமண்டலத்துடன் சேவைசாதிக்கிருர். ஸ்ரீதேவி, பூதேவி, பிருகு, மார்க்கண்டேயர், பிரமன் முதலியவர்களும் எழுந்தருளியிருக்கின்றனர். கர்ப்பக்கிரகத்துக்கு வடக்கே **வீற்றிருந்த நம்பி, பள்ளி கொண்ட நம்பி** இவர்களுடைய சந்நிதிகள் காணப்படும். வீற்றிருந்த நம்பி சந்நிதிக்கு முன்னுல் மகாபலிச் சக்கரவர்த்தியின் உருவம் இருக்கிறது. அதற்கு முன்னுல் சிவபெருமான் சந்நிதி இருக்கிறது. அவருடைய திருப்பெயர்கள் **மகேந்திரகிரிநாதர், பக்கம்நின்ருர்** என்பன. அம்பாள் **பாகம் பிரியாள்** உற்சவமூர்த்தி மாத்திரமே இருக்கிறது. இவைகளுக்கு வடபுறம் சேனைமுதலியார், காலபைரவர் சந்நிதிகள் இருக்கின்றன.

எம்பெருமானின் திருநாமங்கள் ஸ்ரீ வைஷ்ணவ நம்பி, நின்ற நம்பி, வடிவழகிய நம்பி, நம்பிராயர், இராமானுஜ நம்பி என்பன. ஸ்ரீ பாஷ்யகாரிடம் ஒரு சிஷ்யன்போல் வந்து வேதாந்த அர்த்தம் கேட்டபடியால் எம்பெருமானுக்கு **வைஷ்ணவ நம்பி** என்ற பெயர் ஏற்பட்டது. இறைவன் எழுந்தருளியிருப்பது **பஞ்சகேதகவிமானம்.** இப்பதிக்குப் பெருமை தருவது இங்குள்ள ஐந்து பெருமாள் சந்நிதிகள். கோயிலுக்குள் நின்ற, வீற்றிருந்த, கிடந்த நம்பிகளும், ஆற்றங்கரையில் **திருப்பாற்கடல் நம்பி,** ஐந்து கல் மேற்கே மலையில் **மலைமேல் நம்பி** இவர்களும் எழுந்தருளியிருக்கின்றனர்.

இங்கு கோயிலுக்குள் காரண்டபுஷ்கரணி, கோயிலுக்குக் கிழக்கே தெப்பக்குளம், நம்பியாறு முதலிய தீர்த்தங்கள் இருக்கின்றன. கோயிலில் ஐந்துகால பூசை நடைபெறுகிறது. கார்த்திகை மாத சுக்கில பட்ச வைஷ்ணவ ஏகாதசியன்று கைசிக ஏகாதசியும், பங்குனியில் பிரமோற்சவமும் முக்கியமான திருவிழாக்கள். இத்தலத்தில் எம்பெருமான் அனுக்கிரகத்தால் நம்மாழ்வார் திரு அவதாரம் செய்தனர் என்பர். திருமங்கையாழ்வார் திருநாட்டுக்கு எழுந்தருளியதும் இங்கேதான். அவருடைய கோயில் ஊருக்கு வடகிழக்கே வயல் நடுவே இருக்கிறது.

இந்த கோயில் மிகப் பழமையானது. மதில்கள் மிகவும் உயரமானவை. மொட்டைக் கோபுரத்தில் உள்ள இராமர், கஜசம்மாரமூர்த்தி, தட்சணாமூர்த்தி, நரசிம்மமூர்த்தி, திரிவிக்கிரமர் முதலிய உருவங்களும் இரதிமண்டபத்திலிருக்கும் இரதி, மன்மதன், கர்ணன், அர்ச்சுனன் முதலிய உருவங்களும் மணவாள மாமுனிகள் சந்நிதி வீரப்ப நாயக்கர் மண்டபத்திலுள்ள நரசிம்ம இரணிய சண்டை, இரணியவதம் முதலியவையும் அற்புதச் சிற்ப வேலைப்பாடுடையவை.

இத்தலத்து மூர்த்தியை, பெரியாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய நால்வரும் நாற்பது பாசுரங்களில் பாடியருளியிருக்கின்றனர். திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் இவர்களுடைய பாடல்களில் அகப்பொருட்சுவைப் பொதிந்துள்ளது. மேலும், பிள்ளைப் பெருமாளையங்கார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலியவர்களும் இப்பதியைப் பற்றிப் பாடியுள்ளனர். அழகிய நம்பியுலா, நம்பிபிள்ளைத் தமிழ், நம்பி சதகம், தாய்மகள் ஏசல், கைசிக ஏகாதசிப் புராணம் முதலியவைகளும் திருக்குறுங்குடியைப்பற்றியனவே. தலமகாத்மியத்தைத்தமிழில் அச்சிட தேவஸ்தானத்தார் ஏற்பாடு செய்வதாகத் தெரிகிறது.

மொட்டைக் கோபுரம், சித்திரகோபுரம், கர்ப்பக்கிரகச் சுவர்கள், திருமங்கையாழ்வார் கோயில் சுவர்கள் முதலியவைகளில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கோயிலைப் பற்றிய செப்பேடுகளும் இருக்கின்றன. அவை மாறவர்மன் சுந்தரபாண்டியன், மாறஞ்சடையன், விஜயநகர சதாசிவராயர், திருவாங்கூர் ஆதித்தியவர்மர் முதலிய அரசர்களின் காலத்தவை. கோயில் மணியில் கொல்லம் 644-ஆர்:

ஆண்டுச் சாசனம் பொறிக்கப் பெற்றிருக்கிறது. நாட்டாற்றுப் போக்கு வைகுந்த வள நாட்டிலுள்ள திருக்குறுங்குடி அழகிய நம்பி கோயில் என்று அவைகளில் குறிக்கப்பட்டிருக்கின்றன. கோயிலுக்கு நிலம், ஊர்கள் வழங்கியதையும், கால்வாய் வெட்டி அணைகட்டியதையும் அவை அறிவிக்கின்றன.

இந்த ஊரிலும் அதைச் சுற்றியும் குறுங்குடியம்மன், கருங்காவுண்ட ஐயனுர், மாடன், திருஅணிலீசர், மயூரநாதர், ஆகாசசாத்தன் முதலியவர்களுடைய கோயில்களும் இருக்கின்றன. நம்பியாற்றில் சற்று தொலைவில் உடையவர் அமர்ந்திருந்ததாகச் சொல்லப்படும் பாறையைத் திருப்பரி வட்டப்பாறை என்று வழங்குகின்றனர்.

தாலத்து இழிகுலத்துச் சண்டாளர் ஆனாலும்
மேலத் தவத்தோரின் மேன்மைத்தே—கோலக்
குறுங்குடி வாழ்மாயன் குரைகழற் காளாகப்
பெறுங்குடியாய் வாழ்வார் பிறப்பு.

—பிள்ளைப்பெருமாளையங்கார்

திருமயிலை : கபாலீசுவரர் கோயிலில் 10-10-61 முதல் 19-10-61 வரை நவராத்திரி விழா நடைபெற்றது. அதுபோது சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

திருமாலிருஞ்சோலை : கள்ளழகர் கோயிலில் சுந்தரராஜப் பெருமாளின் தைலக்காப்பு விழா 19-10-61 முதல் 21-10-61 வரை நடைபெற்றது.

திருப்பரங்குன்றம் : சுப்பிரமணிய சுவாமி கோயிலில், திருப்பனந்தாள் காசிமடத்து ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற கந்தபுராண படனநிதியிலிருந்து கந்தபுராண படனம் 8-11-61 முதல் ஒரு ஆண்டு காலத்திற்கு வித்துவான் திரு. அன்பு கருணையானந்தா அவர்களால் ஒவ்வொரு ஞாயிறு, செவ்வாய், வெள்ளிக்கிழமைகள் தோறும் மாலை 6 மணி முதல் 8 மணிவரை நடைபெறும்.

மதுரை : மீனாட்சிசுந்தரேசுவரர் கோயிலில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற நிதியிலிருந்து கந்தபுராண விரிவுரை திரு. க. சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் 8-11-61 முதல் 13-11-61 வரை நிகழ்த்தப்பெறும்.

செட்டிகுளம் : ஏகாம்பரேசுவரர் தெண்டாயுதபாணி சுவாமி கோயிலில் வார வழிபாட்டின் இரண்டாவது ஆண்டு விழா 20-10-61 ல் திரு. எல். ஜி. சுந்தரராஜுலு நாயுடு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சென்னை சூளை ; சுந்தரராஜப் பெருமாள், ஆஞ்சநேய சுவாமி கோயிலில் 20-10-61 முதல் 29-10-61 வரை இலட்சார்ச்சனை விழா நடைபெற்றது.

சூளை : சுந்தரராஜப் பெருமாள், ஆஞ்சநேய சுவாமி கோயிலில் 23-6-61 முதல் 5-7-61 வரையில் பிரம்மோற்சவம் நடைபெற்றது. 28-7-61-ல் சதகலச திருமஞ்சனம் நடைபெற்றது.

வீரவநல்லூர் : பூமிநாதர் மரகதாம்பாள் கோயிலில் திருமணத் திருவிழா 25-10-61 முதல் 3-11-61 வரை நடைபெற்றது.

மாயூரம் : மாயூரநாத சுவாமி கோயிலில் துலா மகோற்சவம் 17-10-61 முதல் 19-11-61 வரை நடைபெறும்.

சென்னை : கந்தசுவாமி கோயில் வசந்த மண்டப டிரஸ்டு—பங்களாவில் நவராத்திரியை முன்னிட்டு தினம் மேற்படி தேவஸ்தான திரு. நித்தியவாசி-பி. சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களால் லலிதா சகஸ்ரநாம பாராயணம் தேவி ஸ்தோத்திரமும் திரு. சைதை-ரூபாலசுந்தரம் அவர்களால் பக்கவாத்தியங்களுடன் தினசரி தேவார பாராயணமும் நடைபெற்றன.

சிவஞான போதம்

[திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இரண்டாவது சூத்திரம் முதல் அதிகரணம்

அத்விதீயம் எனச் சாந்தோக்கியத்திலும் பிற இடத்தும் வரும்சொல் **உடனாதல்** என்னும் பொருண்மையைத்தரும்; அதன் சொல்லியல்பு **இரண்டாவது அல்லது** எனப்பெயர்த்து உரைத்தற்கு உரியதே—என முன்னர்க் கூறப்பட்டது. மேலும் இச்சொல் பொருண்மையால் **வேறாகி**, கலப்பினால் பிரிப்பின்றி **ஒன்றாய்**, பயன்தரும் நிலையில் **உடனாதல்** எனப்படும் மூவகை இயல்பும் ஒருங்கே தோன்ற நிற்கும் **சம்பந்தத்தைக்** குறிப்பதே என்பதும் இனிது விளக்கப்பட்டது. **அநந்நியம்** என்பதே அதன் கருத்து எனக்கொள்க.

இங்கு ஒரு தடை உண்டாகிறது: மூவகை இயல்பு (அநேகாந்தவாதம்) என்னும் குற்றம் ஆம்-என்பது. அக்குற்றம் இங்கு இல்லை என்பதை விளக்குதற்கு ஓர் உவமைக்கண்ணே மூன்றியல்பும் இருத்தலைக் காட்டுகின்றார் மெய்கண்டார்:—

பொன்னின் மாற்றைக் காண்பதற்குக் கொள்ளும் உரைகல் அரக்கை உருக்கி அதனோடு கற்பொடியைக் கலந்து ஆக்கப்படுவது. அதன் கண் கற்பொடி, தான் வேறாயினும், அரக்கோடு கூடி அரக்கே எனும்படி ஒன்றாய், பொன்னைத் தேய்த்தற்கண் அதனோடு உடனாகி மெத்தெனத் தேய்க்கும். இதுபோல முதல்வன் உயிர்களோடு ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்பன் என்கின்றார் ஆசிரியர்.

இவ்வுவமை அகநானூற்றில் தலைவன் தலைவி ஒன்றி உடனாதற்குக் காட்டப்பட்டுள்ளது: **'சிறுகாரோடன் பயினொடு சேர்த்திய—கற்போற் பிரியலம்'** என்பது அது (அகம் 1.)

வேதாகமங்களைக் கற்றோர்க்கு இங்கு வேறோர் ஐயம் எழும்: எல்லாமாகி வேறாய் உடனாதல் என்பது முதல்வனுக்கு உரிய இலக்கணமாகக் கூறப்பட்டது. ஆனால், உபநிடதங்களும், பகவற்கீதையும் இவ்வியல்பை உயிர்களுக்கும் இருப்பதாகக் கூறுகின்றனவே: ஆதலால் இது முதல்வனுக்கே உரிய சிறப்பியல்போ, அன்றி முதல்வனுக்கும் உயிர்களுக்கும் உள்ள பொதுவியல்போ என்பது ஐயம்.

"நான்மனு; சூரியனும் ஆயினேன்;" என்றும்; **"நான் பிரமம் என எவன் அறிகின்றானோ அவன் இவையெல்லாம் ஆகின்றான்"** என்றும் **வாமதேவர்** என்னும் முனிவர் கூறினார்-எனப் பிருகதாரணியம், 3-ஆம் அத்தியாயம், 4-ஆம் பிராம்மணம் 10-ஆம் மந்திரம் கூறுகின்றது. இவ்வாறு இருக்கு வேதத்தும், சருவஞ்ஞானோத்தர ஆகமத்தும் உயிர்கள் எல்லாமாய் வேறாய் உடனுமாய் நிற்கும் என்னும் பொருள்படத் தொடர்கள் வருகின்றன—எனின்,

இவ்வையம் வேண்டா. ஞானயோகத் தியான சமாதிகளால் பாசத்தின் நீங்கிச் சிவோகம்பாவனை புரிவோர்க்குச் சிவபிரான் **"சேர்வார் தாமேதானாகச் செயுமவன்"** எனத் திருஞானசம்பந்தர் அருளிச் செய்தபடி, அவர் தம் ஆன்மாவின் கண் புகுந்து வேற்றுமையின்றித் தோன்றுதலான் அந்த முத்தான்மாக்கள் முத்திநிலையில் அவ்வாறு கூறும்; அதுபற்றி அஃது உயிர்களது இயல்பென்று கொள்ளப்படமாட்டாது, முதல்வன் இயல்பென்றே கொள்ளப்படும்.

"............தமியேன் உளம்புகுதல் யானே உலகென்பன் இன்று"

(முதல்வன் பாசக்கூட்டத்தின் நீங்கித் தனியே நின்ற என்னகத்துச் சோகம்பாவனையாற் புகுந்து வேற்றுமையின்றித் தோன்றுதலால் யானே உலகெல்லாம் என்பேன் ஆயினேன் இம்முத்திக்காலத்து) என்கிறார் **மெய்கண்டார்**. இதனால் மெய்கண்ட தேவர் மெய்ந்நூற் பொருள்களைத் தம் மெய்யநுபவத்தைச் சார்த்தி உணர்ந்து கோவை செய்து தெளிவித்தல் புலனாம்.

கண்ணபிரான் சிவதீக்கை பெற்றுச் சிவோகம்பாவனையில் தோர்ந்து நின்ற சீவன் முத்தர் என்பது அவர் காலத்து இருந்த பாண்டவர்களும் அடுத்து வந்தவர்களும் கொண்ட கொள்கை. பிற்காலத்து விஷ்ணு அவதரிப்பார் என்றும் கண்ணபிரான் அவர் அவதாரங்களுள் பூரண அவதாரம் என்றும் பாகவத மதத்தினர் கொண்டு அவரையே பரமாத்மா என வைத்துப் பகவத்கீதை முதலியவற்றிற்கு உரைகள் எழுதினர். இது பின் வரும் பாரதச் செய்தியால் விளங்கும்.

"யான் இவ்வுலகனைத்தையும் ஒரு கூற்றினால் வியாபித்திருக்கின்றேன்" — கண்ணபிரான் கூற்று (பகவத்கீதை அத். 10 சுலோ. 42).

"இவ்வாறு கூறி மகாராஜாவே மகா யோகீசுவரராகிய அரி பார்த்தனுக்கு மேலான விச்சுவரூபத்தைக் காட்டினார்"—(பகவற்., 11, 9.)

"பிறசெயல் அனைத்தையும் கைவிட்டு என்னையே வழிபடுக" எனக் கண்ணபிரான் கூறக் கேட்டு, அருச்சுனன் **"அதனை உறுதியாகக் கொண்டேன்"** என்றனன்.

ஆயின், தன் ஆயுள் முடியும்வரை சிவ பூசையைக் கைவிடவில்லை. திருக்கயிலைக்குச் செல்லுங்கால் இராப்போதில் சிவபூசை செய்யக்கருதிக் கண்ணனைச் சிவனாக எண்ணி இட்ட பூக்கள் தன் கருத்தின்படி சிவபிரான் முடிமேல் இருக்கக் கண்டு மகிழ்ந்தான் என்று பாரதத்துக் கேட்கப்படுகின்றது.

இதனால் கண்ணபிரானைச் சீவன் முத்தராகவும், ஞானாசிரியனாகவும் தோழனாகவுமே அருச்சுனன் உணர்ந்தான் என்பதும், அதனால் கண்ணபிரான் கூற்றைச் சிவன் கூற்றாகவும், காட்டிய காட்சியைச் சிவனது பெருவடிவெனவும் அருச்சுனன் உணர்ந்தனன் என்பதும் அதுவே பாரதம், பகவற்கீதை என்பவற்றின் மரபுபற்றிய உண்மைக் கருத்து என்பதும் உணரத்தக்கது. இங்ஙனம் பொருள் கொள்ள விரும்பாதார் அருச்சுனனுக்குப் பகவற்கீதை பயன்படவில்லை என்பர்.

இவ்வதிகரணத்தின் தொகைப்பொருள்:- 'உலகத்தைப் படைக்கும் முதற் பொருள் உலகத்தின் வேறு, ஒன்று, எவ்வாறு நிற்கும்? என்பது வினா.

(அ) **பூருவ பக்க விடை:**

(i) முதல்வனும் உயிர்களும் பொன்னும் அதனால் செய்யப்பட்ட அணியும்போல ஒன்றே.—இவ்வாறு கூறுவோர் பரிணாமவாதிகள், பழைய ஒருபொருள் கொள்கையினர்.

(ii) கயிறும் அதன் கண் தோன்றும் அரவும் போலப் பொருள் ஒன்றே.-இவ்வாறு கூறுவோர் மாயாவாதிகள், ஒரு பொருட் கொள்கையினருள் பிற்காலத்தவர்.

இவற்றுக்குச் சித்தாந்த சைவர்கூறும்முடிபு: முதல்வன் கலப்பினால் உடலின்கண் உயிர் போல உயிர்களேயாய் நிற்பன்; இதனை அபேதம் என்று சொல்லுக; நீவிர் கூறும் அபேதம் பொருந்தாது. கடவுள் விகாரம் அடையார்; உலகம் பொய்யும் அன்று.

(ஆ) **பூருவபக்கம்:—**

முதல்வனையும் உயிர்களையும் சொல்லும் பொருளும் போலப் பேதா பேதம் என்போமே:—இவ்வாறு கூறுவோர் பாஞ்சராத்திர வைணவர்கள்!

இதற்குச் சித்தாந்த சைவர் கூறும் மறுமொழி:—சொல்லும் வேறே, பொருளும் வேறே. அவற்றின் சம்பந்தத்தைப் பேதா பேதம் என்றலே பொருந்தாது. முதல்வன் உயிர்க்குயிராய் இருந்து செலுத்துகின்றான்; காயத்திரியில் **பிரசோதயாத்** என்னும் சொல் இக்கருத்தே பற்றியது. ஆன்ம போதமும் கண்ணொளியும்போல உடனாகி நிற்கின்றான் என்றலே உண்மையைத் தெளிய உணர்த்தும் முறை ஆகும்.

(இ) **பூருவ பக்கம்:**

முதல்வனும் உயிர்களும் ஒளியும் இருளும்போல மறுதலைப் பொருள்கள்:—இப்படிச் சொல்லத் துணிவோர் மத்துவ வைணவர்:

சித்தாந்த சைவர்களது மறுமொழி

வேதங்களுக்கு எப்படியும் பொருள் கூறலாம் என்று மனம் போனபடி பொருள் செய்யவேண்டா. பொருட் பெற்றிபடி முதல்வனும் உயிர்களும் இரு வேறு அடிப்படைப் பொருள்களே; ஆயினும், ஒன்றற்

கொன்று சம்பந்தப்படாத பொருள்கள் அல்ல. முதல்வன் காட்டுவோன், உயிர் காண்பவை.

கண்ணொளியும் ஞாயிற்றின் ஒளியும் போல் எனக் கூறுதலே பொருத்தம். இக் கருத்துக் காயத்திரியில் வரும் **ஸவிது:பர்க்கோ தேவஸ்ய** என்னும் பகுதியால் அறியத்தக்கது. தேவசூரியனது ஒளி—என்பது தொடரின் பொருள். தேவனும் அவன் அருளும் சூரியனும் ஒளியும் போல; உயிர் கண்போல—என்பது தாற்பரியம்.

"**பொற்பணி**போல் அபேதப் - பிறப்பில தாய் இருள்வெளிபோல் பேதமுஞ் **சொற் பொருள்**போல் பேதா பேதமுமின்றிப் பெருநூல் சொன்ன—அறத்திறனால் விளைவதாய் **உடலுயிர்கண் அருக்கன் அறிவொளி**போற் **பிறிவரும் அத்துவிதமா**கும்-சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றும்" என்னுஞ் **சிவப்பிரகாசச்** செய்யுள் மேற்கூறிய தொகைப்பொருளைக் கொண்டுள்ளது.

முதல் அதிகாரணம் முற்றிற்று.

சென்னை மயிலாப்பூர் திருவள்ளுவ நாயனார் கோயில் திருப்பணி

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தொண்டை நாட்டிலுள்ள திருமயிலாப்பூரில் திருவள்ளுவர் அவதரித்தார். அவர் பிறந்த இடத்தில் ஒரு திருக்கோயில் இன்றும் திகழ்கிறது. அவர் இயற்றிய திருக்குறள் உலகப் பொதுநூல். சாதி, மதம், நாடு முதலிய பேதமின்றி யாவரும் ஒப்புக்கொண்டிருக்கும் பெருமையுடையது. இத்தகைய பொதுமறையை உலகுக்களித்த திருவள்ளுவர் கோயிலின் முன் மண்டபம், மதில்சுவர்கள் முதலியவற்றைத் திருப்பணி செய்யவும், கல்யாண மண்டபம் ஒன்று கட்டவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்திருப்பணிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டு இருக்கிறது. இதற்காக ஒரு திருப்பணிக்குழுவும் அமைக்கப்பெற்றிருக்கிறது. அருள் உள்ளம் கொண்ட அன்பர்கள் தாராளமாகப் பொருள் உதவிபுரியுமாறு திருவள்ளுவர் கோயில் தருமகர்த்தர்களும், திருப்பணிக் குழுவினரும் வேண்டிக்கொள்கின்றனர். நன்கொடை அனுப்புவோர் "திரு. பி. ஜி. நடராஜன், பொருளாளர்-தர்மகர்த்தர், திருவள்ளுவர் கோயில், மயிலாப்பூர், சென்னை—4" என்ற முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

சென்ற திங்கள் வரை நன்கொடை ரூ. 12,797-00

இத்திங்களில் நன்கொடை

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி கோயில்	20,000-00
திருப்பனந்தாள்-காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்	10,000-00
மாயூரம்—ஸ்ரீ மாயூரநாத சுவாமி கோயில்	10,000-00
திருவாவடுதுறை மகா சந்நிதானம் அவர்கள்	1,000-00
பாலக்குறிச்சி திரு. பி. கே. இராஜரத்தினம்	251-00
சீர்காழி திரு. டி. குத்தாலலிங்கம் பிள்ளை, எம். ஏ.,	250-00
நாகப்பட்டினம் திரு. வி. பி. கே. காயாரோகணம் பிள்ளை	150-00
மஞ்சக்கொல்லை திரு. ஆர். சம்பந்த முதலியார்	51-00
சிதம்பரம் திரு. இரத்தினசபாபதி செட்டியார்	50-00
திருவெண்காடு திரு. டி. எம். சீனிவாச பிள்ளை	50-00
சீர்காழி திரு. சபாநாத முதலியார்	50-00
மாயூரம் திரு. ஏ. எம். எஸ். முத்தையன் செட்டியார்	25-00
மொத்தம் ரூ.	54.674-00

அண்ணாமலையார் தீபம்

உண்ணாமலை உமையாளொடும்
உடன்ஆகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைம்முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே.
—திருஞானசம்பந்தர்.

திருவண்ணாமலையில் திருக்கார்த்திகைத் தீபவிழா கார்த்திகை மாதத்தில் சிறப்பாக நடைபெறும். 13—11—61—ல் திருவிழா தொடங்குகிறது. 14-11-61 நான்காம் திரு நாள் முதல் **21-11-61** ஒன்பதாம் திருநாள் முடிய சக்திவிலாச சபை மண்டபத்தில் சமயச்சொற்பொழிவுகள் நடைபெறும். **22-11-61** அதிகாலை 4—மணிக்குப் **பரணதீபமும்**, அன்று மாலை 6-மணிக்கு மலை உச்சியில் **ஜோதிசுவரூப மகாதீபதரிசனமும்** நடைபெறும். பக்தகோடிகள் பல்லாயிரக்கணக்கில் வந்து வழிபடுவதற்கு அறங்காவலர்கள் சிறந்த ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர்.

நினைக்க முத்தித்தருவது திருவண்ணாமலை. பஞ்சபூதத்தலங்களில் இது தேயுத் தலம். தேவாரப்பாடல்களும், அருணகிரி நாதர் திருப்புகழ்ப் பாடல்களும் பெற்ற புகழ்வாய்ந்தது. திருமாலும் நான்முகனும் யாம்பிரமம் என்று செருக்கித்தருக்கி நின்றனர். இவர் அகந்தையை யொழிக்க சிவபெருமான் அழல்சோதி மலையாய் நீண்டு நின்றனன். அருணாசலம், சோணகிரி என்றால் சிவப்பு மலையென்று பொருள். மாலும் அயனும் அடி முடி தேடிக்காண முடியாது வருந்தினர். இறைவன் இலிங்கோற்பவமூர்த்தியாய் அவர்களுக்குக் காட்சியளித்து, "இது போன்றதோர் சோதியை ஆண்டுதோறும் கார்த்திகைத் திங்களில் காட்டுவோம்" என்று அருள் செய்தான். அதன்படியே கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரத்தன்று திருவண்ணாமலையில் திருக்கார்த்திகை விழாக் கொண்டாடப்பெறுகிறது. அண்ணாத்மலையாய் இறைவன் நின்றபடியால் அண்ணாமலையென்ற பெயர் ஏற்பட்டதென்றும் கூறுவர்.

மாணிக்கவாசகப் பெருமான், "எங்கள் பெருமான் பாதமிரண்டும் வினவில் பாதாளமேழினுக்கப்பால் சோதிமணி சொல்லில் சொல்லிறந்து நின்றதொன்மை" என்று அருளுகிறார். மேலும் அவரே,

பிரம னரியென் றிருவருந்தம் பேதமையால்
பரம மியாம்பர மென்றவர்கள் பதைப்பொடுங்க
அரனா ரழலுருவா யங்கே யளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்க மாடமோ

என்று அடிமுடி தேடிய உண்மையைக் கூறுகிறார். வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தில், "ஓரேனம் தனைத்தேட ஒளித்தருளும் இரு பாதத் தொருவன்" என்று கூறியிருக்கிறார்.

பஞ்சபூதங்களில் அக்கினியே சிறந்தது. சிவபெருமான் நிலம், நீர், தீ, வளி, வான், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற அட்டமூர்த்தங்களாய் விளங்குகிறான். இவ்வெட்டில், தீ, சூரியன், சந்திரன், ஆன்மா என்ற நான்கு மூர்த்தங்கள் அக்கினி. ஆகையால் வேதாகம புராணங்கள் இறைவனை உருத்திராக்கினி, சிவசோதி, பரஞ்சுடர் என்ற பெயர்களால் அழைக்கின்றன. தீ தன்னை யடைந்தவற்றின் அழுக்கைப் போக்கித் தன் மயமாக்கும். கடவுளும் ஆன்மாக்களின் ஆணவ இருளை நீக்கித் தன்மயமாக்குவன்.

திருவண்ணாமலையிலுள்ள மலை 2600 அடி உயரமுள்ளது. திருக்கார்த்திகையன்று மலை உச்சியில்தான் தீபம் ஏற்றுவார்கள். இந்த தீபத்தைப்போல் பெரிய தீபம் நம்முடைய நாட்டில் வேறெங்கும் இல்லை. மலை மேல் செப்புக் கொப்பறையில் நெய், கற்பூரம், துணி முதலியவற்றைப் பெய்து மாலை 6—மணிக்குத் தீபத்தை ஏற்றுவார்கள். இக் காட்சியை இலட்சக்கணக்கான மக்கள் கண்டு பேரானந்தம் அடைவர். இந்த தீபம் வெகு தொலைவுக்குத் தெரியும்; பல நாட்கள்

வரை எரிந்து கொண்டிருக்கும். தென்னுட்டுக் கோயில்கள் எல்லாவற்றிலும் கார்த்திகைத் தீபவிழா நடைபெறும். கோயிலின் முன்னுல் பனேயோலேகளால் கூண்டுகள்கட்டி எரியவிடுகின்றனர். சொக்கப்பனே என்று அதைச் சொல்லுவர். வீடுகளிலும் வரிசை வரிசையாக விளக்கேற்றிவைப்பார்கள். நம்முடைய நாட்டில் பண்டைக்காலந் தொட்டு கார்த்திகைத் தீபவிழா நடந்து வந்திருக்கிறதென்பதற்கு இலக்கியச் சான்றுகள் பல இருக்கின்றன. "மலேமேல் விளக்கு" "குன்றிலிட்ட தீபம்" என்ற பழமொழிகளே இதற்குப் போதிய ஆதாரங்கள்.

நான் என்னும் முனேப்பு (ஆணவம்) அகன்ருல் இறைவன் திருவருள் புரிவான் என்பதும், அக இருளேப் போக்கி ஞான வொளியை நாம் அடைய முயலவேண்டும் என்பதும் திருக்கார்த்திகைத் தீபவிழா விளக்கிக்காட்டும் அடிப்படைத் தத்துவங்கள். ஆதலின், 22-11-61-ல் திருவண்ணுமலையில் நடைபெறும் தீபக்காட்சியைக் கண்டு மக்கள் இறைவன் திருவருளுக்குப் பாத்திரமாவார்களாக.

அண்ணு மலேஎம் அண்ணு போற்றி!
கண்ணுர் அமுதக் கடலே போற்றி!

—மாணிக்கவாசகர்.



அண்ணுமலேயார் சந்நிதி

வேண்டுகோள்

சந்தாதாரர்கள், சென்ற ஆண்டுக்குரிய சந்தா ரூ. 10-ஐ இதுவரை செலுத்தாமலிருந்தால்தயவு செய்து உடனே பண அஞ்சல் மூலம் இவ்வலுவலகத்திற்குச் செலுத்தவும். 1961 அக்டோபர் முதல் தொடங்கிய நடப்பு ஆண்டு சந்தாவை அவ்வவ் வட்டார உதவி ஆணேயர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஆசிரியர்.



மதுரை—தெப்பக்குளம்

மதுரை நிகழ்ச்சிகள்

வரலாற்றுப் புகழ்பெற்றது மதுரைமா நகர். உலகிலுள்ள தலைசிறந்த அழகிய நகரங்களுள் ஒன்று அந்த நகரம். அதற்குக் காரணம் பழம்பெருமையும் மகிமையும் வாய்ந்த மீனாட்சிசுந்தரேசர் திருக்கோயில்தான் என்பதை யாவரும் அறிவர். அகில இந்தியக் காங்கிரஸ் குழுக்கூட்டம் கூடுவதற்கு இடமாக அப்பெருநகரைத் தேர்ந்தெடுத்ததில் வியப்பொன்றுமில்லை. அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் அக்கூட்டம் நடைபெற்றது. நம்முடைய நாட்டின் பல பாகங்களினின்றும் நூற்றுக்கணக்கான உறுப்பினர்கள் வந்து பங்குகொண்டனர். பல்லாயிரக்கணக்கான மக்களும் மதுரையையடைந்து அந்த கூட்டத்தைக் கண்டுமகிழ்ந்தனர். அவ்வளவு பேர்களும் அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாயண்ணலை வழிபடாமல் போய்விட முடியுமோ?

திருக்கோயிலின் ஆட்சியாளர்கள் வழிபாட்டிற்குச் சிறந்த ஏற்பாடுகள் செய்திருந்தனர். அஷ்டலட்சுமி மண்டபம், முதலியார் மண்டபம், கிளி மண்டபம், பிரகாரங்கள், கம்பத்தடி மண்டபம், திருக்கல்யாண மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் முதலியவைகளின் தூண்கள் மாசுநீக்கித் தூய்மைப்படுத்தப்பட்டது. 90-க்கு மேற்பட்ட சிற்பச் சிலைகளையும் அழுக்கைப் போக்கி மூல உருவங்கள் நன்கு விளங்கும்படியும் செய்யப்பட்டது. மற்றெல்லா விக்கிரங்களையும் விளக்குகளையும் மாக்காப்பு முதலியவை போட்டுச் சுத்தப்படுத்தப் பெற்றது. ஆடி வீதியுள்பட எல்லா பிரகாரங்களையும் தண்ணீரால் கழுவிவிடப்பட்டது. முக்கியமான மண்டபங்களிலுள்ள கதவுகள், கம்பிகள் முதலியவற்றிற்கு வர்ணங்கள் பூசி அழகு செய்யப்பட்டன. மீனாட்சிநாயக்கர் மண்டபத்திலும் வீரவசந்தராயர் மண்டபத்திலுமிருக்கும் பெரிய திருவாசி விளக்குகளை சிவகங்கை சமஸ்தானத்தார் கூட்டம் நடந்த எல்லா நாட்களிலும் எரியும்படி செய்தனர்.

அம்மன் சந்நிதி முகப்பிலிருப்பது அஷ்டலட்சுமி மண்டபம். அதன்மேலிருபுறமுமுள்ள அம்பிகை அவதாரம், மீனாட்சி பட்டாபிஷேகம், திக்விஜயம், மீனாட்சிசுந்த

ரேசர் திருக்கல்யாணம் இவைகளை விளக்கும் சுதைச் சிற்பங்கள் வண்ணம் தீட்டி வனப்பு செய்யப்பட்டன. அதன் பக்கங்களிலும் வண்ண ஓவியங்கள் வரையப்பெற்றன. இன்னும், மீனாட்சியம்மை, அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் சுதைச் சிற்பங்களும் அந்த மண்டபத்தில் காட்சியளித்தன. இந்த மண்டபத்தைப் பார்த்தோர் அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர். ஒவ்வொரு சந்நிதியிலும் உள்ள மூர்த்தியின் பெயரை தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் பலகையில் எழுதித் தொங்கவிடப்பட்டிருந்தது.

மதுரைக்கு வருபவர்கள் வண்டியூரிலுள்ள மாரியம்மன் தெப்பக்குளத்தைப் பார்க்காமல் போகிறதில்லை. ஆதலின் அக்குளத்தின் நடுமண்டபமும் அழகு செய்யப்பெற்றது. பழுது பார்க்கப்பெற்று, சிறு பூங்கா அமைத்து முழுவதும் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பெற்றது. நடு மண்டபத்தின் வடகிழக்கில், சுந்தரேசப் பெருமான் கூலியாளாக வந்து பிட்டுக்கு மண்சுமந்ததையும், வந்தியென்னும் பிட்டு வாணிச்சிபிட்டு விற்பதையும் காட்டும் சுதைச் சிற்பங்கள் அமைக்கப்பெற்றன. தெப்பக் குளத்தில் ஒரு படகை அன்னப்பறவைபோல் அமைத்து மின்விளக்குகளுடன் திகழும்படி மிதக்கவிடப்பட்டிருந்தது. தெப்பக்குளத்தில் தண்ணீர் இல்லாத குறையை நீக்க, மதுரை மாவட்ட கலெக்டரும், பெரியாறு நிர்வாக எஞ்சினியரும் வைகை அணையிலிருந்து தண்ணீர் விட்டு குளத்தில் நிரம்ப உதவி செய்ததற்கு தேவஸ்தானத்தின் நன்றி உரித்தாகிறது. நடுமண்டபம் மின்பேரொளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டதைக் காண நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்தனர். 4—10—61 மாலை சென்னை இசைப்பேராசிரியர் திரு. சாம்ப மூர்த்தியும் அவர் குழுவினரும் தடாககானம் பாடி மக்களை மகிழ்வித்தனர். அதைத் தொடர்ந்து நாள்தோறும் 8—10—61 வரை அங்கு இசையரங்குகள் நடைபெற்றன.

அகில இந்திய காங்கிரஸ் குழுக்கூட்டம் நடந்த எல்லா நாட்களிலும் கோயில் தூண்கள், ஆயிரக்கால் மண்டபம் இவற்றில் மின்பேரொளி விளக்குகள் பொருத்தப் பெற்றுப் பிரகாசித்தன. மாநாட்டில் வெளியிட்ட மலரில் பல படங்களுடைய, கோயிலைப்பற்றிய கட்டுரையொன்றும் இடம்பெற்றது. 4—10—61 இரவு, அறநிலைய அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் கோயிலில் திருமுறை அர்ச்சனையைத் தொடங்கி வைத்தார்கள். திரு. பி. டி. இராஜன் அவர்



மதுரை ஆயிரக்கால் மண்டபத்தில் முதலமைச்சர் திரு. காமராஜர்

களும், தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களும் அவ்விழாவில் பங்குகொண்டார்கள்.

பேராசிரியர் திரு. சாம்பமூர்த்தியவர்களின் குழுவினர் 4—10—61 மாலை, கோயிலின் வடக்கு ஆடி வீதியிலுள்ள இசைத் தூண்களைத் தட்டி இசையெழுப்பிக் கூட்டத்தினரைக் களிக்கச் செய்தனர். இது அறநிலைய அமைச்சர் முன்னிலையில் நடைபெற்றது. வெள்ளியம்பலத்தில் நடராஜர் சந்நிதியிலுள்ள தூண்களிலிருக்கும் இரண்டு தாளச் சிற்பங்களைப்பற்றிய விளக்கத்தையும் திரு. சாம்பமூர்த்தியவர்கள் கூட்டத்தினர்க்கு எடுத்துக் கூறினார்கள்.

இசைத் தூண்கள், தாளச் சிற்பங்கள், திருமலைநாயக்க மன்னர் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து மதுரை வரையில் கட்டியுள்ள நகரா மண்டபங்கள் முதலியவற்றைப்பற்றிய குறிப்புக்களடங்கிய வெளியீடொன்றும் அச்சிட்டு வழங்கப்பட்டது. படங்களுடன் கூடிய மதுரை வரலாற்று நூலொன்றும் வெளியிடப்பெற்றது. இவைகளேயன்றி, பழனி தண்டபாணி கோயில், இராமேசுவரம் கோயில் இவைகளைப்பற்றிய சிறு நூல்களும் அந்தந்த தேவஸ்தானத்தாரால் அச்சிடப்பெற்று அகில இந்திய காங்கிரஸ் குழுக்கூட்டத்தினர்க்கு வழங்கப்பட்டது. அங்கு நடைபெற்ற கண்காட்சியிலும் மதுரை மற்ற தேவஸ்தானங்களின் அரிய பொருள்கள் இடம்பெற்றன.

பல பகுதிகளிலிருந்து வந்திருக்கும் பிரமுகர்கள் கோயிலுக்கு வந்து வழிபாடு செய்வதற்காகச் சிறந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அஷ்டலட்சுமி மண்டபத்தினருகில் தகவல் நிலையமும், அதில் ஒரு தொலைபேசியும் அமைக்கப்பெற்றிருந்தன. 24-மணி நேரமும் தகவல் நிலையத்தில் பணியாற்றினர். தேவஸ்தான மேற்பார்வையாளர் பொறுப்பில் அது வேலை செய்தது. தேவஸ்தான நிர்வாக அதிகாரி பொதுவாக எல்லா வேலைகளையும் கவனித்து வந்தார். அகில இந்திய காங்கிரஸ் குழுக்கூடிய பந்தலில் பிரயாண அதிகாரியுடன் தேவஸ்தானச் சார்பில் ஒருவர் இருந்துகொண்டு கோயிலுக்கு வழிபட வருவோர்களைத் தெரிந்து அவ்வப்போது தொலைபேசி மூலமாகக் கோயில் தகவல் நிலையத்துக்கு அறிவித்துக்கொண்டிருந்தார். திருப்பரங்குன்றம், அழகர்கோயில், இராமேசுவரம் முதலிய இடங்களுக்குப் பிரமுகர்கள் போவதைப்பற்றியும் தந்தி, தொலைபேசி மூலம் அந்தந்த தேவஸ்தானருக்குத் தெரியப்படுத்தி வரவேற்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. மீனாட்சிசுந்தரேசர் கோயிலுக்கு வழிபடவரும் பெருந்தலைவர்களை தேவஸ்தானத்தார் அம்மன் சந்நிதி முகப்பு மண்டபத்தில் மாலையிட்டு வரவேற்று, சுவாமி அம்பிகை தரிசனம் செய்து வைத்து, பல மண்டபங்களிலுள்ள அற்புதச் சிற்பங்களைக் காண்பித்துத் தக்க மரியாதைகளைச் செய்து வைத்தனர்.

4-10-61 இரவு 7-30-மணிக்குத் திடீரென்று பத்து நிமிஷத்துக்கு முன் அறிவித்து விட்டு நமது பிரதமர் திரு. நேரு அவர்கள் கோயிலுக்கு வந்தார்கள். அவர்களுடன், அவர் திருமகளார் இந்திராகாந்தியம்மையார், முதலமைச்சர் திரு. காமராஜர், அறநிலைய அமைச்சர் திரு. பக்தவத்சலம் இவர்களும் வந்தார்கள். அஷ்டலட்சுமி மண்டபத்தில் பிரதமர் அவர்களை அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், துணை ஆணையர் திரு. A. சக்கரை, உதவி ஆணையர் திரு. A. வெங்கடாசலம், கோயில் நிர்வாக அதிகாரி திரு. கோபாலசுவாமி உடையார், கோயில் மேற்பார்வையாளர் திரு. S. பார்த்தசாரதி முதலியோர் பூரண கும்பத்தோடு மாலையிட்டு வரவேற்றார்கள். அறக் குழுத்தலைவர் திரு. P. மருதையா அவர்களும் கலந்துகொண்டார்கள். யானைகள், ஒட்டகங்கள், காளைமாடுகள் முதலியவை அணிவகுத்து நின்றன. பிரதமர் குட்டியானையைத் தட்டிக்கொடுத்து மகிழ்ந்தனர். சித்தி விநாயகர் வழிபாடுமுடித்து பிரதமர் மீனாட்சியம்மை சந்நிதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். தேவியைச் சிரந் தாழ்த்திக் கரங் கூப்பி மிக்க உருக்கத்துடன் வழிபட்டார் பிரதமர் அவர்கள். அவருக்கும் அவர் திருமகளாருக்கும் பொன்னுடை பரிவட்டங்கட்டப்பெற்று, மாலையிட்டு, குங்குமப் பிரசாதம் வழங்கப்பெற்றது. பின்னர் முருகனைத் தரிசித்து சுந்தரேசர் சந்நிதிக்குச் சென்று வழிபட்டு திருநீறு பெற்றுக்கொண்டனர். கம்பத்தடி மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் முதலியவற்றிலுள்ள அர்புதச் சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர். உடனிருந்த நமது முதலமைச்சர் திரு. காமராஜர் அவர்கள் அவை



அழகர் கோயிலில் காங்கிரஸ் பிரமுகர்கள்

களைப் பற்றிய விளக்கங்களைக் கூறினார்கள். கோயில் வழிபாடு முடிந்ததும் பிரதமர் கோஷ்டியினர் வண்டியூர் தெப்பக்குளம் சென்று அதைச்சுற்றி வந்து அதன் அழகைக் கண்டு களித்தனர்.

1-10-61 முதல் 6-10-61 வரையில் இன்னும் நூற்றுக்கணக்கான பிரமுகர்கள் கோயிலுக்கு வருகை தந்தார்கள். இந்திய அரசாங்க அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், பல்வேறு இராஜ்ய முதலமைச்சர்கள், அமைச்சர், துணையமைச்சர்கள், அகில இந்திய காங்கிரஸ் தலைவர், பிரதேச காங்கிரஸ் தலைவர்கள், லோகசபை அங்கத்தினர்கள், இராஜ்ய சட்டசபை அங்கத்தினர்கள், அகில இந்திய காங்கிரஸ் குழு உறுப்பினர்கள், முதலிய பலரும் கோயிலுக்கு வந்து வழிபாடு செய்தார்கள். அவர்களுக்குத் தக்க மரியாதைகள் கோயிலில் செய்யப்பெற்றன.

மதுரை அறநிலையத் துணை ஆணையர், உதவி ஆணையர், கோயில் நிர்வாக அதிகாரி, கோயில் மேற்பார்வையாளர் முதலியோர் சிறந்த முயற்சியுடன் செய்த ஏற்பாடுகளை மக்கள் பாராட்டி மகிழ்ந்தனர். கோயில் பணியாளர்கள் அனைவரும் சிறிதும் தளர்ச்சியடையாமல் பொறுப்புணர்ச்சியுடன் ஒத்துழைத்தது இந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் வெற்றி தருவதற்குக் காரணமாய் இருந்தது. கோயிலை மிகவும் தூய்மையாகவும், பேரொளியுடனும் அழகுபெறச் செய்து, பல்லாயிரக் கணக்கான மக்களும், பாரதநாட்டின் பல்வேறு பகுதிப் பிரமுகர்களும் வந்து வழிபடுவதற்குச் சிறந்த ஏற்பாடுகள் செய்யப்பெற்றது மதுரைக் கோயில் வரலாற்றிலேயே இதுவே முதல் தடவையாகும். கண்டுகளித்த மக்கள் எல்லோருமே போற்றிப் புகழ்ந்தனர் என்றால் வேறென்ன கூறவேண்டும்!

அழகர் கோயில்: மதுரைக்கு அகில இந்திய காங்கிரஸ் குழுக்கூட்டத்திற்கு வந்த பல பிரமுகர்கள் அழகர் கோயிலுக்கும் சென்று வழிபட்டார்கள். அகில இந்திய காங்கிரஸ் தலைவர், மத்திய அரசாங்க அமைச்சர் சிலர், மைசூர், உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் முதலியவற்றின் முதலமைச்சர்கள், அமைச்சர்களும் கள்ளழகர் கோயிலுக்குச் சென்று வழிபட்டார்கள். அவர்களுக்கெல்லாம் சிறந்த முறையில் கோயில் மரியாதைகள் செய்யப்பெற்றன. இறைபணியாளர் திரு. P. S. கோபாலசுவாமி அவர்கள் தகுந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

இராமேசுவரம்: மத்திய அரசாங்க அமைச்சர்கள், பல்வேறு இராஜ்ய அமைச்சர்கள், அகில இந்திய காங்கிரஸ் குழுவினர் முதலியவர்கள் இராமேசுவரம் சென்று இராமநாத

அழகர் கோயிலில் திரு. சஞ்சீவி ரெட்டியும், திரு. O. V. அழகேசனும்

சுவாமியை வழிபட்டனர். ஒரு கூட்டத்தினர் தனுஷ்கோடி சென்று தீர்த்தமாடி, படகுகள் மூலமாக இராமேசுவரம் வந்து இராமலிங்கரைத் தரிசித்தனர். அங்கு வந்தவர்கட்கெல்லாம் இராமநாதபுரம் அரசர், தேவகோட்டை திரு. Al. A R. சோமநாதன் செட்டியார் இருவரும் அறுசுவை உண்டியளித்து விருந்தோம்பி மகிழ்வித்தார்கள். கோயில் நிர்வாக அதிகாரி திரு. V. சுந்தரராஜப்பிள்ளை அவர்கள் கோயிலை அலங்கரித்தும், வந்தவர்களை நல்லமுறையில் வழிபாடு செய்வதற்கும், தங்கியிருப்பதற்கும் வேண்டிய வசதிகளைச் செய்திருந்தார்கள். கோயில் மரியாதைகளும் உரிய முறையில் செய்யப்பெற்றன. நிலவருவாய்த்துறை, வட்டார வளர்ச்சித்துறை, விளம்பரத்துறை, பஞ்சாயத்து, நகர காங்கிரஸ் குழு முதலியோரும் இந்த வரவேற்புகளுக்குச் சிறந்த முறையில் சேவைசெய்து வெற்றிபெறச் செய்தனர். ஆலய வரலாற்று நூலும் எல்லோருக்கும் வழங்கப்பட்டது.

தஞ்சாவூர்: இராமேசுவரம் சென்ற காங்கிரஸ் குழுக்கூட்டத்தின் ஒரு பகுதியினர் தஞ்சைப் பெரிய கோயிலுக்குச் சென்றனர். கோபுரவாயிலில் தஞ்சை உதவி ஆணையர் திரு. K. K. மேனன், கோயில் நிர்வாக அதிகாரி திரு. சூர்யராஜ், கண்காணிப்பாளர் திரு. R. உருத்திரபதி, தொல்பொருள் துறை அதிகாரிகள், தஞ்சை தாசில்தார் முதலியோர் வரவேற்றனர். பெரியநந்தி, பெரியாவுடையார், அம்பிகை முதலியவைகளை அக்குழுவினர் வணங்கி மகிழ்ந்தனர். கர்ப்பக்கிரகத்தைச் சுற்றியுள்ள உட்பிரகாரச் சுவர்களிலிருக்கும் சோழர், நாயக்கர்கால வண்ண ஓவியங்களையும் அவர்களுக்குக் காட்டப்பெற்றது. தகுந்த முறையில் கோயில் மரியாதைகள் செய்யப்பெற்றன. அக்கூட்டத்தினருக்கு அழகிய படங்களுடைய தஞ்சைக் கோயில் வரலாற்றுச் சிறுநூல் ஒன்று வழங்கப்பெற்றது. அங்கிருந்து, 11-ஆம் நூற்றாண்டில் கரிகாலச் சோழனால் கட்டப்பெற்ற காவிரியாற்றின் கல்லணையைப் பார்த்துவிட்டு அக்குழுவினர் ஸ்ரீரங்கத்தையடைந்தனர்.

திருவரங்கம்: திருவரங்கம் கோபுரவாசலில் கோயில் தருமகர்த்தர்கள், நிர்வாக அதிகாரி முதலியோர் மாலையிட்டுக் குழுவினரை வரவேற்றார்கள். கோயில் ஆபரணங்கள், பொருட்காட்சிச்சாலை, நூல்நிலையம் முதலியவற்றைப் பார்வையிட்டபின் ஸ்ரீரங்கநாதசுவாமி, ஸ்ரீரங்கநாயகித்தாயார் சந்நிதிகளுக்குக் குழுவினர் சென்று வணங்கி வழிபட்டனர். பிரசாதங்கள் வழங்கி, கோயில் மரியாதைகளும் செய்யப்பெற்றன. நிர்வாக அதிகாரி திரு. P. K. வைத்தியநாதன் அவர்கள் எல்லா ஏற்பாடுகளையும் ஒழுங்காகச் செய்திருந்தார்கள்.

திருவானைக்கா: திருவரங்கத்திலிருந்து அந்த குழுவினர் திருவானைக்கா கோயிலுக்குச் சென்றனர். கோயில் அறங்காவலர்களும், இறைபணியாளரும் கோயிலின் முகப்பில் அவர்களை மாலையிட்டு வரவேற்றனர். உள்ளூர் காங்கிரஸ் அங்கத்தினரும் கலந்துகொண்டனர். ஜம்புகேசுவரர், அகிலாண்டேசுவரி சந்நிதிகளில் வழிபாடு நடைபெற்

அழகர் கோயிலில்
காங்கிரஸ் பிரமுகர்கள்

தது. பிரசாதங்கள் வழங்கி, தக்ககோயில் மரியாதைகளும் செய்யப்பெற்றன. கோயிலை நன்ருகத் தூய்மை செய்தும், மின்விளக்கு முதலியவற்ருல் அலங்கரித்தும், வழிபட வந்தவர்களைச் சிறந்த முறையில் வரவேற்பதற்கும் கோயில் நிர்வாக அதிகாரி திரு. S. தங்கவேலு அவர்கள் நல்ல ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். கோயிலைப்பற்றி ஆங்கிலத்தில் ஒரு சிறுநூல் அச்சிட்டு வந்திருந்தோருக்கெல்லாம் தேவஸ்தானத்தார் வழங்கினர். இந்த கோயிலுக்கு, மகாராட்டிர முதலமைச்சர் திரு. Y. B. சாவன், மைசூர் அமைச்சர் திரு. H. K. வீரண்ணு முதலியவர்கள் 6—10—61-ல் வந்து வழிபட்டுச் சென்ருர்கள்.

இராமேசுவரம், தனுஷ்கோடி, தஞ்சாவூர், திருவரங்கம், திருவானைக்கா முதலிய



திருவானைக்காவில்
அகில இந்திய
காங்கிரஸ் குழுவினர்

தலங்களுக்கு, அகில இந்திய காங்கிரஸ் குழுவின் ஒரு பகுதியினர் சென்று வழிபடுவதற்கு, இருப்புப்பாதை வண்டி, மோட்டார், தங்குவதற்கு இடங்கள், உணவு முதலிய எல்லா வசதிகளையும் முன்கூட்டியே நல்ல வகையில் ஏற்பாடுகளைச் செய்திருந்த தஞ்சை மாவட்ட விளம்பர அதிகாரி திரு. V. T. வீரப்பன், B.A., B.L., அவர்களை யாவரும் நன்றி செலுத்திப் பாராட்டினர்.

அகில இந்திய காங்கிரஸ் குழுவின் மற்றொரு பகுதியினரும் கன்னியாகுமரி, சுசீந்திரம், திருக்குற்றாலம் முதலிய தலங்களுக்குச் சென்று வழிபட்டனர். அந்தந்த தேவஸ்தானத்தார் அவர்களை வரவேற்று, கோயில் மரியாதைகள் செய்தனர். ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற அக்கோயில்களைப்பற்றிய சிறு வரலாறும் அவர்களுக்கு வழங்கப்பெற்றது.

பழனி: பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் பழனியம்பதிக்கு வருகை தந்தார்கள். அவரை பழனி இருப்புப்பாதை நிலையத்தில் தண்டாயுதபாணி அறங்காவலர் குழுத்தலைவர் திரு. P. S. K. இலட்சுமிபதி ராஜு, நிர்வாக அதிகாரி திரு. C. S. தீனதயாளு முதலியோர் பூர்ணகும்பத்துடன் மாலையிட்டு கோயில் மரியாதைகளைச் செய்தனர்.

பழனியில் பிரதமர் திரு. நேரு

சென்னை : முத்துக்குமார சுவாமி கோயிலில் இலட்சார்ச்சனைக் குழு அங்கத்தினர்களால் 8-11-61 முதல் 13-11-61 வரை இலட்சார்ச்சனை நடைபெறும். சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நிகழ்த்தப்பெறும்.

கோவில்பட்டி : பூவணநாத சுவாமி கோயிலில் ஐப்பசித் திருக்கல்யாணத் திருவிழா 24-10-61 ல் ஆரம்பித்து 4-11-61ல் முடிவுறும்.

சின்னமனூர் : பூலாநந்தீசுவரர் கோயிலில் 10-10-61 முதல் 19-10-61 வரை நவராத்திரி விழா நடைபெற்றது. அதுபோது சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

செய்திகள்

சென்னை—அயனாவரம் : பரசுராமலிங்கேசுவரசுவாமி கோயிலில் 23—10—61ல் மண்டலாபிஷேக பூர்த்தியும் அன்னாபிஷேகமும் நடைபெற்றது. கோயிலில் நூதன துவஜ ஸ்தம்பம் செய்யப்பட்டு அஷ்டபந்தனஜீர்ணோத்தாரண மகாகும்பாபிஷேகம் 28—8—61-ல் நடைபெற்றது. மேற்படி திருப்பணிகளுக்கு கீழ்க்கண்ட அன்பர்கள் பேருதவி புரிந்தனர்.

1.	திரு.	கே. சி. நரசிம்மலு நாயுடு	ரூ.	310
2.	,,	என். எஸ். பலராம முதலியார்	,,	101
3.	,,	ஏ. கே. சுப்பிரமணிய ஐயர்	,,	240
4.	திருமதி.	நாகம்மாள்	,,	101
5.	,,	கிருஷ்ணவேணியம்மாள்	,,	101
6.	,,	விசாலாட்சி அம்மாள்	,,	201
7.	திரு.	ஏ. சி. கன்னியப்ப நாயகர்	,,	101
8.	,,	கே. கோபால்சாமி செட்டி	,,	101
9.	,,	ஏ. வி. மகிபதி நாயுடு	,,	101
10.	,,	பி. சின்னசாமி நாயகர்	,,	120
11.	,,	சீனிவாசலு நாயுடு	,,	101
12.	,,	டி. குப்புசாமி நாயுடு	,,	101
13.	,,	ஆர். தண்டபாணி சாஸ்திரி	,,	101
14.	,,	இராஜகோபால் நாயுடு	,,	101
15.	,,	வி. கிருஷ்ணசாமி நாயகர்	,,	150
16.	,,	வி. கண்ணப்ப முதலியார்	,,	101
17.	திருமதி.	அம்மாகண்ணம்மாள்	,,	101
				2233

செட்டிகுளம் :—ஏகாம்பரேசுவரர் — தண்டாயுதபாணிசுவாமி கோயிலில் 16—10—59 முதல் நடைபெற்றுவந்த வாரவழிபாட்டின் 2-ஆவது ஆண்டுவிழா 20-10-61ல் நடைபெற்றது. அத்துடன் தேவார இன்னிசையுடன் பன்னிருதிருமுறைகள் ஊர்வலமும் "உருவவழிபாடு" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவும் நடைபெற்றன.

திருவானைக்கோயில் :—ஜம்புகேசுவரர் கோயிலில் நவராத்திரி விழாவை முன்னிட்டு 17—10—61ல் திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்., அவர்கள் "சிவ காட்சி" என்னும் பொருள்பற்றி சென்னை அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் முன்னிலையிலும், திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் தலைமையிலும் சொற்பொழிவாற்றினார்கள். திருச்சிராப்பள்ளி அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர், ஆய்வர் முதலானோர் கலந்துகொண்டார்கள்.

குமாரவயலூர் :—சுப்பிரமணிய சுவாமி கோயிலில் திருப்பணி துவக்கவிழா திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களால் 29—10—61ல் நடத்திவைக்கப்பட்டது.

காஞ்சிபுரம் :—ஞானப்பிரகாச தேசிகசுவாமிகளாதீன மடாலயத்தில் மெய்கண்ட தேவநாயனார் குருபூசை விரிவுரை விழா 5—11—61ல் அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமையில் நடைபெறும்.

சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச்செய்த

நால்வர் நான்மணி மாலை

(சிதம்பரம்—ஈசானியமடம் இராமலிங்கசுவாமிகள் உரை)

—: ○ :—

(முன் தொடர்ச்சி)

ஆனேறி வினைக்குறிப்புப்பெயர். பெறுதல் அதன்காரியமாகிய ஈதலையுமுணர்த்திற்று. கொல் தான் அசைகள். வெள்ளை-சங்கும் வெண்மையுமாம். மணி கருவியாகு பெயர். அகரம் தலைமைச்சுட்டு. பலரறிபழிச்சொலுடையராய்ச் சிறுபலிப் பொருட்டு ஊர்திரிதலைக்கொண்டு உயர்ந்த வாகனமின்றி எருதேறியுழலுமவர்க்குச் சங்குமணி தானும் ஏது? ஆயினும், அவர்க்குக் குபேரனாதியர் உரிமையரெனக் கூறப் படுதலான், அவர்மாட்டுப் பெற்றும் அளித்திருக்கலாமாகலின், யாண்டுப் பெற்றாரென்று கடாவுவோம்; வாங்கிய அவ்வறியாப்பிள்ளையை யாம் காணின், எனவும் பொருள்பட்டு இதுவும் நிந்தாஸ்துதியாகவும் நிற்பதுணர்க.

சில்பலியேற்றமை அடியவருய்தற்கென்பதை [1]"பரந்துலகேழும் படைத்த பிரானை - யிரந்துணி யென்பர்க ளெற்றுக் கிரக்கு - நிரந்தரமாக நினையு மடியா-ரிரந் துண்டு தன்னடி யெட்டச்செய்தானே" என்பதனானும், மீமாஞ்சமதத்தராதலை [2]"முன்புதா ருகவனத்தின் முனிவரர் யாருமீசற்கன்பில ராகி வேள்வி யளப்பில புரிந்து தாமே - யின்புறு முத்தி தன்னை யெய்துவா னுன்னியங்கந்-துன்புற வாளா நோற்றுத் துணிவினா லொழுக லுற்றார்" என்பதனானும், இடபத்திவர்ந்து பலிக்கெய்தினமையை [3]"பெற்றமேறிப் பலிக்கு வரும் பெருமான்" என்பதனானும், முத்தவியல்பை [1]"மாடவெண்புறவின் முட்டை வடிவெனத் திரண்ட பேழ்வாய்க் [2]கோடு கான் முத்தம் வெள்ளை நிறத்தன கொண்மூ முத்த - நீடுசெம் பரிதி யன்ன நிறத்தது கிளைமுத் தாலி - பீடுசா னிறத்தராவின் பெருமுத்த நீலத்தாமால். ஏனமா வாரஞ் சோரி யீர்ஞ்சுவைச் சாலி முத்த - மானது பசுமைத் தாகும் பாதிரி யனைய தாகு - மீனது தரளம் வேழ மிரண்டினும் விளையு முத்தந் - தானது பொன்னின் சோதி தெய்வதஞ்சாற்றக் கேண்மின்" என்பதனானும் அறிக. (உசு)

பெற்றா னினைப்பெற் றவர்போற்
பெறலும் பிறப்பதுண்டே
னற்றா ரணியி னினைப்போற்
பிறப்பது நல்லகண்டாய்
செற்றார் புரமெரி செய்தவில்
வீரன் றிருப்பெயரே
பற்றா மறிவெண் டிரைக்கட
னீந்திய பாவலனே.

(இ - ள்.) செற்றார் புரம் எரிசெய்த வில்வீரன் - பகைவர் முப்புரங்களையும் நீறாக்கிய பருப்பதவில்லையேந்திய பரமருருடைய, திருப்பெயரே பற்றா - திருநாமமாகிய பஞ்சாக்கரமே செவ்வியதுணையாக, மறிவெண் திரைகடல் நீந்திய பாவலனே - மடங்கிவீசும் வெள்ளிய அலைகள்வாய்ந்த கடலைக் கடந்த வாகீசமூர்த்தியே! நல் தாரணியில் பெற்றால் - உயர்ந்த இந்நில வுலகத்திலே (ஒரு புதல்வனைப்) பெறின், நினை பெற்றவர்போல் பெறலும் - உம்மைப் பெற்ற பிதாமாதாக்களைப்போல (உம்மையொத்த ஓர்புதல்வனைப்) பெறுதலும், பிறப்பது உண்டேல் நினைப்போல்

1. திருமந்திரம் பிக்ஷாவிதி-௩.
2. கந்தபுராணம் ததீசியுத்தரப்படலம்-௩௦.
3. பெரியபுராணத்தில் மூர்க்கநாயனார் புராணம்-எ.

1. திருவிளையாடல் மாணிக்கம் விற்றபடலம்-ருக-ருசு.
2. கோடு-சங்கும் இப்பியும்.

பிறப்பதும் நல்ல - உதித்தலுளதாயின் உம்மைப்போல் (ஒரு புதல்வனுகி) உதித்தலுமே சிறந்தன. எ-று.

தாரகாக்கன் கமலாக்கன் வித்துன்மாலியெனும் அசுரர் மூவரும், கோடியாண்டு தவமியற்றி பிரமதேவராற் பொன் வெள்ளி இரும்புகளாகிய மூவரண்கள், முறையே சுவர்க்கம் அந்தரம் பூமியென்புழி நிலைபெற்றிருந்து வேண்டுமிடங்கட்கு உடன்வரவும், அவை ஆயிரம் யாண்டுக்கோர்கால் ஒரு முகூர்த்தநேரம் ஒருங்கு தொகவும், அக்காலத்தில் ஒருகணைவிடுத்து அழிப்பின்றி வேறெவ்வகையாலும் அழியாதிருக்கவும், திருமாலாதிய ரெதிர்ப்பினும் தோற்ருேடவும், வரமேற்று, மயன் வகுத்த மாளிகைகளோடுகூடிய அவ்வரண்களினுற்று,விபூதிருத்திராக்ஷதாரணமும் பஞ்சாக்ஷரசெபமுமுடையராய்ச் சிவ்பிரானை வழிபட்டனரேனும், தேவராதியர்க்கு இடுக்கண்புரிதலுடைமைபற்றி, அச்சுதமூர்த்தி புத்தகுருவாய்ச்சென்று மயக்க; அக்கொள்கையின்மயங்கிச் சிவபத்தியில் வெறுப்புற்றனரென்பார், 'செற்ருர்' என்றும், செற்றவழி, மேருச்சிலையாதியவுடையராய்ச்சென்று, அவர் நிலைமை கண்டு முறுவலிக்க, அதிற்ருேன்றிய அனலான் முப்புரங்களும் தீப்பட்டும், அத்திருமாலாதியர்க்கு அபசயமுருதபடி அவருருவாகிய கணையையும்விடுத்த அருளாளரென்பார், புரமெரிசெய்தவீரனென்னுது 'வில்வீரன்' என்றும், பஞ்சாக்கரம் பரசிவரூபமாய் விளங்கித் தியானிப்பாரைத் தற்சொருபமாக்கலின், அது அப்பரமர்க்குரிமையுடைத்தென்பார், 'திருப்பெயர்' என்றும், சிறுமையுடையாரையும் பவக்கடல் கடப்பிக்கும் அத்திருமந்திரம் திருநாவுக்கரசுதேவரை இத்திரைக்கடல் கடப்பியாதுவிடுமோ வென்பார்,'பற்று' என்றும், சிவாகமாதிகட்கும் மூலமாதலைத்தேர்ந்து, அதனியல்பைச் 'சொற்றுணைவேதியன்' என்னும் திருப்பதிகத்தமைத்துதித்துக் கடலைக்கடந்த அத்தகையரென்பார், 'நீந்தியபாவலன்' என்றும், இங்கிலவுலகத்திலே புதல்வர்ப்பேற்றினருள் எவரானும் புகழ்பெற்றது புகழனரும் மாதினியாருமே யென்பார், 'பெற்ருனிணைப் பெற்றவர் போற்பெறலும்' என்றும், புதல்வராயினுருள் எவரானும் புகழ்பெற்றது தேவரீரே யென்பார், 'நினைப்போற் பிறப்பதுநல்ல' என்றும் கூறிஞர்.

ஏனைப்பேறும் பிறப்பும் நல்லவன்றென்பது குறிப்பெச்சம். எனவே, "நம்மையுடையவர்கழற்கீழ் நயந்ததிருத்தொண்டாலே - யிம்மையிலும் பிழைப்பதென வெம்போல்வாருந்தெளிய" மற்றை ஆசிரியரினும் அநுபவத்தில் விளக்கிய அருட்டிறநோக்கி, எவரும் பேணப்படும் இவர் பெருமையையும் ஈன்ருர் பெருமையையும் இனிது நிகழ்த்தியபடி. இம்மையிலும் பிழைத்தலைவிளக்கினமை — சமணரால் இடப்பட்ட நீற்றறையினும், விடங்கலந்தவுணவினும், ஏவப்பட்ட யானையினும், கல்லிற்பிணித்து விடப்பட்ட கடலினும், தப்பியுய்ந்தமையும் பிறவுமாம். முத்திபெறற்குரியது இத்தாரணியேயாகலின் நற்ருரணி யென்ருர். பிறப்பதுமேயென்னும் பிரிநிலையேகாரம் தொக்கது. நல்லவினைக் குறிப்பு முற்று. கண்டாய் முன்னிலையசை. நல்லவாகச் செய்தாயெனினும் அமையும். செற்ருர்புரத்துளொருங்கிருந்தும், செருதார்புரத்தை எரிசெய்திலரென்பார், இதனையுள்ளுறையாக்கிச் 'செற்ருர்புரமெரிசெய்த வில்வீரன்' என்ருர்; இக்குறிப்பு அமணர்களென்னும் செற்ருர் புறத்துளொருங்கிருந்தும் செருராகிய இவர்புரத்தைப் புரந்தமைமேற்று. ஈண்டுச் செருதாரென்றது சிவபத்தியில் வழாது உய்ந்து சிவபெருமானது வாயிற் காவல்பெற்ற சுதன்மன் சுசீலன் சுபுத்தி யென்னும் மூவரையும். செற்றல்-வெறுத்தல். புரம்-ஊரும் உடலுமாகலின் ஏற்ற பெற்றிகொள்ள. ஏகாரங்களுள் முன்னையது தேற்றம்; பின்னையது விளியுருபு. ஆகவென்பது ஈறுகுறைந்தது.

கணையையும்விடுத்தமையை [1]"இவை கண்டு கணையாகுமுகுந்தனும் வாயுவுமதியுமனலு மெம்மை-நவைகொண்டார் புரத்தேவு கெனவிரந்து சொலவீசன் விடுப்ப நண்ணி - யவையுண்ட வழலைமிகவெழமூட்டி மீண்டும்மலரடியிற் ருழத் - துவர் வென்ற செங்கனிவாய் பங்கனுநல்லருள்

1. இலிங்கபுராணம் திரிபுரமெரித்தவத்தியாயம்—கஉ.

கூர்ந்து துலங்கி நின்றான்" என்பதனானும், பரசிவனாதலை [1]"சிவனருளாய சிவன்றிரு நாமஞ் — சிவனருளான்மாத் திரோதமல மாயை - சிவன்முத லாகச் சிறந்து நிரோதம் - பவம தகன்று பரசிவ னாமே" என்பதனானும், பவக்கடல்கடப்பித்தலை [2]"இருவினைப் பாசமு மலக்க லார்த்தலின்- வருபவக் கடலில்வீழ் மாக்க ளேறிட - வருளுமெய்யஞ்செழுத்தரசை யிக்கடலொருகன்மே லேற்றிட லுரைக்க வேண்டுமோ" என்பதனானும், சிவாகமாதிகட்கு மூலமாதலை [3]"அஞ்செழுத்தே யாகமமு மண்ண லருமறையு மஞ்செழுத்தே யாதி புரா ணம்மனைத்து-மஞ்செழுத்தே யானந் தத் தாண்டவமு மாறுறுக் கப்பாலா- மோனந் தவாமுத்தியும்" என்பதனானும், மூவருய்ந்தமையை [4]"முப்புரங்களின் மூவர்புத்தன் மொழித்திறத்து மயங்கிடா- தப்பணிந்தவர் தாள்பணிந்தரு ளாற்றி னின்றன ராதலாற் - பொய்ப்புரந்தபு காலை நீற்றறை நாவின்மன்னவர் போலெரி- தப்பிவாழ்ந்தன ரீசனாணையி னிற்பவர்க் கிடர் சாருமோ' என்பதனானும் அறிக. (௩0)

பாவாய்ப் பொழிந்த வானமுதப்
 பவளத் திருவாய் நம்பி நீ,
சேவாய்ப் பொருதுந் தருமமுடைத்
 தேவன் மலைக்குப்போம்பொழுது
காவாய்ப் பயந்த தடக்கைமலர்க்
 கழறிற் றறிவார் கடாவிவரு
மாவாய்ப் பிறக்கக் கிடையாதே
 மாவாய்ப் பிறக்குந் திருமாற்கே.

(இ - ள்.) வான் அமுதம் பா ஆய்ப் பொழிந்த - சிறப்புற்ற முத்தி சாதனங்களைத் திருப்பாடல்களாகச் சொரிந்த, பவளம் திருவாய் நம்பி - செந்துகிர்போலும் திருவாயையுடைய நம்பியாரூரவள்ளலே!, பொருதும் சே ஆய்த் தருமம் உடை - சண்டையிடும் இடபமாகத் தரும தேவதையையுடைய, தேவன் மலைக்கு நீ போம் பொழுது - சிவபிரானமரும் திருக்கயிலைவரைக்குத் தேவரீரெழுந்தருளுங் கால், கா ஆய்ப் பயந்த - கற்பகத்தருவை நிகர்த்துக் கருதுவார் கருதுவன வெறுப்ப நல்கிய, மலர் தடம் கை - செந்தாமரை மலர்போலும் பெருமைவாய்ந்த திருக்கரங்களையுடைய, கழறிற்றறிவார் கடாவி வரும் மா ஆய்ப் பிறக்க - சேரமான்பெருமாணாயனார் செலுத்திவரும் குதிரையாயுதிக்கும்படி, மா ஆய்ப் பிறக்கும் திருமாற்கு கிடையாது - இனி உகமுடிவிற் குதிரையாயுதிக்கும் திருமாலுக்குக் கிட்டாது. எ-று.

இவ்வுலகன்றி எவ்வுலகுமுய்வான் முத்திசாதனங்களையாண்டும் முற்றுவித்தவரென்பார், 'வானமுதம் பாவாய்ப் பொழிந்த நம்பி' என்றும், சென்றவோர் தேயுப்பிரளயத்தில், அச்சுதனுதிய பிரபஞ்சம், அனலான்முடிவுற்றதாக, அதுகண்ட தருமதேவதை, யானும் இறப்பன் கொலென்று இனைந்து, இடபவுருவினெய்திப் பிரார்த்திக்க; அதனை ஊர்தியாகக்கொண்டு, இவ்வடிவோடு எங்கும் எம்முன்வதிகவென்று உரியவரமுநல்கிச், சங்காரகர்த்தாவாகிய அத்த லைமைக்கடவுளமர்தலின்' நொடித்தான்மலையென நுவலப்பெற்றதென்பார், 'சேவாய்த்தருமமுடைத்தேவன்மலை' என்றும் மன்னுயிர் வெஃகியவற்றை வரையாது கொடுத்த வள்ளன்மையரென்பார், 'காவாய்ப்பயந்த தடக்கை' என்றும், அனைத்துயிரும் உளத்தொடுசாவலை யறிந்து அவற்றின் உண்ணிலவிய துயர்களையும் ஓழிப்பவரென்பார், 'கழறிற்றறிவார்' என்றும், திருமால் போரில் தம்மாற் றுரத்தப்பட்ட தானவரைப் புரந்தமைகாரணமாகப் பிருகு முனிவர் மனைவியாகிய கியாதியைக்கொன்றமையின், அம்முனிவரிட்ட சாபத்தானேர்ந்து, சிவபிரானால் நிக்கிரகாநுக்கிரகங்கள் புரியப்பெற்ற பத்தவதாரத்துள், உகமுடிவிலுறுதற்கு எஞ்சிநிற்கும் கற்கியவதாரத்தும், அப்பிரானை வழிபட்டே அநுக்கிரகம் பெறவேண்டுமென்ற இவருருங் கற்கியாயுதிப்பின், அவ்வழிபாடின்றி அப்பொழுதே அநுக்கிரகமுற்று, அப்பிறப்பும் அகன்றிருக்கலாம்; அதற்குத் தவப்பேறின்றுயிற்றென்பார், "மாவாய்ப்பிறக் கக் கிடையாது" என்றும் கூறினார்.

கூறவே, இவர் சிவகணத்தலைவராகும் சீர்மையுடையராகலின் இவர் கடா

1. திருமந்திரம் சூக்குமபஞ்சாக்கரம்-௩.
2. பெரியபுராணத்தில் திருநாவுக்கரசுநாயனார் புராணம்-௧௨௯.
3. உண்மைவிளக்கம்-௪௫.
4. காஞ்சிப்புராணம் முப்புராரிகோட்டப்படலம்-௨.

வியமாவாகப்பெறுதல் எளிதன்றென்பது கருத்து. பாவாய்சேவாயென்புழி ஆய் செயவெனச்சத்திரிபுகள். வான்-சிறப்பு. அமுதம் - முத்தி. அதுஆகுபெயராய் அதற்குரியசாதனங்களை யுணர்த்திற்று. பொருதலில்லதாகலின் 'பொருதுஞ்சே' எனப்பட்டது. [1]"பொருவிடை யொன் றுடைப் புண்ணிய மூர்த்தி" எனப்பிறாண்டும்வருதல்காண்க. உடையவென்பது ஈறு தொக்கது. காவாயென்புழி ஆக்கச்சொல் உவமைப்பொருட்டு. பெருமை-கொடையாற்பெற்ற மேன்மை. கழறல் பேசலேயாயினும் ஈண்டு மனத்தொடுசாவலின் மேற்று. மாவாகச்சிந்தித்திருப்பரேல் அங்ஙனமே கொண்டிருப்பரென்பது தோன்றக் கழறிற்றறிவா ரென்றார். கடாவல்-விரைவிற்செலுத்தல். ஏகாரங்கள் அசைகள். நொடித்தல்-அழித்தல். [2]"நோக்காது நோக்கி நொடித்தன்றே" என்பதனானும் உணர்க.

இவ்வுலகன்றி எவ்வுலகுமுய்வித்தமையை [3]"பித்தா பிறை சூடியெனப் பெரிதாந் திருப்பதிக-மித்தாரணி முதலா வுலகெல்லாமுயவெடுத்தார்" என்பதனானும், தேயுப்பிரளயத்தில் அச்சுதனுதியவனைத்துமொடுங்குதலை [4]"ஆய தன்மையிலச்சுதற் காயுவு-மாயுமெல்லையின் மன்னுயிர் யாவையுந் - தேயுமண்டஞ் சிதைந்திடு மெங்கணும் - பாயி ருங்கன லேபரந்துண்ணுமால்" என்பதனானும், ஊர்தியாகக்கொண்டு உரியவர மீந்தமையை [5]"இறத்தலை யின்மையும் யானமாய்த்தனைப் - பொறுத்திடுந் தன்மையும் பொருவில் வன்மையு - முறைத்திடு மன்பும்வாலுணர்வு நல்கியே – யறத்தனிக் கடவுளுக் கண்ணல் கூறுவான். மைதவி ரடியர்செய் பவமு மற்றுளார் - செய்திடு தருமமுந் திரிபதாகியே - யெய்திடு கின்றதி யாமுன்றன்னிடை - மெய்திக முயிரென மேவும் பான்மையால்" என்பதனானும், சங்கார கர்த்தாவே முதற்கடவுளாதலை, [1]"பின்னுற முடிப்பான் றன்னைப் பிரானெனத் தேற்றுந்தன்மை - யென்னென வுரைத்தி மைந்த வெங்களைச் சுரரை யேனைத் - துன்னிய வுயிர்கடம்மைத் தொலைவுசெய்திடுவ னீற்றி - லன்னவ னென்னின் முன்ன மளித்தவனவனே யன்றோ. அந்நாளொருவ னாகியாருயிர்த் தொகையைத் தோன்றுள் - வந்தவாறுடுங்கச் செய்து மன்னியே மீட்டு மன்னை - தந்தையாயுயிர்கட்கேற்ற தனுமுத லளிக்கு முக்கணெந்தைதன் செய்கை முற்றுமினைய தென்றிசைக்கற்பாற்றோ" என்பதனானும், நொடித்தான் மலையென நுவலப்பெற்றதை [2]"தானெனை முன்படைத்தான தறிந்துதன் பொன்னடிக்கே - நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்தி—வானெனை வந்ததிர்கொண் மத்தயானை யருள்புரிந்து - வூனுயிர் வேறு செய்தா னொடித்தான் மலை யுத்தமனே" என்பதனானும், கழறிற் றறிந்து துயரொழிந்தமையை [3]"அளவில் பெருமையகிலயோனிகளுங் கழறிற்றறிந்தவற்றி - னுளமன்னிய மெய்யுறுதுயர மொன்று மொழியா வகையகற்றிக் - களவுகொலை கண் முதலான கடந்து கழறிற்றறிவார் தாம் - வளவர் பெருமானுடன் செழியர் மகிழுங் கலப்பில் வைகுநாள்" என்பதனுனும், நிக்கிரகாநுக்கிரகங்கள் நிகழப்பெற்றமையை [4]"பெருகு மன்பினு லெம்மைநீ வழிபடும் பேற்று - லிருமை சான்முனி சபித்திடு மையிரு பிறப்புந் - திரிபுரு துலகினுக் குபகாரந்தெளிநீ-யருளு மைந்தினிலைந்தினிற் றண்டமும் புரிகேம்" என்பதனும் அறிக. (௩௧)

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தி
னீழல்வா யுண்ட நிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத் தாதலிற்

1. தேவாரம் கோயில். பாளையுடைக்கமுகு-௨
2. சிவஞானபோதம் முதற் சூத்திரம்.
3. பெரிய புராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணம்-௩௫.
4. கந்தபுராணம் ததீசியுத்தரப்படலம்-௩௦௧.
5. ஷை படலம், ௩௦௬-௩௧௦.

1. ஷை புராணம் உபதேசப் படலம்.
2. தேவாரம் திருநொடித்தான்மலை
3. பெரியபுராணத்தில் சேரமான் பெருமாணயனார் புராணம்-௪௦.
4. காஞ்சிப்புராணம் அரி சாபபயந்தீர்த்த தானப்படலகம்-௧௭.

பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுர வாசக
மோதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே.

(இ-ள்.) திரு ஆர் பெருந்துறை செழுமலர் குருந்தின் நீழல்வாய் உண்ட - திருப்பெருந்துறையிலே செழித்த மலர்கள் செறிந்த குருந்தமர நீழலிற் பருகிய, நிகர் இல் ஆனந்தம் தேன் தேக்கு எறியும்-ஒப்பி கந்த சிவானந்தத்தேன் உவட்டெடுக்கும், செய்ய மாணிக்கவாசகன் - ஞானவொழுக் கச் சிறப்பையுடைய மாணிக்கவாசக வள் ளலார், புகன்ற மதுரம் வாசகம் - அருளிச் செய்த இனிய திருவாசகம், யாவரும் ஓதும் இயற்கைத்து ஆதலின் - எவரும் ஓதும் இயல்புடையதாகலான், பொன் கலம் நிகர்க்கும் - பொற்பாத்திரத்தைப் போலும்; பூசுரர் நால்மறை-அவனிக்குரிய தேவராகிய அந்தணரோதும் நான்கு வேதங்களும் - மண்கலம் நிகர்க்கும் - மட் பாத்திரங்களைமானும். (அஃதன்றி;)— மதுரம் வாசகம் ஓதின் உறுபயன் முத் தியே - இனிய திருவாசகத்தை யோதின் அதனுலெய்தும் பயன் முத்தியே, வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே - அவ்வேதங் களை யோதின் அவற்ருலெய்தும் உண் மைப்பயன் விண்ணுலகாதி பதங்களே. எ - று.

உண்ட சிவானந்தத்தேன் உவட் டெடுப்ப, அதனை இடையறவின்றி அருந்தா நிற்றலிற், றிருமேனியேயன்றித் திருவாசகமும், அத்தேன்மயமாகி, எவர்க் கும் சிவானந்தம் பயப்பதென்பார், 'நிகரி லானந்தத் தேன்றேக்கெறியு மதுரவாச கம்' என்றும், இது இன்னவருணத்தா ருக்கு உரித்தென்பதின்றி, அந்தணர் முத லிய பலதிறத்தராயுள்ள சைவசமயிகள் பலர்க்கும், பயன்படுவதென்பார், 'யாவரு மோதுமியற்கைத்து' என்றும், பலரும் பரி சிக்கினும் அழிக்கப்படாது, உயர்வுற்ற தென்பார், 'பொற்கல நிகர்க்கும்' என்றும், வேதநான்கும், வைதிகநெறியை மேற் கொண்ட அந்தணர் முதலிய மூவர்க்கும் உரியவென மொழியப்படினும், மற்றை யிருவர்க்கும், ஓதுதற்கன்றி ஓதுவித்தற்கு உரிமைநுவலாமையானும், அவ்வோதுத ருனும், இக்காலத்தின்மையானும், அந் தணரொருவர்க்கே உரித்தாயவென்பார் 'பூசுரர் நான்மறை' என்றும், இவற்றுட் சில கூறு, ஏனையராற் கேட்கவும் படாத வென அந்தணரான் மறைக்கப்படுதலின், உற்றனுகற்கும் உரிமையுருதவென்பார்; 'மறைமட்கல நிகர்க்கும்' என்றும், பலர்க் கும் ஓதற்குரித்தாயதன்றி, உயர்கதியையு நல்குவதென்பார், 'மதுரவாசகமோதின் முத்தியே' என்றும், முத்தி பயத்தல் முது மறைகட்கின்றென்பார், 'வேதமோதின றமே' என்றும், இது திருவாசகத்தை யுயர்த்திய துதிபரமன்று உண்மையே யென்பார், 'மெய்ப்பயன்' என்றும் விதந்தாரென்க.

அற்றேல் [1]"வேதத்தை விட்ட வற மில்லை வேதத்தி-ஞேதத்தகுமற மெல்லா முளதர்க்க - வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற - வேதத்தை யோதியே வீடு பெற்றுர்களே" என ஆசிரியர் திருமூல நாயனுர் அருளியிருக்க; வேதமோதினறமே யென்பது மிகுமுரணன்றேவெனின், அறி யாது கூறினுய்: வேதங்களையோதின் விண் ணுலகாதி பதங்களும், வேதமுடிவாகும் உபநிஷத்துக்களை யோதின் விழுமிய முத் தியும், சித்திக்குமென்பது நூற்றுணிபாக வும், ஒற்றுமைப்படுத்துத் தொகுத்தோதி ஞரேனும், அவ்வேத முடிவு பூர்வபக்க மென்னு முதலைகளும் சித்தாந்தமென்னு மீன்களும் செறியப்பெற்றதொரு சமுத் திரமாகலின், அதின்முற்று மழுந்தி, மெய்ப்பொருளோர்ந்து, பரிபாகமுற்றுச் சிவானுபவம்பெருது, சிலகற்ற துணை யானே, அப்பூர்வ பக்க சித்தாந்த வாதத் தைப் பூண்டொழுகின், முத்திசித்தியா தென்பதனை அதில் உள்ளுறையாக்கி உணர்த்தியருளினுராக; இவ்வாசிரியர், அவ்வுள்ளுறை தெள்ளிதின் விளங்க, 'வேதமோதின் மெய்ப்பயனறமே' என வும், அத்தருக்க வாதத்தைத் தவிர்ந்துள்ள உபநிஷத்துக்களின் சாரமே திருவாசக மாகலின், இதனையோதின் முத்தி சித்தித் தல் ஒருதலையாதல் பற்றி 'மதுரவாசக மோதின் முத்தியுறுபயன்' எனவும், வேற் றுமைப்படுத்து வகுத்து, விதந்தாராகலின் முரணன்மையறிக. [2]"ஆணவ மம்மர் கழீ

1. திருமந்திரம் வேதச் சிறப்பு.
2. சேதுபுராணம் சடாதீர்த்த சருக்கம்.

இநுக ரனுபவ மடைகில்லார் - வீணினி லுச்சி வெடிக்க வரற்றுவர் வேதாந்தஞ் - சேணுறு பூருவ பக்க விடங்கர்கள் சித் தாந்த - மாணுறு மீன மிடைந்துள வேலை யம் மறையங் தம்'' என்றதூஉம் அச்சிவா னுபவம் பெறுதாரைச் சுட்டி இகழ்ந்த மையேபோலும்.

உற்சர்ப்பிணியாகலான், அக்காலத் தோர்க்கு, வேதமுற்றும் உணர்ந்து தெளி தற்கேற்ற ஆயுணீட்சியும், உணர்வுவலி யும், இருந்தன. அவசர்ப்பிணியாகலான், இக்காலத்தோர்க்கு, அவையின்மையின், எவரும் ஓர்ந்து எளிதிற் கதிபெறுமாறு, அத்தருக்கவாதத்தை யொழித்து, முத்தி பெறற்குரிய உபநிஷத்துக்களின் சாரமே திருவாசகமாக மொழிந்து வைத்தருளினு ரென்பது. இஃதுணர்த்தற்கன்றே, உய்ய வந்த தேவநாயனாரும், [1]''பாய்பரியோன் றந்தப் பரமானந்தப்பரனைத் - தூயதிரு வாய்மலராற் சொற் செய்து, மாயக் - கரு வாதை யாமறியா வாறுசெய்தான் - கண் டாய்-திருவாதவூராளுந்தேன்'' என்றருளி யதூஉம் என்க. சொற் செய்தல் - சொற் களானுணரப்படாத அக்கடவுளை அவற்று னுணரப்படுபவராக்கல். உற்சர்ப்பிணியா வது - உலகம், வாழ்நாள் போகமுதலிய வற்றான் வளர்பிறைபோலப் பெருகுங் காலம். அவசர்ப்பிணியாவது - அஃது, அவற்றாற் றேய்பிறைபோலச் சுருங்குங் காலம்.

திரு ஆர்ந்த பெருந்துறை-திருப்பெருந் துறை. வாய் ஏழனுருபு. செம்மை-ஞான வொழுக்கச் சிறப்புடைமை. வேத நான் கும், உதாத்தம் அநுதாத்தம் சுவரிதமென் னும் சுரங்களின் வழுவாமல் ஓதவேண்டு மென்னும் நியதியவாகலின். அவற்றை ஏட்டினெழுதி வைப்பின் வலியில்லாரும் ஓதுதலான் அவற்றின் சொற்செறிவின் றிட்பம் குறையுமென ஏட்டினெழுதாது, வாய்ப்பாடமாகப் போற்றிவருதலின், அச் சுரங்களில்வல்ல பூசுரரே அவற்றிற்கு அதி காரிகளாயினர்; இதற்கு அங்கியதியின்மை யான், வல்லுநரும் வல்லாருமாகிய சைவ சமயிகள் பலரும் ஏட்டிலெழுதி ஓதுகின்று ராகலின், அவரனைவரும் அதிகாரிகளே யென்பது தோன்ற, யாவருமென்றார்.

1. திருக்களிற்றுப்படியார்-எகூ.

மறையென்பது இரகசியப்பொருளுடை மையிற் போந்த பெயரேயாயினும், ஈண்டு மறைக்கப்படுவதென்னும் பொருட்குறிப் பின்மேற்று. அறமென்பது அறப்பயனை. அறமேயென்னும் தேற்றேகாரம் முத்தி யென்புழியுங் கூட்டப்பட்டது. உறுமெய்ப் பயனென ஈரிடத்தும் பிரித்தும் கூட்டியும் முடித்தலும் ஒன்று. திருவாசகத்தேன் சிவானந்தம் பயத்தலை மேலேவிதந்தாம். கடைப்பிடிக்க.

ஆனந்தத்தேன் தேக்கெறிதலை [1]''குறி குணங்கள் கடந்த தனிக்கூத்தனுரு வெழுத்தைந்தின் கொடுவா ளோச்சிப் - பொறிகரணக்காடெறிந்து வீசிமனப்புலந் திருத்திப் புனிதஞ் செய்து - நிறைசிவமாம் விதைவிதைத்துப் பசுபோதங் களைந்தரு ணன் னீர்கால் பாய-வறிவுருவாய் விளைந்த தனிப் பரானந்த வமுதருந்தா தருந்தி நின் றார்'' என்பதனானும், வேதமோதின் அறமே யென்பதனை [2]''சுருதிவழி யொழு கினர்கள் சுவர்க்கத்தார்'' என்பதனானும், ஏட்டிலெழுதாமையை [3]''ஆற்ற லழியு மென் றந்தணர்கண்ணுன்மறையைப்-போற்றி யுரைத் தேட்டின் புறத்தெழுதார்'' என் பதனானும் அறிக. (கூஉ)

''அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டூர்ந்தா னிடையே-மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து.

(இ - ள்.) சம்பந்தன் சிவிகை பரித் தார் - சம்பந்தப்பெருமானது சிவிகைதாங் கப்பெற்றவர், உந்தும் சிவிகையினை ஊர்ந்து திரிகுவர்-செலுத்துஞ் சிவிகையை நடாத்தி (இப்பொழுதும் சிறந்த தேவ ராய்த்) திரிகின்றாராகலான், அறத்து ஆறு இது என வேண்டா - அறத்தின்பயன் இதுவென்று யாம் ஆகமவளவையான் உணர்த்தல் வேண்டுவதில்லை; சிவிகை பொறுத்தானேடு ஊர்ந்தான் இடையை மறுத்தார் - சிவிகையைக் காவுவானேடு செலுத்துவானிடைக் காட்சியளவை தன் னுனே உணரப்படும், என்னும் பொரு ளமைந்த திருக்குறளை மறுத்தவராயினர். எ - று.

1. திருவிளையாடல் மண்சுமந்த படலம் - கூ௰.
2. கோயிற்புராணம் இரணியவன்மச் சருக் கம் - ௯.
3. திருவள்ளுவமாலை - க௯.

பரித்தார் திரிகுவராகலான் மறுத்தாரென இயையும். ஆகலானென்பது சொல்லெச்சம். எனவென்னுமெச்சத்தாற் சொல்லாகிய ஆகமவளவையும், பொறுத்தானை யூர்ந்தானிடை யென்றதனாற் காட்சியளவையும், உணரப்படுமென்னும் சொல்லெச்சமும், திருக்குறளில் உய்த்துணரக்கிடப்பதுணர்க. இடையென்னுந் திருக்குறளை யெனற்பாலது இசையெச்சமாய் இடையையெனக் குறைந்து நின்றது. மற்று வினைமாற்று. சம்பந்தன் சிவிகைப் பரித்தார் இம்மையின்பெய்திய பின்னர், அம்மையிற் சிறந்த தேவராகி, இன்னவிடத்திற் செல்கவென்ற துணையானை ஆண்டுச்சேரற்குரிய தேவயான மூர்வரென்பார், தாங்குஞ்சிவிகை யென்னாது உந்துஞ்சிவிகை யென்றார். அற்றேல், இந்திரன் சிவிகை அகத்திய மாமுனிவர் முதலிய முனிவரெழுவரால் ஏந்தப்படுவதென்ப தென்னையெனின், இந்திரனென்னும் பெருமை அவனுக்குள்ளதாக அவரால் ஓர்கால் ஏந்தப்படுவதன்றி எப்பொழுதும் ஏந்தப்படுவ ததற்கியல்பன்றென்க.

திரிகின்றாரென்னாது திரிகுவரென்றார்; விழாவில் இப்பொழுது பரித்தாரும் விண்ணுலகடைவரென்ப தறிவித்தற்கு. திரிகுவரென்பதற்கு, சின்னாள் நுகர்ந்த பின் அத்தேவ வின்பத்தினும் வெறுப்புறுவரெனப் பொருள்கொண்டு, வெறுப்புறுவரேல், மேலெங்ஙன மெய்துவரென்னுங்கடாவை ஆசங்கித்து, சிவிகை பரித்தலாகிய வழிபாடுடையார், சிவலோகமெய்துவது திண்ணமாகலின், இம்மை மறுமை வீடென்னும் மூன்றனுள், எய்தாதெஞ்சி நிற்கும் அவ்வீட்டை, எய்தா நிற்பரென்றிசைத்தலும் ஒன்று. அறமுடையார் சிவிகையை யூர்தலும், அஃதிலார் அதனைப் பரித்தலும், விழுமிய வேதநூற்றுணிபும், அநுபவமாயினும், சம்பந்தன் சிவிகை பரித்தல், அறமில்வழிக் கிட்டாதாகலின், அஃதுடைமையிற் பரித்தார், அம்முப் பயனுமெய்துதலின், அந்நியதியைக் கடந்தவராயினாரென்பார், மறுத்தாரென வகுத்தார். உவகை மேலீட்டால் வாகீசமூர்த்தியும் ஓர்காற் பொறுத்த அச்சிவிகை பொறுக்கப்பெறுவது எவர்க்கும் எளிதன்றென்பது கருத்து.

இந்திரனென்னும் பெருமை அவனுக்குளதாதற்கே பரித்தலை [1]"மாதவ ரெழுவர் தாங்க மாமணிச் சிவிகைமீது-போதரினவனே வானோர் புரந்தரன்" என்பதனானும், சிறந்த தேவராதலை [2]"மேனாட்டமரர் தொழவிருப்பாரும் வினைப்பயன்க-டானாட்டருநர கிற்றளர் வாருந்தமிழ்நர் தங்கள் - கோனாட் டருகர் குழாம்வென்ற கொச்சையர் கோன்கமலப் - பூநாட்டடி பணிந் தாருமல்லாத புலையருமே" என்பதனானும், சிவபதமெய்துவது திண்ணமாதலை [3]"பெறுவது நிச்சய மஞ்சனெஞ்சேபிர மாபுரத்து மறுவறு பொற்கழன் ஞான சம்பந்தனை வாழ்த்துதலான்-மிறையறு வான்மறி யுண்டந்தோள்வல் விடையெடுத்த - பொறியுறு பொற்கொடி யெம்பெருமானமர் பொன்னுலகே" என்பதனானும் அறிக. (௩௩)

ஊர்ந்து வருமிள வேறுடை யான்ற னுளத்தருளாற்
சார்ந்து சமண்விட் டுறுமுனக் கேவருஞ் சைவநலங்
கூர்ந்து மிளிர்தரு நாவர சேநல் குரவுமுனஞ்
சேர்ந்து மருவினர்க் கேசிறந் தோங்குறுஞ் செல்வ
[முமே.

(இ - ள்.) நாவரசே-வாகீசப்பெருந்தகையே, இள ஏறு ஊர்ந்து வரும் உடையான்றன்-இளமைவாய்ந்த இடபவாகனத்தைச் செலுத்திவரும் இறைவருடைய உளத்து அருளால் சமண்சார்ந்து - திருவுளக் குறிப்போடு கூடிய திருவருளானே சமண்சமயத்தையடைந்து, அருளால் விட்டுஉறும் உனக்கே-அத்திருவருளானே அதனை நீக்கிச் சைவசமயத்தைச் சார்ந்த தேவரீருக்கே, வரும் சைவம் நலம் கூர்ந்து மிளிர்தரும் - சின்னாள் நீங்கிப் பின்னர்ச் சேர்ந்த அச்சைவத்தின் சிறப்புச் சிறந்து விளங்கும்; நல்குரவு முனம்சேர்ந்து மருவினர்க்கே - தரித்திரத்தை முன்னர்ச்சார்ந்து பின்னர்ச் செல்வமெய்தப் பெற்றவர்க்கே, செல்வமும் சிறந்து ஓங்குறும் - அச்செல்வமும் அருமையுடைத்தாய் விளங்கும். எ - று.

---

1. திருவிளையாடல் இந்திரன் பழிதீர்த்த படலம் - ௬௩.
2. திருஞானசம்பந்தர் திருவந்தாதி-௩௬,
3. ஷை - ௬௨,

அமண் அடைவித்தமை அருளாமை போலினும், உய்த்துணரின் அருளேயா மென்பார், 'அருளாற் சார்ந்து சமண் விட்டு' என்றும், இயற்கையே சைவசமயத்தராயிருந்து அருள் காரணமாகச்சமண் சார்ந்து மீண்ட இவர்க்கு ஒருவாறிணை கூறியது, இயற்கைச் செல்வராயிருந்து, வினைகாரணமாக அதனையிழந்து, பின்னரெய்தப் பெற்றவரையே யென்பார், 'நல்குரவு சேர்ந்து மருவினர்' என்றும், இயற்கைச் செல்வர்க்கும், அஃதில் வழிப்படும் சிறுமையும் அஃதுள் வழிப்படும் பெருமையும், விளங்குமாயினும், சிறந்து விளங்கா; இழந்து பெற்றார்க்கே விளங்கும்; அதுபோல, சைவசமய மெய்தா வழிப்பெறும் சிறுமையும், எய்திய வழிப்பெறும் பெருமையும், ஏனையாசிரியரினும், இவர்க்கு மிகவிளங்குமென்பார், 'உனக்கே கூர்ந்து மிளிர்தரும்' என்றும் கூறினர்.

அற்றேல், [1]"நம்பரருளாமையினாற் சமண்சமயங் குறுகினர்" எனவும், [2]"ஈசரருள் கூடுதலால் திலகவதியாரிருந்த திருமடத்தைச் சென்றணைந்தார்" எனவும், தொண்டர் சீர்பரவுவார் சொற்றதென்னை யெனின், இவர்க்கு அருளாமையினாலென்றது, 'நல்லாறு தெரிந்துணர அருளாமையினால்' என விதத்தலின், அவ்வமணை யழிப்பிக்கும் திருவுளக்குறிப்பால் அதிற் பிரவேசிப்பித்தற் பொருட்டு நல்லாறு தெரியாவகை திரோபவித்தனரென்றதன்றி, அருளிலராயினரென்றதன்றென்க. உளத்தருள் - உளத்தோடுகூடிய அருள். ஈண்டு உளமென்பது (அவ்வமணை யழிப்பிக்கும்) உளக்குறிப்பின்மேற்று. அருளாற் சார்ந்து அருளால் விட்டெனத் தனித்தனிக் கூட்டுக. சமணென்பது தாப்பிசையாய் நின்றது. சமண்-சமணர் குழாம். உனக்கே மருவினர்க்கே என்னும் ஏகாரங்கள் தேற்றம். [3]"தருசொல் வருசொல்லாயிரு கிளவியுந்-தன்மை முன்னிலையாயிரிடத்த" என்னும் சூத்திரத்திற்கு மாறுகப் படர்க்கையிடத்திற்கு வந்தமையின் வரு இரண்டும் இடவழுவமைதி. [1]"சரித்தார்க்குச் சைவசமய நெறியி-னுரித்தாங்கு புத்திமுத்தியும்" என்பது சிவாகம நூற்றுணிபாகலின், ஈண்டு நலமென்றது சார்ந்தாரை அவ்விருபேற்றிற்கும் உரியராகப் புரக்குந் தகைமையை யென்க. முனமென்பது காலத்தின் பழமை சுட்டாது பிற்பெறுஞ் செல்வத்திற்கு முற்படுங்காலத்தைச் சுட்டி நின்றது. சிறந்தோங்குறு மது போலக் கூர்ந்து மிளிர்தருமென இயையும். நல்குரவு சார்தற்கும் செல்வமெய்தற்கும் வினை ஏதுவாதல் [2]"கூத்தாட்டவைக் குழாத் தற்றே பெருஞ்செல்வம்-போக்கு மதுவிளிந்தற்று" என்னும் சுருதியாற் பெற்றாம். வறுமை மல்கிச் செல்வமெய்தியார் அதனருமையறிந்து போற்றலின் அவர் மாட்டே அது சிறத்தல்போன்று தேவரீர் மாட்டே அச்சைவத்தின்பொலிவு அரிது சிறக்கும் என்னலும் ஒன்று. இப்பொருட்கண் நான்கனுருபிரண்டையும் ஏழனுருபாக்குக.

சைவநலங் கூர்ந்து மிளிர்ந்தமையை [3]"பொய்வாய்மை பெருக்கிய புன்சமயப் பொறையில் சமணீசர் புறத்துறையா-மவ்வாழ்குழியின் கண் விழுந்தெழுமா றறியாது மயங்கியவம் புரிவேன் — மைவாச நறுங் குழன் மாமலையாண் மணவாளன் மலர்க்கழல் வந்தடையு-மிவ்வாழ்வுபெறத் தரு சூலையினுக் கெதிர்செய் குறையென் கொலெனத் தொழுதார். இத்தன்மை நிகழ்ந்துழி நாவின்மொழிக் கிறையாகிய வன் பருமிந் நெடுநாட் - சித்தந்திகழ் தீவினையே னடையுந் திருவோவிதுவென்று தெருண்டறியா - வத்தன்மையனாய விராவணனுக் கருளுங் கருணைத் திறமானவதன்-மெய்த்தன்மை யறிந்து துதிப்பதுவே மேல்கொண்டு வணங்கினர் மெய்யுறவே" என்பதனானும், இங்ஙனம் அதனருமையறிந்து போற்றலின் அப்பொலிவு சிறந்தமையை [4]"மையற்றுறையேறி மகிழ்ந்தலர்சீர் வாகீசர் மனத்தொடு வாய்மையுடன்-மெய்யுற்ற திருப்பணிசெய்பவராய்விரவுஞ் சிவசின்னம் விளங்கிடவே (தொடரும்)

1. பெரியபுராணத்தில் வாகீசமூர்த்தி புராணம் - சுஎ.
2. ஷை இசு.
3. தொல்காப்பியம் கிளவியாக்கம்,

1. சைவசமயநெறி பொதுவிலக்கணம்-உ0௩.
2. திருக்குறள்-௩௩௨.
3. ஷை புராணம் எ௩-எ௫,
4. ஷை - எஎ,



உண்ணுமுலையம்மையார் சந்நிதி

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

திருவம்மானை

செங்கண் நெடுமாலும் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.

[அம்மனையாடும் அம்மையே! திருமாலும் (வராகமாய் மண்ணைத்) தோண்டியும் காணமுடியாத தாமரை போன்ற திருவடிகளோடு நிலவுலகத்துக்கு வந்தருளி, நம்முடைய பிறப்பைத் தொலைத்து எம்போலியரையும் அடிமையாகக் கொண்டு, வலிய அழைத்து வீடு அருளும், தென்னைமரங்கள் நிறைந்த திருப்பெருந்துறை யுடையானுகியும், அழகிய திருநோக்கினனுகியும், சிறந்த பேரருளாளனுகியும் இருப்பவனது திருவடிகளைப் பாடுவோமாக.]

அடியவர் திருநட்சத்திரங்கள்

பிலவ—கார்த்திகை

சைவம்	வைணவம்
7உ—கணம்புல்ல நாயனுர்	7உ—திருமங்கையாழ்வார்
17உ—மெய்ப்பொருள் நாயனுர்	8உ—திருப்பாணுழ்வார்
18உ—ஆனய நாயனுர்	
24உ—மூர்க்க நாயனுர்	
25உ—சிறப்புலி நாயனுர்	



திருவண்ணாமலை—வல்லாள மகாராஜன் கோபுரம்



திருவண்ணாமலை—சிவகங்கைதீர்த்தம்

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-34.
Printed at Paari Achakam, 127, Broadway, Madras-1.